தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:197 | 01-02-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | சென்னை • மதுரை • கோவை • திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

01.02.2025 தை 18
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.36

திதி:
இன்று அதிகாலை 4.40 வரை சதுர்த்தசி பின்பு பௌர்ணமி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 1.53 வரை புனர்பூசம் பின்பு பூசம்.

யோகம் :
இன்று காலை 11.04 வரை ப்ரீதி பின்பு ஆயுஷ்மான்.

கரணம் :
இன்று அதிகாலை 4.40 வரை வணிசை பின்பு மாலை 4.41 வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 1.53 வரை கேட்டை பின்பு மூலம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30.
இராகு காலம்
மாலை 4.30 – 6.00.
எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் : 3.00 – 4.30.

இன்று தைப்பூசம் நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# கிராமப்புற மக்களை மொத்தமாக கை கழுவி விடுகிறது

## முதல்வர் ஸ்டாலின் கடும் தாக்கு



**சிவகங்கை, பிப்.1:**
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில், 2,559 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலான 49 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 13 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 28 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் 15,453 பயனாளிகளுக்கு 205 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:

இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒன்றிய அரசின் பொருளாதார அறிக்கை வெளியாகி இருக்கிறது. ஒன்றிய அரசின் பட்ஜெட்டுக்கு முன்பாக இந்த அறிக்கை வந்திருக்கிறது. அதிலும், தமிழ்நாட்டை மனம் திறந்து பாராட்டி இருக்கிறார்கள். புதிதாக தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் நடவடிக்கையை தமிழ்நாடு அரசு மேம்படுத்தி இருப்பதாக ஒன்றிய அரசு பாராட்டி இருக்கிறது. உற்பத்தித் துறை வேலை வாய்ப்பில், தமிழ்நாடு முதலிடம் என்று ஒன்றிய அரசின் பொருளாதார அறிக்கை பாராட்டுகிறது.

### தமிழ்நாட்டைப் பாராட்டும் ஒன்றிய அரசு

“பெண்களுக்கான வேலை வாய்ப்பைப் பெருக்கும் திட்டங்களை தமிழ்நாடு தீட்டியிருக்கிறது, இது மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி” என்று பெருமையாக சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கையை பிரதமரும், ஆளுநரும் படிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

படிக்காமல் எந்த நிகழ்ச்சிக்கும் போய்விட வேண்டாம். நீங்கள் வழங்குகின்ற அறிக்கை தான். உங்கள் ஒன்றிய அரசு தந்திருக்கக்கூடிய அறிக்கை. “தமிழ்நாட்டிற்கான தொழில் முதலீடுகள் வேறு மாநிலத்திற்கு சென்றுவிட்டது” என்று கவர்னர் குற்றம் சாட்டி வருகின்ற நிலையில்தான் ஒன்றிய அரசின் அறிக்கை, தமிழ்நாட்டை இன்றைக்கு பாராட்டியிருக்கிறது.

சிவகங்கை கிராமங்கள் நிறைந்த மாவட்டம்! உங்களிடம் ஒரு முக்கியமான விசயத்தைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வந்த மகாத்மா காந்தி பெயரிலான 100 நாள் வேலை திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு காலி செய்துவிட்டு வேறு பெயரில் புது திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நீங்கள் எல்லோருமே கேள்விப் பட்டிருப்பீர்கள். அவர்களுக்கு மகாத்மா காந்தியையும் பிடிக்காது! மக்கள் நன்றாக இருந்தாலும் பிடிக்காது! அதனால்தான் இப்படி செய்கிறார்கள்.

### சிதம்பரம் எழுப்பிய கேள்வி

இதை எதிர்த்து தி.மு.க. சார்பில், காங்கிரஸ் கட்சியின் சார்பில், ஏன் பல்வேறு கட்சிகளின் சார்பில், தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி யிருக்கிறோம். நாடாளுமன்றத்தில் நம்முடைய கூட்டணி எம்.பி.க்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். இப்போது கொண்டு வந்திருக்கின்ற புதிய திட்டத்தைப் பற்றி, குடியரசுத் தலைவர் உரையை முன்வைத்து, முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் சில முக்கியமான கேள்விகளை எழுப்பியிருந்தார். குடியரசுத் தலைவர் உரை என்றால், அது ஆளும் பா.ஜ.க. அரசின் உரைதான்! அவர்களை நோக்கித்தான் இந்த கேள்விகள். “ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்ற 100 நாள் திட்டத்திலேயே 50 நாள் கூட ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒழுங்காக வேலை வழங்குவது இல்லை. ஏனென்றால், அதற்கான நிதியை ஒழுங்காக விடுவிப்பது இல்லை. இந்த நிலையில், 50 நாள் எப்படி மேஜிக் போன்று 125 நாட்களாக உயரும்? ஒன்றிய அரசு இந்தத் திட்டத்திற்கு இரண்டரை மடங்கு கூடுதல் நிதியை அளிக்க தயாராக இருக்கிறார்களா? 125 நாள் அப்படி என்று ஒன்றிய பா.ஜ.க அரசு சொல்வதற்கு எந்த கேரண்டியும் கொடுக்கவில்லை! அது வெறும் மாயைதான்.

சொல்வதுதான் சொல்கிறீர்கள். அதை எதற்கு வெறும் 125 நாளோடு நிறுத்திவிட்டீர்கள்? 125 நாளுக்கு பதிலாக 365 நாளும் வேலை என்று கூட புருடா விடலாமே!” என்று அவருக்கே உரிய நகைச்சுவை உணர்வுடன் ஆழமான கேள்விகளை எழுப்பியிருக்கிறார்.

### தமிழ் மக்கள் மீது பெரிய தாக்குதல்

100 நாள் வேலை திட்டம் என்று சொல்லுகின்ற மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தில், தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு வரை நாம் கணக்கிட்டுப் பார்த்தால், 65 லட்சம் குடும்பங்கள் பயனடைந்திருக்கிறார்கள். ஆண்டுக்கு 10 ஆயிரம் கோடியிலிருந்து 12 ஆயிரம் கோடி ரூபாய் வரை கிராமப்புற மக்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற புதிய திட்டத்தில் இதில் பாதி வருவதே சந்தேகம்தான். வேலை நாட்களையும் நாம் முடிவு செய்ய முடியாது. மேலே இருந்து அவர்கள் தான் முடிவு செய்வார்களாம். போதாக்குறைக்கு, இனி மாநிலங்கள் 40 விழுக்காடு நிதியை வழங்க வேண்டும் என்று வேறு புது திட்டத்தில் நம் மீது பெரிய தாக்குதலை தொடுத்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிற்காக குரல் கொடுக்க முடியாத பத்துத் தோல்வி பழனிசாமி, நம்முடைய அரசு இப்போது செய்து கொண்டிருக்கின்ற திட்டங்களை காப்பி அடித்தே புதிய வாக்குறுதிகள் என்று அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார். அவர் ஆட்சிக்கு வரப் போவதில்லை! அது வேறு விசயம். அப்புறம் ஏன் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை. ஏற்கனவே அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொன்ன எந்த வாக்குறுதியையும் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் அவர் நிறைவேற்றவில்லை.

அதிமுக ஆட்சியோ, பழனிசாமி அவர்களோ எப்போதுமே சொன்னதை செய்ய மாட்டார்கள் என்று மக்களுக்கு நன்றாக தெரியும். ஆனால், தி.மு.க. சொன்னதைச் செய்யும், செய்வதைத் தான் சொல்லும் என்று மக்களுக்குத் தெரியும்.

மக்கள் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி! தமிழ்நாட்டின் வளர்ச்சியே என் மகிழ்ச்சி! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

# இன்று தாக்கலாகும் மத்திய பட்ஜெட்

## 9-வது முறையாக தாக்கல் செய்கிறார் நிர்மலா சீதாராமன்



**புதுடில்லி, பிப்.1:**
நாடாளுமன்ற கூட்டத் தொடர் கடந்த 28-ந் தேதி தொடங்கிய நிலையில், நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணிக்கு 202627-ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்ய உள்ளார். கடந்த சில ஆண்டுகளாக மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1-ந் தேதி தாக்கல் செய்யப்படுகிறது. பொதுவாக விடுமுறை நாட்களில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதில்லை என்றாலும், இம்முறை 27 ஆண்டுகளுக்கு பின்னர் பிப்ரவரி 1-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. சுதந்திரத்துக்குப் பிறகு, பிப்ரவரி மாதத்தின் கடைசி நாளில் மாலை 5 மணிக்கு மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவது வழக்கமாக இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் மாலை 5 மணி என்பது லண்டனில் பகல் நேரமாக இருந்ததால், அவர்களது வசதிக்காக அந்த நேரத்தை கடைபிடித்தனர்.

இன்று மத்திய பட்ஜெட் - தொடர்ந்து 9-வது முறையாக தாக்கல் செய்கிறார் நிர்மலா சீதாராமன்

மறைந்த முன்னாள் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி இந்த மாற்றத்தை அறிமுகப்படுத்தினார். அப்போதிலிருந்து பிப்ரவரி 1-ந் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை அரசு அலுவலகங்கள் மற்றும் பங்குச் சந்தைகள் மூடப்பட்டிருக்கும். ஆனால், பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளதால், நாளை சிறப்பு வர்த்தக நாளாக தேசிய பங்குச் சந்தை (என்.எஸ்.இ.) மற்றும் மும்பை பங்குச் சந்தை (பி.எஸ்.இ.) அறிவித்துள்ளன.

இந்த சலுகையால் ரெயில்வேக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.1,600 கோடி முதல் ரூ.2,000 கோடி வரை செலவானது. ஆனால், 2020-ல் ஏற்பட்ட கொரோனா பரவல் காரணமாக ரெயில் சேவைகள் முடக்கப்பட்டபோது, நிதி நெருக்கடியை சமாளிக்க இந்த சலுகை நிறுத்தப்பட்டது. கடந்த 6 ஆண்டுகளாக அந்த சலுகை மீண்டும் வழங்கப்படவில்லை. பல்வேறு காலகட்டங்களில் இந்த சலுகை மீண்டும் கிடைக்குமா என்று மூத்த குடிமக்கள் எதிர்பார்த்து காத்திருந்த நிலையில், நாளை தாக்கல் செய்யப்பட உள்ள மத்திய பட்ஜெட்டில் இதற்கான முக்கிய அறிவிப்புகள் வரலாம் என டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சட்டப்பேரவை தேர்தல்கள் நடைபெற உள்ள தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா, அசாம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

# சமயபுரம் பாதயாத்திரை சென்ற பெண் பக்தர்கள் மீது கார் மோதியது: 4 பேர் பலி

**பெரம்பலூர், பிப்.1:**
கடலூர் மாவட்டம், பெண்ணாடம் அருகேயுள்ள தோழார் குடிக்காடு கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் மனைவி மலர்கொடி (35), சுப்ரமணி மனைவி விஜயலட்சுமி (40), திருநாவுக்கரசு மனைவி சசிகலா (47), பரமசிவம் மனைவி ஜோதிலட்சுமி (57), சேலம் மாவட்டம் கெங்கவல்லி கிராமத்தைச் சேர்ந்த மருதமுத்து மனைவி சித்ரா (40) ஆகிய 5 பேரும் சமயபுரம் கோயிலுக்கு மாலை அணிந்துகொண்டு, வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக தோழார் குடிக்காட்டிலிருந்து சமயபுரம் கோயிலுக்கு பாதயாத்திரை சென்றனர்.

இந்நிலையில், திருச்சி- சென்னை தேசிய நெடுஞ்சாலையில், அப்போது சென்னையிலிருந்து திருச்சி நோக்கிச் சென்ற கார் ஒன்று, பாதயாத்திரை சென்ற பக்தர்கள் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில், பலத்த காயமடைந்த மலர்கொடி, விஜயலட்சுமி, சசிகலா சித்ரா ஆகிய 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவ்விபத்து குறித்து பெரம்பலூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து கார் ஓட்டுநரான சென்னை திரிசூலம் ஈஸ்வரன் கோயில் பகுதியைச் சேர்ந்த சுரேஷ் மகன் கௌதம் (24) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மகாராஷ்டிர துணை முதல்வராக சுநேத்ரா பவார் பதவியேற்பு

**மும்பை, பிப்.1:**
மகாராஷ்டிர மாநில முதல் பெண் துணை முதல்வராக விமான விபத்தில் பலியான அஜீத் பவாரின் மனைவி சுநேத்ரா பவார் பதவியேற்றார்.

மும்பையில் உள்ள லோக் பவனில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் சுநேத்ரா பவார் துணை முதல்வராக பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு மகாராஷ்டிர ஆளுநர் ஆச்சார்யா தேவவிரத் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

பதவியேற்பு விழாவில் முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாநிலங்களவை எம்பியான சுநேத்ராவுக்கு துணை முதல்வர் பதவி வழங்க முதல்வர் ஃபட்னாவிஸ் உள்ளிட்டோர் ஆதரவு தெரிவித்தனர்.

இதையடுத்து தேசியவாத காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கூட்டத்தில் சட்டமன்ற கட்சித் தலைவராக சுநேத்ரா பவார்



இன்றுதேர்ந்தெடுக்கப்பட்டார். சுநேத்ரா வகித்து வரும் மாநிலங்களவை எம்.பி. பதவி அஜீத் பவாரின் மூத்த மகன் பார்த் பவாருக்கு வழங்க வாய்ப்புள்ளது.

மகாராஷ்டிர துணை முதல்வராக இருந்த அஜீத் பவார் ஜன.28ஆம் தேதி பாராமதியில் நேரிட்ட விமான விபத்தில் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிப்ரவரி 17ல் இறுதி வாக்காளர் பட்டியல் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பு

**சென்னை, பிப்.1:**



தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க கடந்த மாதம் 30-ந்தேதி வரை அவகாசம் நிறைவடையும் நிலையில், மேலும் 10 நாட்கள் அவகாசம் வழங்கி சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. திமுக தொடர்ந்த வழக்கில், தமிழ்நாட்டில் விடுபட்ட வாக்காளர்களை சேர்க்க மேலும் 10 நாட்கள் அவகாசம் வழங்கி சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது.

இந்த நிலையில், பிப்ரவரி 17 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாகும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இணையவழியில் 10.82 இணையவழியாக 24.47 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதகவும் அர்ச்சனா பட்நாயக் அறிவித்துள்ளார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
Public Notice | Loss of Share
Legal Notice | Merger
Tender Notice | Acquisition
Society Notice | AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009 Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-517

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்**



இந்தச் செயலை இக்கருவியால் இன்னவன் செய்துமுடிப்பான் என்று ஆராய்ந்த பிறகே அத் தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



பணத்தால் வாங்கக்கூடிய விசயங்களுக்கு மட்டும் பணத்தை செலவிடுங்கள்...

பணத்தால் வாங்க முடியாத விஷயங்களுக்கு நேரத்தை செலவிடுங்கள்

**உஷா முத்துராமன்**

## காவடி தூக்கி பாதயாத்திரை சென்ற பக்தர்கள்



பழனிக்கு தைப்பூச திருவிழாவுக்காக காவடி தூக்கி பாதயாத்திரை சென்ற பக்தர்களை காணலாம்.

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்தை தெப்பத்திருவிழா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்தை தெப்பத்திருவிழா 2026 30.01.2026-மாலை தெப்பம் முட்டுத்தள்ளுதல், சுவாமி, அம்பாள் ரிஷபவாகனத்தில் புறப்பாடு. முக்தீஸ்வரர் திருக்கோயிலிருந்து திருக்கோயில் வந்தடைதல்.

**நேரிசை வெண்பா :** மும்மைத் தமிழ்க்கூடன் மூலலிங்கத் தங்கயற் கணம்மைக்கு அமுதம் அருமருந்தை - வெம்மை வினைக் கள்ளத் திருக்கோயிற் காணலாங் கண்டீர் நம் உள்ளத் திருக்கோயி லுள்-குமரகுருபரர் அருளிய மதுரைக் கலம்பகம்

**சொக்கே நின் தாளே துணை**

## காட்பாடி சுந்தரியம்மன் சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிப்பு!

**வேலூர்,பிப்.01:**
வேலூர் மாவட்டம், காட்பாடியில் சித்தூர்-கடலூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சுந்தரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலில் அண்மையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மண்டல பூஜையும் நிறைவு பெற்றது.

இந்நிலையில் சுந்தரியம்மன் சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். சுந்தரியம்மனுக்கு அதிகாலை 5 மணிக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடந்தது.

இதை தொடர்ந்து நடந்த தீப, தூப ஆராதனைக்கு பிறகு பக்தர்கள் சுந்தரியம்மனை தரிசனம் செய்தனர்.



பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பாஸ்கர் அர்ச்சகர் செய்திருந்தார். பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப் பட்டது.

## திருக்குறள் பயிற்சி வகுப்பு



திருவண்ணாமலை மாவட்டம் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

## திறனாய்வு கவாத்து பயிற்சி




திருப்பத்தூர் மாவட்டம் ஆயுதப்படை மைதானத்தில் ஆயுதப்படை காவலர்களின் வருடாந்திர காவலர் சீருடை மற்றும் திறனாய்வு கவாத்து பயிற்சி மற்றும் உடற்பயிற்சியினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி., பார்வையிட்டு காவலர்களுக்கு உடற்பயிற்சியின் அவசியம் குறித்தும் அறிவுரைகள் வழங்கினார். ஆயுதப்படை ஆய்வாளர் உடன் இருந்தார்.

## முருக பக்தர்கள், பாளை சமாதானபுரத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் தங்கி ஓய்வெடுத்தனர்



திருச்செந்தூருக்கு பாதயாத்திரை சென்ற முருக பக்தர்கள், பாளை சமாதானபுரத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் தங்கி ஓய்வெடுத்தனர். இதற்கு அனுமதி அளித்த ஆலய நிர்வாகத்துக்கு பக்தர்கள் நன்றி தெரிவித்தனர்.

## ஐந்து தேர்களில் பஞ்சமூர்த்தி சுவாமிகள்



திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோவிலில் நேற்று நடந்த தைப்பூச திருவிழாவில், ஐந்து தேர்களில் பஞ்சமூர்த்தி சுவாமிகளான மகாலிங்கசுவாமி, பெருநலமாமுலையம்மை அம்பாள், விநாயகர்,முருகன், சண்டிகேஸ்வரர் தனித்தனி திருத்தேரில் எழுந்தருளினர். ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து தேர் இழுத்தனர்.

## தை மாதம் வளர்பிறை பிரதோஷம், தை மாத வெள்ளியை முன்னிட்டு சிறப்பு வழிபாடு

**சென்னை, பிப்.01:**
சென்னை சோழிங்கநல்லூர் கிளாசிக் பார்ம்ஸ் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் தை மாதம் வளர்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு ஸ்ரீ வைத்தியநாத ஈஸ்வரர் ஆலயத்தில் நந்திகேச பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால், வில்வ மாலைகளால் அலங்கரித்து, வில்வத்தினால் அர்ச்சனை செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் , மகாதீபாராதனையும் நடைபெற்றது.

ஸ்ரீபுற்று மாரியம்மனுக்கு தை வெள்ளியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் நந்தி



கேச பெருமானையும், ஸ்ரீ புற்று மாரியம்மனையும் வேண்டி அருள் அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் நிர்மலாஸ்ரீதர்
திருவண்ணாமலை**

## கதிர் அறுப்பு திருவிழா




மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் தெப்ப திருவிழா நிகழ்ச்சியினை முன்னிட்டு, சிந்தாமணி கதிர் அறுப்பு மண்டபத்தில் கதிர் அறுப்பு திருவிழா நடைபெற்றது.

## தை தேரில் உபய நாச்சியார்களுடன் நம்பெருமாள்



அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் ஸ்ரீரங்கம் நம்பெருமாள் தை தேரில் உபய நாச்சியார்களுடன்.

## தங்க ரிஷப வாகனத்தில் சுவாமி எழுந்தருளினார்



திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் தைபிரதோஷத்தைஒட்டி தங்க ரிஷப வாகனத்தில் சுவாமி எழுந்தருளினார்.

## வள்ளி-தெய்வயானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு திருக்கல்யாணம்



கோவை மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தைப்பூச விழாவில் நேற்று வள்ளி-தெய்வயானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு திருக்கல்யாணம் நடந்தது.

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்



உசிலம்பட்டி அருகே பெரிய செம்மேட்டுப்பட்டியில், நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை, தங்கதமிழ்ச் செல்வன் எம்.பி., துவக்கி வைத்தார்.

## மனித நேய வார நிறைவு விழா



திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடந்த மனித நேய வார நிறைவு விழாவில் கலெக்டர் தர்ப்பகராஜ் பங்கேற்றார்.

## பொட்டுசாமி பொங்கல் மற்றும் ஸ்ரீமாகாளிஅம்மன் கோவில் பூச்சாட்டுதல்

**ஈரோடு,பிப்.01:**
ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துறைக் கிராமம், செங்கரைப்பாளையம் என்னும் எங்கள் ஊரில் 30.01.2026 வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் பொட்டுசாமி பொங்கல் மற்றும் ஸ்ரீமாகாளிஅம்மன் கோவில் பூச்சாட்டுதல் ஆகிய நிகழ்வுகள் வெகு விமரிசையாக நடைபெற்றது.



ஊர் மந்தவெளியில் (திறந்த வெளியில்) குடிகொண்டிருக்கும் "மக்களைக் காக்கும் மந்தம் பொடாரி" என அழைக்கப்படும் பொட்டுசாமியின் அனுமதி இல்லாமல் ஊருக்குள் எந்தவொரு நோய்நொடியோ, கெடுதலோ வரமுடியாது என்பது காலங்காலமாக பழக்கத்தில் உள்ளது. எனவே நேற்று ஆண்கள் பெண்கள் என ஊர்மக்கள் அனைவரும் உடல் நலத்துடன் வாழ வேண்டி ஆர்வமுடன் பொட்டுசாமிக்கு பொங்கல் வைத்து மாவிளக்கு எடுத்து பூஜை செய்து வழிபட்டனர்.

அதன்பின்னர்ஸ்ரீமாகாளி அம்மன் கோவில் சாமிக்கு பூச்சாட்டுதல் நிகழ்வானது, ஊர் கிணற்றில் கும்பம் ஜோடிக்கு பூஜை செய்து ஆட்டம் பாட்டத்துடன் கோவிலுக்கு கொண்டு வரப்பட்டது. பூக்குழி என்று சொல்லப்படும் குண்டம் வெட்டி பூஜை செய்து அக்னி வளர்க்கப்பட்டு, பூச்சாட்டுவிழா இனிதே நிறைவுற்றது.

வருகின்ற 04.02.2026 புதன்கிழமை அன்று ஸ்ரீமாகாளிஅம்மன் பொங்கல் திருவிழா நடைபெற உள்ளது. அனைவரும் வருக! அம்மன் அருள் பெறுக! நன்றி! வணக்கம்!

## பிப். 5-இல் தமிழக அமைச்சரவைக் கூட்டம்! பட்ஜெட் குறித்து ஆலோசனை

சென்னை, பிப்.1:

தமிழ்நாடு சட்டப்பேரவையின் இந்த ஆண்டுக்கான முதல் கூட்டத்தொடர், ஜனவரி 20 அன்று துவங்கியது. முதல் நாள் ஆளுநர் உரை நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எம்எல்ஏ-க்கள் விவாதித் தனர். ஜனவரி 24 அன்று முதல்வரின் பதிலுரைக்குப் பின், தேதி குறிப்பிடா மல் சட்டப்பேரவை அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. பட்ஜெட் தாக்கலுக்காக பிப்ரவரியில் சட்டப்பேரவை மீண்டும் கூட உள்ளது. இந்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளதால், முழு பட்ஜெட் அல்லாமல், இடைக்கால பட்ஜெட்டே தாக்கல் செய்யப்படும் என்பதால், அதுதொடர்பாக ஆலோசிப்பதற்காக, பிப்ரவரி 5 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 13, 14 அல்லது பிப்ரவரி மூன்றாம் வாரத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இடைக்கால பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து, அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

## மனிதநேய வார விழா

நாகர்கோவில், பிப்.1:

கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நாகர்கோவில் ஹோம் சர்ச் உயர்நிலைப்பள்ளியில் மனிதநேய வார நிறைவுவிழா நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா கலந்து கொண்டு மாணவ மாணவவியர்களிடையே பேசுகையில், மாணவ மாணவிகளான நீங்கள் மாணவப் பரு வத்திலேயே மனிதநேயத்தினை வளர்த்துக்கொள்ள வேண்டும். மனித நேயத்துடன் ஒழுக்கத்தை கடைபிடிப்ப தோடு கல்வியிலும், கலை இலக்கியத்திலும் சாதனை படைத்திட வேண்டும். மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசு உயர்கல்வி பயில பல்வேறு திட்டங்கள் வகுத்துள் ளது. அதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஏற்றத்தாழ்வில்லாத சமூக நீதியை கடைப்பிடிக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அனைத்து பள்ளிகளிலும் பயிலுகின்ற சக மாணவ மாணவியர்கள்,ஆசிரியர்கள் உள்ளிட்ட அனை வருடனும் எந்தவொரு சாதி, சமய, பாகுபாடு இன்றி ஒற்று மையாக பழகுவதோடு, நாம் அனைவரும் தீண்டாமை என்ற தீய சக்தியை கடைபிடிக்காமல் மனிதநேயத்தோடு ஒருவருக்கொருவர் உதவி செய்து சமுதாயத்தை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## மறு நில அளவைப்பணி ஆட்சியர் வேண்டுகோள்

நாகர்கோவில், பிப்.1:

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் வளாக, மறுநில அளவை அலுவலகத்திலிருந்து பிப் 2ம் தேதி முதல் 4 வரை அஞ்சுகிராமம் கிராமத்தில், மறுநில அளவைபணி நடைபெற உள்ளது. நில அளவர்கள் தங்கள் பகுதிக்கு அளவைப்பணி மேற்கொள்ள வரும் போது, நில உடமையாளர்களாகிய தங்கள் நிலம் தொடர்பான கீழ்கண்ட கோரிக்கைகளை தெரிவித்து, மறுநில அளவையில் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். தங்களுடைய கிரய ஆவணத்தின்படி பட்டா மாறுதல் செய்தல், கூட்டுப் பட்டாவிலிருந்து உட்பிரிவு செய்து தனிப்பட்டா மாற்றம் செய்தல், பட்டாவில் பெயர் சேர்த்தல், பரப்பு பிழை கள், தங்களது எல்லை அளவுகள் மேலும், தங்களது கிராமத்தில், அளவைப்பணி மேற்கொள்ள வரும் நில அளவர்களுக்கு தேவையான ஆவணங்கள் வழங்கி யும், எந்த ஒரு இடையூறும் ஏற்படா வண்ணம், மறுநில அளவை பணி சுணக்கமில்லாமல் முழுமை பெற ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சியர் அழகுமீனா தெரிவித்துள்ளார்.

## பிப்.1 முதல் கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம்

திருநெல்வேலி, பிப்.1:

தமிழகத்தில் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 1-ந்தேதி முதல் 14-ந்தேதி வரை கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது. இதேபோல் நெல்லை மாவட்டத்திலும் நடக்கிறது. கோழிக்கழிச்சல் நோய் என்பது கோழிகளை தாக்கும் ஒருவித மான வைரஸ் நோய். இந்நோய் கண்ட கோழிக ளில் இறப்பு நேரிடலாம். இந்த நோய்க்கு சிகிச்சை இல்லை. தடுப்பூசி போடுவதன் மூலம் தான் இந்த நோயை தடுக்க இயலும். இந்த தடுப்பூசி அனைத்து கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால் நடை கிளை நிலையங்களில் வாரந்தோறும் இடப்படுகிறது.வருடம் ஒருமுறை சிறப்பு முகாமாக இருவார கோழிக்க ழிச்சல் தடுப்பூசி முகாம் அனைத்து கிராமங்களில் நடத்தப்படுகிறது. பொதுமக்கள் இந்த முகாமினை பயன்படுத்தி முன்னேற்றம்அடையுமாறு கேட்டு கொள்ளப்படு கிறார்கள். மேற்கண்ட தகவலை திருநெல்மாவேலி மாவட்ட ஆட்சியர் சுகுமார் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் நீக்கப்பட்ட வாக்காளர்களில் 9 லட்சம் பேர் மீண்டும் சேர வாய்ப்பு!



சென்னை, பிப்.1:

சென்னை மாவட்டத்துக்கு ள்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நீக்கப்பட்ட வாக்காளர்களில் சுமார் 9 லட்சம் பேர் மீண்டும் சேர வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை மாவட்டத்துக்கு ள்பட்ட 16 பேரவைத் தொகுதிகளில் மொத்தம் 40. 04 லட்சம் வாக்காளர்கள் இருந்த நிலையில், கடந்த 2025 டிசம்பரில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 15 லட்சம் பேர் நீக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 1.50 லட்சம் பேர் இறந்தவர்கள். உரிய ஆவணமின்றி, தொடர்புகொள்ள முடியாத நிலையில் 13.50 லட்சம் பேர் இருந்தனர்.

கடந்த 2005 வாக்காளர் பட்டியலையும், 2025 ஆண்டு வாக்காளர் பட்டியலையும் ஒப்பிட்டு, அதில் ஏதாவது ஒரு பட்டியலில் இடம் பெற்ற வாக்காளர்களுக்கு ஆவண சரிபார்ப்பு, முகவரி மாற்றம் உள்ளிட்டவை சரிபார்க்கப்பட்டு மீண்டும் சேருவதற்கு 7 லட்சம் பேருக்கு மனு அளிக்கப்பட்டது.

அதேபோல, பெயர் மாற்றம், முகவரி மாற்றம், பாலின மாற்றம் என சிறிய புகார்கள் அடிப்படையில் வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெறாத நிலையில் இருந்த 2.11 லட்சம் பேருக்கும் திருத்த படிவம் அளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வாக்காளர்கள் திருத்தப் பணியில் படிவம் அளித்தவர்களின் பெயர்ப் பட்டியல் கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி தொடங்கியுள்ளது. அதன்படி, சென்னையில் இதுவரை 2.11 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பெயர்கள் புதிய வாக்காளர்களாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தற்போது மீதமுள்ள தொகுதி மாறியவர்கள், ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று விடுபட்டவர்கள் உள்ளிட்டோர் என மொத்தம் 6.50 லட்சத்துக்கும் மேற்பட்டோரிடமிருந்து நிறைவு செய்த படிவங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும், அவை கணினி பதிவேற்றம் செய்யப்படவுள்ளதாகவும் தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டால், சிறப்பு முகாம்கள் நடைபெற்று அதன் மூலமும் வாக்காளர்களை கூடுதலாகச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# அனுமதியின்றி கொடிக்கம்பம் அமைத்தால் நடவடிக்கை - சென்னை மாநகராட்சி

சென்னை, பிப்.1:

சென்னையில் அனுமதியின்றி தற்காலிக கொடிக்கம்பம், சிலைகள் அமைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தேர்தல் பரப்புரை, மாநாட்டிற்காக தற்காலிக கொடிக்கம்பங்கள் மற்றும் சிலைகள் அமைக்க அனுமதி பெற வேண்டும் என்றும் சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

முன்னதாக அரசியல், மத, சங்கங்களின் நிகழ்ச்சிகளில் கொடிக்கம்பங்கள் நட வழிமுறைகள் நெறிமுறைகள் வெளியிடப்பட்டது. இதன்படி கொடிக்கம்பங்கள் நட சென்னை மாநகராட்சி இணையதளத்தில் பதிவு செய்வது கட்டாயம் என்றும், மதச்சார்பான நிகழ்வுகளுக்கு கொடிக்கம்பங்கள் நட 7 நாட்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும், மதச்சார்பில்லாத நிகழ்வுகளுக்கு கொடிக்கம்பங்கள் நட 3 நாட்கள் மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்றும், கொடிக்கம்பங்கள் நட உதவி ஆணையர் அனுமதியளித்த பின் எஸ்.எம்.எஸ். மூலம் தகவல் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக வெளியிட ப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது;-

“தமிழ்நாட்டில் புதிய சிலைகள்/கொடி கம்பங்களை நிறுவுவதற்கான செயல்முறை மற்றும் நடைமுறையை தரப்படுத்துதல்; நீதிமன்றங்களின் பல்வேறு தீர்ப்புகள் மற்றும் வருவாய்த் துறையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைக் கருத்தில் கொண்டு, ஏற்கனவே உள்ள சிலைகளை மாற்றுதல் மற்றும் இடமாற்றம் செய்தல் குறித்து விரிவான வழிகாட்டுதல் நெறிமுறைகளுடன் தமிழ்நாடு அரசால் ஆணை (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் அரசாணை எண்.629 நாள். 16.09.2025ல்) வெளியிடப்பட்டுள்ளது.

இதில் தனியார் நிலங்களில் புதிய சிலைகள் நிறுவுதற்கான வழிகாட்டு நெறிமுறைகள், தனியார் நிலங்களில் புதிய கொடிக் கம்பங்கள் நிறுவுதற்கான வழிகாட்டு நெறிமுறைகள், சிலைகள் மற்றும் கொடிக் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கூட்டம், தேர்தல் பிரச்சாரம், மாநாடுகள், ஊர்வலங்கள், தர்ணா, விழாக்கள் போன்ற சிறப்பு நிகழ்வுகளில் தற்காலிக கொடிக் கம்பங்களை அமைப்பது ஆகியவற்றிற்கு 4 வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக சென்னை மாவட்டத்தில், மண்டல அளவிலான துணைக் குழு *(Zonal Level Sub-Committee)* அமைக்கவும் *G.O. (M.s) No.57, Revenue & Disaster Management LD4(1) Department, Dated:20.01.2026* அரசாணையில் தெரிவிக்கப்பட்டு அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரையிலான ஒவ்வொரு மண்டலத்திலும் மண்டல உதவி ஆணையர் அவர்களை தலைவராகக் கொண்டு ஒரு மண்டலத்திற்கு ஒரு துணைக் குழு வீதம் 15 மண்டலங்களுக்கு 15 மண்டல அளவிலான துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபி பணி ஓய்வு: நினைவுப் பரிசு வழங்கி அதிகாரிகள் பாராட்டு

சென்னை, பிப்.1:

தமிழக காவல்துறையில் லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபி-யாக பணியாற்றிய அபய் குமார் சிங், பணி ஓய்வு பெற்றார்.

பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த இவர், 1992-ம் ஆண்டு ஐபிஎஸ் ஆக (தமிழக பிரிவு) தேர்வானவர். தூத்துக்குடி சப்-டிவிசனில் ஏஎஸ்பி-யாக பணியை தொடங்கிய அபய் குமார் சிங், பின்னர் மணியாச்சி சப்-டிவிசனில் பணியாற்றினார்.

காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், தூத்துக்குடி, மதுரை மாவட்ட எஸ்.பி.யாகவும், ராமநாதபுரம் சரக டிஐஜியாகவும் பணியாற்றினார். பின்னர், ஐஜி-யாக பதவி உயர்வு பெற்று திருநெல்வேலி காவல் ஆணையர், சென்னை கூடுதல் ஆணையர் (க்ரைம்), தென்மண்டல ஐஜி, சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையராக பதவி வகித்தார்.

அதைத் தொடர்ந்து கூடுதல் டிஜிபியாக பதவி உயர்வு பெற்று தலைமை விஜிலென்ஸ், சிலை கடத்தல் தடுப்பு பிரிவு, ஆயுதப்படை, சிபிசிஐடி பிரிவிலும் பணியாற்றினார். அதன்பின், டிஜிபியாக பதவி உயர்வு பெற்று லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநராக பணியாற்றினார். சிறப்பாக பணியாற்றியதற்காக 2008 மற்றும் 2020-ல் மாநில மற்றும் மத்திய அரசு பதக்கங்களையும் பெற்றுள்ளார். அபய் குமார் சிங், சில தினங்கள் சட்டம் ஒழுங்கு பொறுப்பு டிஜிபியாகவும் பணியாற்றினார். இவருக்கான பணி ஓய்வு உபச்சார விழா எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நேற்று நடைபெற்றது. தீயணைப்புத்துறை இயக்குநர் சீமா அகர்வால், பொறுப்பு டிஜிபி வெங்கடராமன், சென்னை காவல் ஆணையர் அருண் உள்ளிட்ட போலீஸ் அதிகாரிகள் நினைவுப் பரிவு வழங்கி பாராட்டினர்.

# வாக்காளர்கள் படிவங்களை தொடர்ந்து சமர்ப்பிக்கலாம்!

சென்னை, பிப்.1:

வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கவும், கூடுதல் ஆவணங்களை அளிக்கவும் படிவங்களை தொடர்ந்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்கலாம் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்காக தேர்தல் ஆணையத்தால் நீட்டிக்கப்பட்ட அவகாசம் ஜன. 30-ஆம் தேதியுடன் முடிவடைந்த நிலையில், உச்சநீதிமன்றம் மேலும் 10 நாள்களுக்கு நீட்டித்தது. கடந்த டிச. 19-ஆம் தேதி தொடங்கி ஜன. 29-ஆம் தேதி வரையில் தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்க 16,72,874 பேர் படிவங்களை



அளித்துள்ளனர். இதில் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களும் அடங்குவர்.

படிவம் 7-ஐ பயன்படுத்தி ஆட்சேபங்களைத் தெரிவித்து நீக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 1,40,679-ஆக அதிகரித்துள்ளது.

முன்னதாக, வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றவர்களில் உரிய தகவல்களை அளிக்காமல் இருந்த 12,43,363 பேருக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது.

அவர்கள் உரிய ஆவணங்களை அளிக்க பிப். 10-ஆம் தேதி வரையில் அவகாசம் உள்ளது. அதுவரையில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும், உரிய ஆவணங்களை அளிக்கவும் செய்யலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முரண்பாடு பட்டியல் விவரம் எப்போது?: இதனிடையே, குடும்பத் தலைவருக்கும், பிள்ளைகளுக்கும் இடையேயான வயது வரம்பு முரணாக இருப்பது, குடும்பத் தலைவரின் பெயர் மாறுபட்டு உள்ளது போன்றவை காரணமாக ‘முரண்பாடு பட்டியலில்’ சேர்க்கப்பட்டோரின் விவரங்களை காரணத்துடன் வெளியிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டிருந்தது.

இந்தத் தகவல்கள் அனைத்தும் இந்திய தேர்தல் ஆணையத்தின் மையக் கணினியில் சேமிக்கப்பட்டு உள்ளதால், தேர்தல் ஆணையம் இந்தத் தகவல்களை அளித்தவுடன் முரண்பாடு பட்டியலில் இடம்பெற்றோர் விவரம் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியின் தொடர்ச்சியாக கடந்த டிச. 19-ஆம் தேதி வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் தமிழகத்தில் 97.38 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். இதனால் 6,41,14,587-ஆக இருந்த தமிழக மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5,43,76,756-ஆக குறைந்தது. நீக்கப்பட்ட 97.38 லட்சம் வாக்காளர்களில் இடம்பெயர்ந்தவர்களாக 66,44,881 பேரும், உயிரிழந்தவர்களாக 26,94,672 பேரும், இரட்டைப் பதிவாளர்களாக 3,98,278 பேரும் இடம்பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### போர் வீரர்களும் குத்துச்சண்டை வீரர்களும் சாப்பிட்ட கல்லுண்டை சம்பா...

கல்லுண்டை சம்பா அரிசி என்பது தமிழகத்தின் பாரம்பரிய அரிசி வகைகளுள் ஒன்று. இது பண்டைய மன்னர்களின் போர் வீரர்கள் மற்றும் குத்துச்சண்டை வீரர்களுக்கு உணவாக வழங்கப்பட்டது. இந்த அரிசியில் நார்ச்சத்து, பொட்டாசியம், இரும்புச்சத்து மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்து காணப்படுகின்றன. கல்லுண்டை சம்பா அரிசியில் சமைக்கப்பட்ட உணவை சாப்பிட்டால் தசை பலம், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இந்த அரிசியை தொடர்ந்து உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பு குறைகிறது என்று நம்பப்படுகிறது. ஏற்கனவே பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அரிசியை உட்கொள்வதன் மூலம் பக்கவாதத்தின் பாதிப்பு அளவை வெகுவாகக் குறைக்க முடியும். இதில் நார்ச்சத்து மிகுந்து காணப்படுவதால், மலச்சிக்கலுக்கு இந்த அரிசி நல்லதொரு மருந்தாக செயல்படுகிறது. கண் சம்பந்தமான நோய்களுக்கும் கல்லுண்டை சம்பா அரிசி நல்ல தீர்வைத் தரும். நீரிழிவு நோய், மூட்டு வலி, சரும நோய், வயிற்றுகோளாறு, வாயு தொல்லைகளை நீக்கும் சக்தி வாய்ந்தது இந்த அரிசி. இந்த அரிசியில் கஞ்சி வைத்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால், குழந்தைகளுக்கு பேச்சு திறன் அதிகரிக்கும். திக்கு வாய் இருந்தாலும் குணமாகும்.

### ஒரு கைப்பிடி மூங்கில் அரிசி... 100 நோய்களுக்கு முற்றுப்புள்ளி!



மூங்கிலை பற்றி அனைவரும் அறிந்தது என்னவென்றால் அதன் மரங்கள் வீடு கட்ட பயன்படும். மூங்கில் அரிசியில் (BAMBOO RICE) பாயாசம் செய்து சாப்பிடலாம் என்பதுதான். அதன் இலையில் இருந்தே மருத்துவ குணங்கள் நிரம்பியது என்பது அனைவருக்கும் தெரியாது. மூங்கிலின் இலை, கணு ,வேர் விதை, உப்பு ஆகியவை மருத்துவ பயனுடையவை. தமிழகமெங்கும் வளர்க்கப்படுகிறது.

பற்கள் பளிச்சிட: மூங்கில் (BAMBOO) இலையை அரைத்து முள் தைத்த இடத்தில் வைத்து கட்ட முள் வெளியாகும். இலையை சிறிது நீர் விட்டு இடித்துப் பிழிந்த சாற்றுடன் தேன் கலந்து காலை மாலை கொடுத்து வர இருமல் தீரும். மூங்கில் இலையை உலர்த்தி கொளுத்தி சாம்பலாக்கி புண்களின் மீது தூவ அவை விரைந்து ஆறும். இலைச் சாம்பலால் பல் தேய்க்க பற்கறைகள் அகன்று பற்கள் பளிச்சிடும்.

உதிர சிக்கல் தீர: இளம் மூங்கில் குறுத்து 100 கிராம் சிதைத்து 2 லிட்டர் நீரிலிட்டு ஒரு லிட்டர் ஆகுமாறு காய்ச்சி வடிகட்டி, காலை, மதியம், மாலை 50 மில்லி அளவு குடித்து வரப் பேறுகால கருப்பை அழுக்குகள் வெளியேறும். சூதகக் கட்டு, வெள்ளை, காய்ச்சல், குடற்புழுக்கள் ஆகியவை தீரும். மூங்கில் மர மேல் தோல், கருஞ்சீரகம் ,மஞ்சள் மூன்றும் சம அளவு எடுத்து அரை லிட்டர் நீரிலிட்டு கால் லிட்டராக காய்ச்சி வடிகட்டி பனைவெல்லம் கலந்து ஓரிரு வேலை கொடுக்க மகப்பேற்றின் போது ஏற்படும் உதிரச் சிக்கல் தீரும்.

செருப்புக்கடி புண் போக: மூங்கில் வேரை அரைத்துப் பற்றுப் போட சொறி ,சிரங்கு, படை முதலியவை தீரும். கோணி ஊசி போல் உள்ள பச்சை மூங்கிலை வெட்டி நறுக்கி நீர் விட்டு அரைத்து சாந்தை காலை மாலை செருப்புக் கடி புண்மீது இரண்டு நாள் பூச சரியாகும்.

நீரிழிவு தீர: மூங்கில் அரிசி உணவு மதுமேக நோயாளர்களுக்குத் தக்கதாகி நோயைத் தணிக்கும். மூங்கில் அரிசி பாயசம் மிகவும் விஷேச குணமுடையது. மூங்கில் அரிசி மாவு கஞ்சி சோர்வைப் போக்கி ஜன நல்ல உற்சாகத்தை தரும். மூங்கிலின் மருத்துவக் குறிப்புகளை தெரிந்து வைத்துக் கொண்டு, நல்ல வைத்தியரின் ஆலோசனை உடன் தக்க சமயத்தில் பயன்படுத்தி ஆரோக்கியம் காப்போமாக!

## பிப்.3-ல் அண்ணாவின் 57-வது நினைவு தினம்

சென்னை, பிப்.1:

முன்னாள் முதல்வர் அண்ணாவின் 57-வது நினைவு தினத்தை முன்னிட்டு பிப். 3-ம் தேதி சென்னை மெரினாவில் உள்ள அண்ணா நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி மரியாதை செலுத்துகிறார்.

இது தொடர்பாக அதிமுக தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அதிமுக சார்பில் அண்ணாவின் 57-வது நினைவு தினம், சென்னை மெரினா கடற் கரையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் பிப்.3-ம் தேதி காலை 10 மணிக்கு அனுசரிக்கப்படுகிறது.

இதில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பங்கேற்று, மலர் வளையம் வைத்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தவுள்ளார். தொடர்ந்து தலைமைக் கழகச் செயலாளர்கள் மலர் அஞ்சலி செலுத்துவார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர்கள், கட்சி எம்பிக்கள், எம்எல்ஏக்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்பி, எம்எல்ஏக்கள், கட்சியின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்கின்றனர். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தற்காலிக பணியாளர்களை நிரந்தரமாக்க இயலாது: அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, பிப்.1:

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை, கோட்டூர்புரத்தில் அவர் செய்தியாளர்களிம் வெள்ளிக்கிழமை கூறியதாவது: தற்காலிக ஊழியர்களுக்கான பணி என்பது ஆண்டுக்கு 11 மாத ஒப்பந்தப் பணி. அது நீட்டிக்கப்படும்போது, இடையில் ஒரு நாள் விடுமுறை வழங்கி விட்டு மீண்டும் புதுப்பிக்கப்படும். இதுபோன்று பணியில் இருப்பவர்களை எந்த அரசும் நிரந்தரம் செய்ய முடியாது.

தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள வேறு எந்த மாநில அரசும் பணிநிரந்தரம் செய்யாது. அதையும் மீறி நிரந்தரம் செய்தால் நீதிமன்றம் தலையிடும். இதைத் தெரிந்துகொண்டே போராட்டம் செய்வது என்பது ஒரு சிலர் தூண்டிவிட்டு நடத்தப்படும் நிகழ்வு. தூண்டுதலுக்கு காரணமானவர்கள் மீது புகார் கொடுத்து இருக்கிறோம். போராட்டங்கள் என்பது இயல்பாக நடக்க வேண்டும். தேர்தல் நடக்கும் சூழ்நிலையில் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக நடைபெறும் போராட்டங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் சில கருத்துகளைத் தெரிவித்திருந்தேன். மாறாக, போராட்டங்களைக் கொச்சைப்படுத்துவது திமுக அரசின் நோக்கமல்ல. இதற்கு முன்பு தொழிற்சங்கத் தலைவராக இருந்துதான் நான் அரசியலுக்கு வந்திருக்கிறேன். 1980-களில் எம்ஜிஆர் முதல்வராக இருந்தபோது அவரது அரசை எதிர்த்து தலைமைச் செயலகத்திலேயே போராட்டம் நடத்தி எம்ஜிஆரை கீழே வரவழைத்து 500 பெண் தொழிலாளர்கள் முன்பாக பேச வைத்து, அவருக்கு முன் விவாதம் செய்துள்ளேன். அதனால் தொழிற்சங்கத்தைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இந்தியா முழுவதும் உள்ள 36 மாநிலங்களில் தமிழகத்தில்தான் மிகக் குறைந்த அளவிலான குற்றச்செயல்கள் பதிவாகின்றன என்றார்.

# இன்று தைப்பூச திருவிழா: பழனி முருகன் கோவிலில் குவியும் பக்தர்கள்

பழனி, பிப்.1:

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் தைப்பூச திருவிழா கடந்த 26-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானை திருக்கல்யாணம் நேற்று (சனிக்கிழமை) நடைபெறுகிறது. மேலும் சிகர நிகழ்ச்சியான தைப்பூச தேரோட்டம் இன்று நடைபெறுகிறது.



இதில் கலந்துகொள்வதற்காக திண்டுக்கல், தாராபுரம், உடுமலை என பழனியின் அனைத்து சாலைகளிலும் பாதயாத்திரை பக்தர்கள் அணி அணியாய் நடந்து வந்தனர். அவ்வாறு வரும்போது களைப்பு தெரியாமல் இருக்க முருகனை வேண்டி சரண கோஷம் எழுப்பியும், பாட்டு பாடியும் ஆடி வந்தனர். பழனி வந்த பின்பு சண்முகநதி, இடும்பன்குளத்தில் புனித நீராடினர்.

குளத்தில் நீராடிய பக்தர்கள் திருஆவினன்குடி, மலைக்கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர். பழனியில் நேற்று பக்தர்கள் படையெடுத்து வந்ததால் அடிவார பகுதியே கூட்டத்தால் அலைமோதியது. எனவே கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த கிரிவீதியில் இருந்து குடமுழுக்கு நினைவரங்கம், யானைப்பாதை வழியாக பக்தர்கள் செல்ல தனிப்பாதை அமைக்கப்பட்டிருந்தது.

பின்பு அங்கிருந்து படிப்பாதை வழியாக கீழே இறங்கி சென்றனர். இதில் ஏராளமான பக்தர்கள் அலகு குத்தியும், முடிக்காணிக்கை செலுத்தியும் நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டனர். விழாவில் 5-ம் நாளான நேற்று, பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் இருந்து முத்துக்குமாரசாமி, வள்ளி-தெய்வானை உடன் வெள்ளி யானை வாகனத்தில் உலா வந்தார். பக்தர்கள் திரளானவர்கள் தரிசனம் செய்தனர்.

மேலும் புகழ்பெற்ற காரைக்குடி நகரத்தார் காவடி குழுவினர் நேற்று மயில் காவடிகளை சுமந்தபடி ஒட்டன்சத்திரத்தில் இருந்து பழனிக்கு புறப்பட்டனர்.

# மார்ச் 3-ந்தேதி சந்திர கிரகணம்: திருப்பதி ஏழுமலையான் கோவிலில் 10½ மணி நேரம் நடை அடைக்கப்படுகிறது

திருமலை, பிப்.1:

மார்ச் மாதம் 3-ந்தேதி சந்திர கிரகணம் நிகழ்வதையொட்டி 10½ மணி நேரம் திருப்பதி ஏழுமலையான் கோவில் நடை அடைக்கப்படுகிறது. அன்று நடக்கும் அனைத்து ஆர்ஜித சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.



இதுகுறித்து திருப்பதி தேவஸ்தானம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

வருகிற மார்ச் மாதம் 3-ந்தேதி மாலை 3.20 மணிக்கு சந்திர கிரகணம் தொடங்கி மாலை 6.47 மணிக்கு முடிகிறது. பாரம்பரிய முறைப்படி கிரகணம் தொடங்குவதற்கு 6 மணி நேரத்துக்கு முன்பே திருப்பதி ஏழுமலையான் கோவில் நடை அடைக்கப்படும்.

அதன்படி, மார்ச் 3-ந்தேதி காலை 9 மணியில் இருந்து இரவு 7.30 மணி வரை சுமார் 10½ மணி நேரம் திருப்பதி ஏழுமலையான் கோவில் நடை அடைக்கப்பட்டு, இரவு 7.30 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்படுகிறது.

அதன்பிறகு புனித சடங்குகள் நடக்கிறது. கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய இரவு 8.30 மணியளவில் அனுமதிக்கப்படுவார்கள்.

சந்திர கிரகணத்தால் மார்ச் 3-ந்தேதி அஷ்டதள பாத பத்மாராதனை சேவை, கல்யாணோற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீபலங்கார சேவை, நெறிமுறைகளுக்கு உட்பட்ட வி.ஐ.பி. பிரேக் தரிசனம், ஸ்ரீவாணி தரிசனம், ரூ.300 சிறப்பு நுழைவு தரிசனம், 5 வயதுக்கு உட்பட்ட கைக்குழந்தைகளுடன் வரும் பெற்றோருக்கான தரிசனம், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தரிசனம், காணிக்கையாளர்களுக்கான தரிசனம், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான தரிசனம் ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன.


பக்தர்கள் மேற்கண்ட தகவல்களை கவனத்தில் கொண்டு எந்தவித சிரமமும் ஏற்படாதவாறு தங்கள் திருமலை யாத்திரையை திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ராமேஸ்வரம் கோவிலில் டிக்கெட் சர்வர் முடக்கம் புனித நீராட பக்தர்களுக்கு இலவச அனுமதி

இராமநாதபுரம், பிப்.1:

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புண்ணிய தலமான ராமேஸ்வரம் ராமநாதசாமி கோவிலுக்கு தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.



சாதாரண நாட்களை விட அமாவாசை தினத்தில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். அமாவாசை நாளில் ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடலில் நீராடி கடற்கரையில் அமர்ந்து திதி, தர்ப்பண பூஜை செய்து, பின்னர் ராமநாத சுவாமியை வழிபடுகிறார்கள். இதேபோல் விடுமுறை தினங்களிலும் பக்தர்கள் வருகை வழக்கத்தை விட அதிகமாக இருக்கும்.

அந்த வகையில், வார விடுமுறை தினமான இன்று ராமேஸ்வரம் ராமநாதசாமி கோவிலுக்கு அதிகாலை முதலே பக்தர்கள் அதிக அளவில் வருகை தந்தனர். கோவிலுக்கு வரும் பக்தர்கள் அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் புனித நீராடிவிட்டுச் செல்கின்றனர். பக்தர்கள் 22 புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதற்கு ஒரு நபருக்கு ரூ.25 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தீர்த்தங்களில் புனித நீராடுவதற்கு வழங்கப்படும் டிக்கெட் சர்வர் திடீரென முடங்கியதால், பக்தர்களுக்கு டிக்கெட் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டது.

இதையடுத்து, பக்தர்கள் அனைவரையும் பொது வரிசையில் கோவில் நிர்வாகம் புனித நீராடுவதற்கு இலவசமாக அனுப்பி வைத்து வருகின்றது. டிக்கெட் சர்வர் சரிசெய்யப்பட்ட பின்னர் மீண்டும் டிக்கெட் வழங்கும் பணி தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## 2027-இல் ககன்யான் திட்டம்

சென்னை, பிப்1:

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த இஸ்ரோ தலைவர் நாராயணன், "விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் 'ககன்யான்' திட்டம் 2027-ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது என்றும் விண்வெளி வீரர்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது; ஒவ்வொரு அமைப்பையும் தகுதிப்படுத்த வேண்டும்!" என்று தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கியை காட்டி மிரட்டிய கடலூர் அதிமுக பிரமுகர் கைது

கடலூர், பிப்.1:

கடலூர் மாவட்டம், நடுவீரப்பட்டு குழந்தை குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி இவர் அதிமுகவில் மேற்கு ஒன்றிய விவசாய அணி துணை செயலாளராக உள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் வினோத் என்பவருக்கும் செம்மண் கிராவல் குவாரியில் தொழில் ரீதியாக இரு வருக்கும் பிரச்சனை இருந்து வந்த நிலையில் புதன்கிழமை கிருஷ்ணமூர்த்திக்கும் வினோத் இருவருக்கும் இடையே குவாரியில் வாக்குவாதம் ஏற்பட்டது. கிருஷ்ணமூர்த்தியின் மகன் கோபால் அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளராக உள்ளார்.

தான் அனுமதி பெற்று வைத்திருந்த கை துப்பாக்கியை எடுத்து வினோத் என்பவரை மிரட்டி தாக்கியது சம்பந்தமாக நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் அளித்த புகாரில், கோபால் மீது கொலை முயற்சி உள்ளிட்ட 4 பிரிவுக ளின் கீழ் வழக்கு பதிவு செய்து, அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் கோபாலை கைது செய்தனர். அவரிடமிருந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை பறிமுதல் செய்தனர்.

## இளைஞர் வெட்டிக் கொலை

விழுப்புரம், பிப்.1:

விழுப்புரம் மாவட்டம் சின்னகோட்டக்குப்பத்தைச் சேர்ந்த ரவுடி அப்பு (எ) ஜவகர் (24), புதனன்று இரவு மர்மக் கும்பலால் வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இவர் மீது 3 கொலை வழக்குகள் உட்பட 10-க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன.

ஜாமினில் வெளியே வந்திருந்த அவர், அமைதி நகரில் நண்பர்களுடன் மது அருந்திக் கொண்டிருந்தபோது 10 பேர் கொண்ட கும்பல் இந்த தாக்குதலை நடத்தியது.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த அவரது உடலை மீட்ட கோட்டக்குப்பம் போலீசார், முன்விரோதம் காரணமாக இக்கொலை நடந்ததா என்ற கோணத்தில் தப்பியோடிய கும்பலைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

# "இனி மருத்துவம் படிக்கக் கல்லூரிக்குச் செல்வது அர்த்தமற்றது," : எலான் மஸ்க் கூறும் காரணம் என்ன?

உலகப் பணக்காரரும் தொழில்நுட்ப ஜாம்பவானுமான எலான் மஸ்க் எதையாவது பேசினாலே அது உலக அளவில் விவாதப் பொருளாகிவிடும். இம்முறை அவர் தொட்டிருப்பது மருத்துவத் துறையை. "இன்னும் மூன்றே ஆண்டுகளில் உலகின் தலைசிறந்த அறுவை சிகிச்சை நிபுணர்களை விட, டெஸ்லாவின் 'ஆப்டிமஸ்' (Optimus) போன்ற ரோபோக்கள் சிறப்பாகச் செயல்படும். அதனால், இனி மருத்துவம் படிக்கக் கல்லூரிக்குச் செல்வது அர்த்தமற்றது," என்று அவர் கூறியிருப்பது மருத்துவ உலகில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

மருத்துவர்கள் ஆவதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது என்பதும், மனிதர்கள் தவறு செய்பவர்கள் என்பதும் மஸ்க்கின் வாதம். ஆனால், அறுவை சிகிச்சை என்பது வெறும் கைகளை அசைத்துத் தைக்கும் இயந்திரத்தனமான வேலை அல்ல என்பதை அவர் மறந்துவிடுகிறார். ஒவ்வொரு மனித உடலும் தனித்துவமானது.

அறுவை சிகிச்சையின் போது எதிர்பாராத ரத்தப்போக்கோ அல்லது சிக்கலோ ஏற்பட்டால், அந்த நொடியில் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது மருத்துவரின் அனுபவ அறிவும், உள்ளுணர்வுமே ஆகும்.



சாலையில் செல்லும் Self-driving car-களையே இன்னும் முழுமையாக விபத்தில்லாமல் இயக்க முடியாத நிலையில், மனித உடலுக்குள் மிக நுட்பமாகச் செயல்படும் ரோபோக்களை இன்னும் 3 ஆண்டுகளில் முழுமையாக நம்புவது சாத்தியமற்றது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். எலும்பு முறிவு, தீக்காயம் போன்ற சிகிச்சைகளில் தேவைப்படும் உடனடி முடிவுகளைத் திட்டமிடப்பட்ட அல்காரிதம்களால் எடுக்க முடியாது.

எலான் மஸ்க் பேசத் தவறிய மிக முக்கியமான விஷயம் 'சட்ட ரீதியான பொறுப்பு'. ஒரு மனித மருத்துவர் தவறு செய்தால், சட்டத்தின் முன் அவர் பதில் சொல்ல வேண்டும். ஆனால், ஒரு ரோபோ அறுவை சிகிச்சையின் போது தவறு செய்து நோயாளி உயிரிழந்தால் யார் பொறுப்பேற்பது? அந்த ரோபோவைத் தயாரித்த நிறுவனமா? அல்லது அதற்கு மென்பொருள் எழுதியவரா? இயந்திரங்களைக் கூண்டில் ஏற்ற முடியாது. மேலும், மருத்துவம், வெறும் சிகிச்சை மட்டுமல்ல; அது நம்பிக்கை சார்ந்தது. நோயாளியின் பயத்தைப் போக்கவும், மோசமான செய்திகளைப் பக்குவமாகச் சொல்லவும், குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறவும் மனிதத்தன்மை அவசியம். "உங்கள் உயிருக்கு ஆபத்து" என்பதை ஒரு இயந்திரம் திரையில் காட்டுவதற்கும், ஒரு மருத்துவர் கையைப் பிடித்து ஆறுதல் சொல்வதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது.

எலான் மஸ்க் கூறுவது போல செயற்கை நுண்ணறிவு (AI) மருத்துவத் துறையில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவரும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.



ஆனால், அது மருத்துவர்களுக்கு உதவியாக இருக்குமே தவிர, அவர்களை முற்றிலுமாக அழித்துவிடாது. எதிர்கால மருத்துவர்கள் ரோபோக்களை எப்படி இயக்குவது என்பதைக் கற்றுக் கொள்வார்களே தவிர, மருத்துவம் படிப்பதை நிறுத்த மாட்டார்கள்.

விமானம் வந்த பிறகும் விமானிகள் தேவைப்படுவது போல, எவ்வளவு நவீன ரோபோக்கள் வந்தாலும், மனித உயிரைக் காக்க மனித உணர்வுகளுடனான மருத்துவர்கள் எப்போதும் தேவைப்படுவார்கள்.

மஸ்க்கின் இந்தக் கருத்து முதலீட்டாளர்களைக் கவரலாமே தவிர, நடைமுறைக்கு ஒவ்வாதது.

# "இதோ... இதோ... என் பல்லவி"



கிழிந்த ஜீன்ஸ் சிவராமன் கடைத் தெருவுக்குச் செல்லும் பொதெல்லாம், கோவில் வாசலில் இருக்கும் பூக்கடை அவர் கண்ணில் படும். பெரும்பாலும் ஒரு இளம் பெண் அமர்ந்து பூ விற்றுக் கொண்டிருப்பாள். அவள் அணிந்திருக்கும் பாவாடையிலும், மேலாடையிலும் நிறைய ஒட்டுகள் காணப்படும். பல இடங்களில் கிழிந்திருக்கும் துணிக்கு இத்தனை ஒட்டுப் போட்டு அணிந்து கொண்டிருக்கிறாளே என்று அவர் மனம் வேதனைப்படும். எந்த நேரமும் மக்கள் நடமாட்டமிருக்கும் தெருவில், இதைப் போன்ற துணியை அணிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறாளே என்று மனது சங்கடப்படும். அவளுக்கு ஒரு புடவை வாங்கிக் கொடுக்க முடிவு செய்து, மனைவியின் சம்மதத்தையும் பெற்றுக் கொண்டார்.

நம்மால் முடிந்த சிறிய உதவி என்ற எண்ணத்துடன், புடவையை வாங்கிக் கொண்டு, அந்தப் பெண்ணின் பூக்கடைக்குச் சென்றார். “இந்த சிறிய அன்பளிப்பை வாங்கிக் கொள்” என்று அந்தப் பெண்ணிடம் புடவையை கொடுத்தார்.

அந்தப் பெண் அதனை வாங்கிக் கொள்ள மறுத்தாள். மேலும் சொன்னாள். “ஐயா நீங்க பெரிய மனசோட செய்கிற உங்க உதவிக்கு நன்றி. ஆனால், என்னை விட இந்த உதவிக்கு தகுதியானவங்க நிறைய பேர் இருக்காங்க. நீங்களே பாருங்க எதிர்ல ஃப்ரெண்ட்ஸோட நடந்து வர அந்தப் பெண்ணை. அந்தப் பெண் போட்டுக்கிட்டு இருக்கிற டிரவுசரை பாருங்க. எத்தனை இடத்தில கிழிஞ்சு கிடக்குது. நான் இங்க கடைத் தெருவுல இருக்கேன். ஆனால், அந்தப் பெண், பாவம், கிழிஞ்ச டிரவுசரை போட்டுக்கிட்டு வெளியே சுத்திக்கிட்டு இருக்குது. நீங்க இந்தப் புடவையை அந்தப் பெண்ணுக்கு கொடுங்க” என்று கேட்டுக் கொண்டாள்.

பூக்காரப் பெண் சொன்ன திசையில் பார்த்தார் சிவராமன். அவருடைய மகள் கிழிந்த ஜீன்ஸ் அணிந்து கொண்டு தன்னுடைய தோழிகளுடன் வந்து கொண்டிருந்தாள்.

**கே.என்.சுவாமிநாதன்**
சென்னை

# போகும் இடம் எதுவோ...



சரவணன் நொந்துபோய் தன் மனைவி சாவித்திரியின் கையைப் பிடித்தபடி ரோடில் நடந்தார். முதுமை யும் உடல் சோர்வும் இருவரையும் வாட்டியெடுத்தன ! வீட்டை தன் பெய ருக்கு எழுதி வாங்கிக்கொண்டான் மகன் மகேஷ்.

பெண்டாட்டியின் பேச்சைக் கேட்டு கொஞ்சம் கொஞ்சமாக தன் பெற்றோரை உதாசீனம் செய்ய ஆரம்பித்தான். ஏற்கனவே இருவர் உடலிலும் சர்க்கரை மற்றும் இரத்தக் கொதிப்பு நோய் வாட்டியெ டுத்தன. வயதான காலத்தில் பைய னும் மருமகளும் ஆதரவாய்இருப்பா ர்கள் என்ற நம்பிக்கையில் மண்விழு ந்தது. கடைசியில் மனம் வெறு த்துப் போய் வீட்டை விட்டே வெளியே றினர்.

" நாம இப்போ எங்கே போறோம் ? " கேட்டுவிட்டு பெருமூச்சொன்றை விட்டாள் சாவித்திரி.

" இவ்வளவு பெரிய உலகத்தில் நமக்குஇடம் கிடைக்காமலா போகும் !" பதிலுக்கு பெருமூச்சு விட்டார் சரவ ணன்.

" ஆனாலும் நீங்க அவசரப்பட்டு இப்படி வீட்டை விட்டு வெளியேறும் முடிவை எடுத்திருக்க வேண்டிய தில்லை..."

" எது...வீட்டுல இருக்கறதும் இல்லாததும் உங்கள் சௌகர்யம்னு நாக்கில நரம்பில்லாம சொன் னானே.. பாவிப்பய..அப்படிசொன்ன பிறகு எப்படி அந்த வீட்டில நாம இருக்க முடியும் ! " குரலில் வேதனை இழைந்தோடியது !

அப்போது டு வீலரில் எதிரில் வந்த கோபுசட்டென பிரேக் போட்டு நிறுத்தி, வண்டியிலிருந்து கீழே இறங்கினான்.
" சார், வணக்கம். என்னைத் தெரியு தாசார்...நான்தான் கோபு ! "

கண்ணாடியை தன் இடது கையால் சரி செய்தபடி அவனை ஏறெடுத்துப் பார்த்தார். வயதாகிப் போனதால் சரவணனுக்கு சட்டென நியாபகம் வரவில்லை.

" நீங்க யார்னு தெரியல்லயே தம்பி !" " சார் ! நான் கோகுலம் முதியோர் இல் லத்தின் காப்பாளர். இல்லம் விருத்தி செய்ய ஃபைனான்ஸ் தேவைன்னு விளம்பரம் செய்திருந்தோம். மறு நாளே நீங்கள் வந்து ஐந்து லட்ச ரூபாய்க்கு செக் கொடுத்தீங்க. இவ்வ ளவு பெரிய தொகை கொடுத்த உங்களை மறக்க முடியுமா சார் ! அதிருக்கட்டும் நீங்களும் அம்மா வும் தன்னந்தனியா எங்கே புறப்பட்டீங்க கையில் மூட்டை முடிச்சோடு? "

சரவணனும் சாவித்திரியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண் டனர்.

தாங்கள் வீட்டை விட்டு வெளியேற்றப் பட்டுவிட்டோம். தங்க இடம் இல்லை. வயதான காலத்தில் அரவணைக்கும் எண்ணம் இல்லாமல் எங்களை எங் கள் மகன் வீட்டை விட்டே துரத்திவிட் டான் என சொல்லி கோகுலம் முதி யோர் இல்லத்தில் சுலபமாக சேர்ந்து விடலாம். தாங்கள் கொடுத்த டொனே ஷன் ஐந்து லட்சத்தைச் சுட்டிக்காட்டி விஷயத்தை முடித்துவிடலாம். ஆனால்...........

" என்ன சார் யோசனை ? அதுக்குள்ள என்னை மறந்துட்டீங்களா ? "என்றான் கோபு.

" ஆமாம் தம்பி ! வயசாகிப் போனதால நியாபக மறதி ஜாஸ்தியாயிடிச்சு. எப்படி இருக்கீங்க தம்பி ?"

" உங்களை மாதிரி பெரியவங்க ஆசிர்வாதத்தால நல்லா இருக்கேன் சார், அது சரி, வெளியூர் பயணமா.? " புன் சிரிப்புடன் கேட்டான் கோபு.

" ஆமாம்பா, வெளியூர்ல இருக் குற ஒரு உறவினர் வீட்டுக்குப் போய் கொஞ்ச நாள் தங்கிட்டு வரலாம்னு கிளம்பிட்டோம்பா!"

" ஜாக்கிரதையாப் போயிட்டு வாங்க சார் ! அப்போ நான் கிளம்புறேன் அம்மா வரேன்மா.! " இருவரையும் வணங்கிவிட்டுக்கிளம்பினான் கோபு.

" சாவித்திரி, நிர்க்கதியா நிற்கும் நம்மளை கோகுலம் இல்லத்தில் சே ர்த்துக்கச் சொல்லி கோபுவிடம் கேட் டிருக்கலாம்னு உம் மனசில தோ ணுதா?"

" இல்லீங்க, தானம் கொடுத்ததை சுட்டிக் காட்டி நீங்க எந்த ஆதாயமும் எதிர்பார்க்க மாட்டீங்கன்னு எனக் குத் தெரியும். நான் உங்கள் பெண் டாட்டி. நானும் அப்படித்தான்...."

மனைவியை நினைத்து பெருமை யுற்றார் சரவணன்.

அதே சமயம், " ஹூம்! யாரோ ஒரு மூணாவது மனுஷனுக்கு இருக்கற அன்பு கூட நம் பிள்ளைக்கு இல்லாம போயிடிச்சே!" அதை நினைச்சால் தான் வேதனையா இருக்கு ." விசன த்துடன் ஒலித்தது சரவணனின் குரல்.

’ நாம பெத்ததுன்னா இருக்கும். தத்தேடுத்து வளர்த்த பிள்ளைக்கு எப்படி நம் மீது பாசம் இருக்கும் ?’ வேதனையுடன் நினைத்துக்கொண்டாள் சாவி த்திரி.
மீண்டும் இருவ ரும் கை கோர்த்தபடி தங்களின் இலக்கில்லாத நடைப் பயணத்தை தொட ர்ந்தனர் அந்த வயதான தம்பதியர் !



**- வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# காலம் மறந்த பொக்கிஷங்கள் !!

▪A.s.Govinda rajan

## டிக்... டிக்...!!

எத்தனை பேர் விளையாடலாம்?
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர்.
எப்படி விளையாடுவது?
முதலில் திருடனாக ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்விளையாட்டு கேள்வி பதில் முறையில் விளையாடப்படும். கேள்வி பதில் பாடல் போல் இருக்கும்.
திருடனாக இருக்கும் நபர் முதலில் டிக் டிக் என்று சொல்லி ஆரம்பிக்க வேண்டும்.


திருடன் : டிக்... டிக்...
மற்றவர்கள் : யாரது?
திருடன் : திருடன்
மற்றவர்கள் : என்ன வேண்டும்?
திருடன் : நகை வேண்டும்.
மற்றவர்கள் : என்ன நகை?
திருடன் : கலர் நகை.
மற்றவர்கள் : என்ன கலர்?

திருடன் : பச்ச கலர்

(சுற்றுபுறத்தில் என்னென்ன கலர் இருக்கிறதோ அந்த வண்ணங்களில் ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டும்.)
அவ்வாறு கலர் சொல்லியவுடன் அனைவரும் ஓடிப்போய் அந்த கலர் உள்ள பொருளைத் தொட வேண்டும்.
கலரை தொடுவதற்கு முன்னால் பிடிப்பவர் யாரை துரத்தி பிடிக்கிறாரோ அவர் ஆட்டமிழந்தவர். அவர் மீண்டும் விளையாட்டை ஆரம்பித்து மற்றவர்களை பிடிக்க வேண்டும்.
திருடனாக இருப்பவர் எந்த கலரை வேண்டுமானாலும் சொல்லலாம்.
ஆனால், இரண்டு வண்ணங்கள் அதாவது கலவை வண்ணங்களை சொல்லக்கூடாது.
விளையாட்டின் பயன்கள் :
வண்ணங்களை தெரிந்து கொள்ளலாம்.
நினைவுத்திறனை அதிகரிக்கிறது.

(தொடரும்).



# குங்குலியம் எந்தக் கிழமையில் தூபம் போட்டால் என்ன பலன்?

அனைத்து மதத்தவர்களுக்கும் பொதுவாகவே தூபம் போடும் வழக்கம் உள்ளது. இதன் நோக்கம் —

வீட்டில் நல்ல நறுமணம்

விஷ ஜந்துக்கள், ஈ கொசுக்கள் விலக

மனஅமைதியும், நல்ல நேர்மறை சக்தியும் (Positive Vibration) பெருக

இந்த தூபங்களில் குங்குலியம் மிகுந்த சக்தி கொண்டதாக கருதப்படுகிறது.



### குங்குலியம் என்றால் என்ன?

குங்குலியம் என்பது Commiphora / Acacia வகை மரங்களிலிருந்து பெறப்படும் இயற்கை பிசின் (Resin). பழங்காலத்தில் இந்த பிசின் மரப் பொருட்களை ஒட்ட அரண்மனைகளில் நறுமணத்திற்காக தெய்வ வழிபாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டது. இது நன்கு காய்ந்த பிறகு சாம்பிராணியாக பயன்படுத்தப்படுகிறது

### குங்குலியம் தூபம் போடுவதால் கிடைக்கும் பொதுப் பயன்கள்

வீட்டின் விஷக்காற்று நீங்கும் ஈ, கொசு, விஷ ஜந்துக்கள் வராது

மனஅழுத்தம் குறையும்

தெய்வீக நறுமணம் வீட்டை நிரப்பும்

தீய எண்ணங்கள், எதிர்மறை சக்திகள் விலகும்

### கிழமைகளின் அடிப்படையில் குங்குலியம் தூபத்தின் பலன்கள்

**ஞாயிற்றுக்கிழமை**
ஆத்மபலமும், தன்னம்பிக்கையும் பெருகும்
ஈஸ்வர அருள் கிடைக்கும்

**திங்கட்கிழமை**
மனஅமைதி
அம்பாள் அருள்
குடும்ப ஒற்றுமை

**செவ்வாய்கிழமை**
எதிரிகளின் தொல்லை நீங்கும்
கண் திருஷ்டி, பொறாமை நீங்கும்
கடன் பிரச்சனைகள் குறையும்

**புதன்கிழமை**
சூழ்ச்சிகள், நம்பிக்கை துரோகம் விலகும்
தெளிந்த சிந்தனை
வியாபாரம், கல்வியில் முன்னேற்றம்

**வியாழக்கிழமை**
சுப காரியங்கள் தடையில்லாமல் நடக்கும்
மகான்களின் ஆசி கிடைக்கும்

**வெள்ளிக்கிழமை**
லட்சுமி கடாட்சம் இல்லத்தில் நிலைக்கும்
பணவரவு பெருகும்
செய்யும் காரியம் வெற்றி பெறும்

**சனிக்கிழமை**
சோம்பல், துன்பம், மனச்சோர்வு நீங்கும்
சனீஸ்வரர் & பைரவர் அருள் கிடைக்கும்



### சித்த மருத்துவத்தில் குங்குலியம்

குங்குலியத்திலிருந்து எடுக்கப்படும் குங்குலிய வெண்ணெய் சரும நோய்கள் இருமல், ஆஸ்துமா அல்சர், வயிற்றுப்புண் நீரிழிவு காரணமான ஆறாத புண்கள் தீக்காயங்கள் ஆகியவற்றில் பயன்படுகிறது. (மருத்துவரின் ஆலோசனையுடன் மட்டுமே மருத்துவ பயன்பாடு செய்ய வேண்டும்)

### எங்கு கிடைக்கும்?

அருகிலுள்ள நாட்டு மருந்துக் கடைகளில் "குங்குலியம்" என்று கேட்டால் எளிதில் கிடைக்கும்.

முனைவர்
இராம.வேதநாயகம்

# தினம் ஒரு தலைவர்கள்: மு.பக்தவத்சலம் வரலாறு

அக்டோபர் 1897 13 பிப்ரவரி 1987) சென்னை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார். விடுதலைப் போராட்டக் காலங்களில் அமராவதி சிறையில் அடைக்கப்பட்டு எண்ணற்ற இன்னல்களை அனுபவித்தவர். 1963 ஆம் ஆண்டு மதராஸ் முதல்வராகப் பொறுப்பேற்ற பின் தமது நிருவாகத் திறனை திறம்பட வெளிப்படுத்தியவர். இந்து சமய அறநிலையத்துறையின் திருக்கோவில்களின் நிதியிலிருந்து பள்ளிகள், கல்லூரிகள், மாணவர் விடுதிகள் போன்ற சமுதாய நலத்திட்டங்களைத் தொடங்கலாம் என்ற சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்தவர்.

1960ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் அழைப்பை ஏற்று அந்நாட்டிற்குச் சென்று வந்த அவர், 'இன்னும் இரு ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் நிறைவேற்றி விட்டால் நாமும் அவர்களது நிலையை அடைந்துவிடலாம், என்று அப்போதே நம்பிக்கையுடன் குறிப்பிட்டவர். அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் ஒரு மனிதாபிமான உணர்வோடு, மனிதநேய உணர்வோடு வாழ்ந்து காட்டியவர்.

### நினைவிடம்

தமிழ்நாடு அரசு எம்.பக்தவத்சலம் நினைவைப் போற்றும் வகையில் சென்னை கிண்டியில் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவருக்கு நினைவிடம் அமைத்து, எம்.பக்தவத்சலம் அவர்களின் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவின் அரசியல் சூழல் பிராமணர் - பிராமணர் அல்லாதார் என்று அணி பிரிந்து கிடந்த காலத்தில், பிராமணர் அல்லாதார் தரப்பிலிருந்து தேசிய இயக்கத்தை வலுப்படுத்தியவர் அவர். 1934-லேயே மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரை முன்மாதிரியாகக் கொண்டே பக்தவத்சலமும் அரசியல் களத்துக்குள் அடியெடுத்துவைத்தார். வழக்கறிஞர் பட்டம் பெற்ற பக்தவத்சலம், அதைத் தொழிலாகத் தேர்ந்தெடுக்காமல் சுதந்திரப் போராட்டத்தில் முழு மூச்சாகப் பங்கெடுத்தார். மும்முறை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு திருச்சி, வேலூர், மதுரை உள்ளிட்ட சிறைகளில் தண்டனையை அனுபவித்தார். அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடுவதால் அந்த ஆட்சியில் சிறையில் எந்தவிதமான சலுகைகளையும் கோரக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர்.

### நல்ல நிர்வாகி

1964-ல் காமராஜர் காங்கிரஸின் தேசியத் தலைமையை ஏற்றுக்கொள்ள அவரையடுத்து தமிழக முதல்வராக பக்தவத்சலம் பொறுப்பேற்றுக்கொண்டார். உட்கட்சியில் தேர்தல் நடத்தப்பட்டு, ஜனநாயக முறையில் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவர். ஆனால், வாய்ப்பும் பெரும்பான்மையும் மட்டுமே அவர் முதல்வரானதற்குக் காரணமல்ல. 1937-ல் ராஜாஜியின் முதல் அமைச்சரவையிலேயே அங்கம் வகித்தவர் அவர். சுதந்திரத்துக்கு முன்பும் பின்புமாக காங்கிரஸ் அமைச்சரவைகளில் விவசாயம், கல்வி, பொதுப் பணித் துறை, அற நிலையத் துறை என்று பல்வேறு துறைகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அமைச்சரவை அனுபவம் பெற்றவர். நல்ல நிர்வாகி என்று பெயரெடுத்தவர்.

1946-ல் அவர் பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோதுதான் கீழ்பவானி அணைக்கட்டுத் திட்டம் உருவானது. கொங்கு மண்டலத்தின் முன்னேற்றப் படிகளில் அது முக்கியமான ஒன்று. அவர் விவசாயத் துறை அமைச்சராகப் பதவி வகித்தபோதுதான், கோவை விவசாயக் கல்லூரி மேம்படுத்தப்பட்டது. அதுவே இன்று பல்கலைக்கழகமாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அறநிலையத் துறை அமைச்சராகப் பதவி வகித்தபோது, கைவிடப்பட்ட நிலையில் இருந்த நூற்றுக்கணக்கான கோயில்களைப் புனரமைத்தார். அதிக வருமானம் கிடைக்கும் கோயில்களின் சார்பில் கல்வி நிறுவனங்களைத் தொடங்கினார். தருமபுர ஆதீனம் அவருக்கு நல்லறங்காவலர் என்று பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. கோயில் நிர்வாகத்தில் அரசின் தலையீடு என்று அந்த நாட்களில் எந்தக் குற்றச்சாட்டும் எழுந்ததில்லை.

### தொழில் துறையும் கல்வியும்

ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்திலிருந்து ஆந்திர பிரதேசம் பிரிந்து சென்றதால் வேளாண் உற்பத்தி சரிந்த நிலையில், தமிழகத்தைத் தொழில் துறையில் முன்னணி மாநிலமாக உயர்த்தியதில் காமராஜர் தலைமையிலான சி.சுப்ரமணியன், பக்தவத்சலம், ஆர்.வெங்கட்ராமன் கூட்டணிக்கு முக்கியப் பங்குண்டு. பக்தவத்சலம் முதல்வராகப் பொறுப்பு வகித்தபோது ஆர். வெங்கட்ராமன் தொழில் துறை அமைச்சராக இருந்தார். அவரை முழுச் சுதந்திரத்துடன் பணியாற்ற பக்தவத்சலம் அனுமதித்தார். தமிழகத்தின் தொழில் துறை வளர்ச்சியில் பக்தவத்சலம்-வெங்கட்ராமன் நட்புறவின் பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரப்பட வேண்டியது. முதலமைச்சருக்கும் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சருக்கும் இடையிலான உறவுக்கும்கூட அது ஒரு முன்னுதாரணம்.



பக்தவத்சலம் ஆட்சிக் காலத்தில்தான் உயர்நிலைப் பள்ளிகளில் மீண்டும் ஆங்கில வழி வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் ஆங்கிலம் கற்பிக்கும் திறனை மேம்படுத்துவதற்காகப் பணியிடைப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. பின்னாட்களில், தமிழக மாணவர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தங்களது உயர் படிப்புகளைத் தொடர இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. அதே நேரத்தில், கல்லூரிகளில் தமிழில் கற்கும் வாய்ப்பு உருவானதும் அவரது ஆட்சிக் காலத்தில்தான். புகுமுக வகுப்புகளைத் தமிழில் நடத்துவதற்கு மானியங்களை அளித்து ஊக்குவித்தார். இவர் காலத்தில் தொடங்கப்பட்ட தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்தான் இன்று பாடநூல் நிறுவனமாக விரிந்துபரந்துள்ளது.

வெள்ளையனே வெளியேறு காலகட்டத்தில் காங்கிரஸிலிருந்து ராஜாஜி வெளியேறியபோது, காமராஜருடனும் காங்கிரஸுடனும் இணைந்து நின்ற பக்தவத்சலம் இந்திரா காலத்தில் காங்கிரஸ் உடைந்தபோது சி.சுப்ரமணியத்துடன் இணைந்து இந்திராவுடன்தான் நின்றார். ஆனால், இந்த முடிவுகள் எதுவும் அவரது தனிப்பட்ட அரசியல் லாபங்களுக்காக எடுக்கப்படவில்லை. அவரது இறுதிக் காலத்தில் பலமுறை அவருக்கு ஆளுநர் பதவிக்கான அழைப்புகள் வந்தபோது நான் பென்ஷன்வாதியல்ல, அரசியல்வாதி என்று சொல்லி அதை மறுத்தவர் அவர்.

### அரசியலில் இழந்தவர்

பக்தவத்சலத்தின் தந்தையார் இறந்தபோது அவருக்கு 100 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தில் ஒரு சென்ட் அளவுகூட பக்தவத்சலத்தால் பாதுகாக்கப்படவில்லை. அரசியலுக்காக அவர் அளித்ததுதான் அதிகமே ஒழிய அங்கிருந்து பெற்றுக்கொண்டது பெயரையும் புகழையும் மட்டும்தான். அமெரிக்காவில் உயர் கல்வி முடித்த அவரது மகனுக்கு அரசுப் பணிக்குக்கூட அவர் முயலவில்லை. வட இந்தியாவில் தனியார் நிறுவனம் ஒன்றில்தான் அவர் பணியாற்றினார். அதேபோல, அவரது மகள்களில் ஒருவர் ஹோம் சயின்ஸ் படிக்க விரும்பினார். தந்தையின் பெயரைப் பயன்படுத்தி பரிந்துரைகள் பெறுவதற்கு அனுமதியில்லை. எனவே, வேறொரு கல்லூரியில் புவியியல் படித்தார். இன்னொரு மகள், வீட்டு வசதி வாரியத்தில் மனு போட்டிருந்தார். அது தெரிந்து இவர் தடுக்கவே கடைசியில் அவர் மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். அவரது மகள்களில் ஒருவரும் சமூக சேவகியான சரோஜினி வரதப்பனுக்கு சட்டமன்ற மேலவை அல்லது நாடாளுமன்ற மாநிலங்களவையில் இடம் கிடைக்கலாம் என்ற வாய்ப்பு வந்தது. ஒரு வீட்டில் இருவர் பதவி வகிக்கக் கூடாது என்று அந்த யோசனைக்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டார். குடும்பமும் உறவுகளும் எப்போதும் எந்த உதவியும் அவரிடமிருந்து பெற முடியாது என்பதில் உறுதியாக இருந்தார் பக்தவத்சலம். ஆனால், மக்களுக்கு அவர் வீடும் அலுவலகமும் கதவுகளைத் திறந்தே வைத்திருந்தன. காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரையில் யாரும் அவரைச் சந்தித்துப் பேச முடியும். அமைச்சராக இருந்த காலத்திலிருந்தே சேவகர்கள் தன்னைப் பின்தொடர்வதையும் வாகனத்தில் சைரன் ஒலிப்பதையும் தவிர்த்தவர். தனிமனித வாழ்க்கையிலும் பொதுவாழ்க்கையிலும் முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்க பல பண்புகளையும் ஒருங்கே பெற்ற பக்தவத்சலம் அரசியலில் தோல்வியுற்றதற்கு முக்கியக் காரணமும்கூட அவரது பண்புகளில் ஒன்றுதான். கட்சிக்கும் தலைமைக்கும் அவர் காட்டிய அளவுகடந்த விசுவாசமே அது.

### தோல்வியின் காரணங்கள்

காமராஜருக்குப் பிறகு கட்சியில் தேர்தல் நடத்தப்பட்டு பெரும்பான்மையைப் பெற்றே பக்தவத்சலம் முதல்வரானார். ஆனால், காமராஜரின் அமைச்சரவை அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் அவரைப் பின்தொடர்ந்தது. ஒரு முதல்வராக அவர் தன்னிச்சையாக முடிவெடுக்காத நிலையில் இருந்தார். அன்றைய காங்கிரஸின் தேசியத் தலைமை எடுத்த முடிவுகளுக்கெல்லாம் தலையசைத்தார். மிக முக்கியமாக, கட்சித் தலைமையின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப மொழிப் போராட்டங்களை அவர் கையாளத் தொடங்கியபோது அவருடைய ஆட்சி மூர்க்கமானது. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட தவறுகளை அடுத்து வந்த தேர்தலிலும்கூட அவரால் சரிசெய்துகொள்ள முடியவில்லை. அவர் பரிந்துரைத்த வேட்பாளர்களின் பட்டியல் புறந்தள்ளப்பட்டது. கட்சியின் வேட்பாளர் பட்டியலையும் கட்சியின் தேசியத் தலைமையே முடிவுசெய்தது. தமிழ்நாட்டில் கொழுந்துவிட்டு எரியலான தமிழ் உணர்வு பக்தவத்சலத்தின் ஆட்சி, அவருடைய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்ததோடு, தமிழ்நாட்டில் தேசியக் கட்சிகளின் ஆட்சிக் கனவுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. எவ்வளவு நல்ல நிர்வாகியாக இருந்தாலும், தியாகங்களை செய்தாலும் 'மக்களா; கட்சியா?' என்ற சூழல் வரும்போது அரசியலில் மக்கள் பக்கம் நின்று அவர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிப்பவர்களே மக்கள் மனதில் நிலைத்திருப்பார்கள் என்பதற்கான வரலாற்றுப் பாடம் ஆகிப்போனார் பக்தவத்சலம்.

# வெளிநாட்டிற்கு குடும்பத்துடன் சென்றுள்ள நடிகை





தென்னிந்திய அளவில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் சினேகா. இவர் நடிப்பில் கடைசியாக கோட் படம் வெளிவந்தது. இதை தொடர்ந்து மூக்குத்தி அம்மன் 2 படத்தில் நடித்து வருகிறார்.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை சினேகா அவ்வப்போது தனது சமீபத்திய புகைப்படங்களை அதில் பதிவு செய்வார். அந்த வகையில், குடும்பத்துடன் வெளிநாட்டிற்கு Vacation சென்றுள்ள புகைப்படங்களை தற்போது பதிவிட்டுள்ளார்.

நடிகர் ஆக்ஷன் கிங் அர்ஜுனின் மகள் ஐஸ்வர்யா தற்போது வளர்ந்து வரும் நடிகையாக இருந்து வருகிறார். தமிழில் அவருக்கு பெரிய அளவில் பட வாய்ப்புகள் கிடைக்காத நிலையில் கன்னடத்தில் தான் அதிகம் கவனம் செலுத்துகிறார்.

தற்போது ஐஸ்வர்யா அர்ஜுன் சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்கள் வைரல் ஆகி இருக்கிறது. அவர் ரசிகர்களை அதிகம் கவர்ந்து வரும் அழகிய ஸ்டில்களை இதோ பாருங்க.



# நடிப்பில் இருந்து இடைவெளி எடுத்துக் கொண்டது ஏன்?




நடிகை ஸ்ருதிஹாசன், துல்கர் சல்மான் ஜோடியாக 'ஆகாசம்லோ ஒக தாரா' என்ற படத்தில் நடித்து வருகிறார். தெலுங்கில் உருவாகும் இப்படம் தமிழ் உள்ளிட்ட 5 மொழிகளில் வெளியாக இருக்கிறது. இப்படத்திலிருந்து அவருடைய தோற்றம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: பாடுவது, இசையமைப்பது, எழுதுவது, நடிப்பு ஆகிய துறைகளில் நான் சென்று கொண்டிருக்கிறேன். இதற்கு கலைகளில் பல்வேறு திறமை கொண்ட பெற்றோருடன் வளர்ந்தது காரணம். நான் வளர்ந்த சூழல் எனக்கு அதைத் தந்திருக்கிறது. நான் விரும்பிய விஷயங்களைச் செய்ய அனுமதி வழங்கியது.

2018-ல் நடிப்பிலிருந்து சில காலம் இடைவெளி எடுத்துக் கொண்டது பற்றி கேட்கிறார்கள். அந்த இடைவெளி, நான் யார் என்பதை மறுமதிப்பீடு செய்து, என்னை நானே ஆராய்வதற்கான நேரமாக இருந்தது. சில மனநலப் பிரச்சினைகளுக்காகவும் நேரம் எடுத்துக்கொண்டேன்.

நான் பல ஆண்டுகளாகக் கடுமையான பதற்றத்தால் அவதிப்பட்டேன். அந்த பதற்றத்துடன் அன்றாட நடவடிக்கைகளைத் தொடர முடியவில்லை. நான் எதைத் தேடுகிறேன், நான் யார் என்பதில் எனக்குத் தெளிவில்லை. அந்த இடைவெளியில், லண்டனில் இருந்தேன். அங்கு இசையின் மூலம் என்னை நான் மீண்டும் கண்டறிந்தேன்.

தினமும் என் உடைகளை நானே துவைப்பது, எனக்கான உணவை நானே சமைப்பது, மெட்ரோ ரயிலில் பயணிப்பது, திரும்பி வந்து புதிதாக எழுதப் பயிற்சி செய்வது, பின்னர் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அந்த இசையைச் சோதித்துப் பார்ப்பது என என் வாழ்க்கையை அமைத்திருந்தேன்.

இப்போது ஒரு கலைஞராக இருப்பதை மிகவும் விரும்புகிறேன். அது மகிழ்ச்சியைத் தருகிறது. வழக்கமான கதாபாத்திரங்களை விடுத்து சவாலான வேடங்களில் நடிக்கவும் ஆர்வமாக இருக்கிறேன். இவ்வாறு ஸ்ருதிஹாசன் கூறினார்.

## முழு படமும் பார்க்காமல் கருத்து சொல்வதா? 'ஹாட்ஸ்பாட் 2' இயக்குநர் வருத்தம்






விக்னேஷ் கார்த்திக் இயக்கத்தில் அஸ்வின் குமார், பிரியா பவானி சங்கர், எம்.எஸ்.பாஸ்கர், தம்பி ராமையா, ஆதித்யா பாஸ்கர், ரக்சன், பவானி, பிரிகிடா சகா உள்ளிட்ட பலர் நடித்துள்ள படம் 'ஹாட் ஸ்பாட் 2'.

ஜன. 23-ல் வெளியான இப்படம் வரவேற்பு பெற்றதை அடுத்து இதன் வெற்றி விழா சென்னையில் நடைபெற்றது. படக்குழுவினர் கலந்துகொண்டனர். விழாவில் இயக்குநர் விக்னேஷ் கார்த்திக் பேசும்போது, "ஹாட்ஸ்பாட் படத்தின் முதல் பாகம் குறைவான திரையரங்குகளில் வெளியாகி, ஐந்து வாரங்கள் வெற்றிகரமாக ஓடியது. பெரும் வரவேற்பும் இருந்தது.

ஹாட்ஸ்பாட் படத்தின் முதல் பாகத்தின் ஒட்டுமொத்த வசூல் எவ்வளவோ, அதைவிட 2 மடங்கு வெளியான 4 நாளில் இப்படம் வசூலித்திருக்கிறது. அந்த வகையில் இது வெற்றிதான். படத்தில், தம்பி ராமையா பேசும் வசனங்கள் தொடர்பாக இணையத்தில் ஆதரவாகவும், எதிராகவும் விமர்சனங்கள் இடம் பெற்றுள்ளன.

ஒரு படம் பிடித்திருக்கிறது என்பதும் பிடிக்கவில்லை என்பதும் படத்தைப் பார்த்த ஒவ்வொரு ரசிகர்களின் தனிப்பட்ட கருத்து. அதை மதிக்கிறோம். ஆனால் பெண்ணியவாதிகள் சிலர், தங்களின் கருத்துகளை இணையத்தில் பகிர்ந்து கொள்கிறார்கள்.

இவர்கள் இந்த திரைப்படத்தை முழுமையாகப் பார்க்காமல், இணையத்தில் வெளியான துண்டு காணொளிகளை மட்டும் பார்த்துவிட்டு சில போலி பெண்ணியவாதிகள் தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் இந்தப் படத்தை முழுமையாகப் பார்த்துவிட்டு கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்" என்றார்.

# 2016-2022 ஆண்டுகளுக்கான அரசு திரைப்பட விருதுகள் அறிவிப்பு: பிப்.13-ம் தேதி துணை முதல்வர் உதயநிதி வழங்குகிறார்



தமிழக அரசு சார்பில் 2016 முதல் 2022 வரையிலான 6 ஆண்டுகளுக்கான திரைப்பட விருது கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறந்த நடிகர், நடிகை விருதுகள் தனுஷ், சூர்யா, கார்த்தி, விஜய்சேதுபதி, கீர்த்தி சுரேஷ், நயன்தாரா, ஜோதிகா உள்ளிட்டோ ருக்கு வழங்கப்படுகிறது.

சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகைகளுக்கு தமிழக அரசு சார்பில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, 2016 முதல் 2022 வரையிலான 6 ஆண்டுகளில் வெளியான திரைப்படங்களில் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தமிழக அரசின் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதேபோல், 2014 முதல் 2022-ம் ஆண்டு வரையான சிறந்த நெடுந்தொடர்கள், கதாநாயகன், கதாநாயகி, வாழ்நாள் சாதனையாளர், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு சின்னத்திரை விருதுகளும், 2015 -16 கல்வியாண்டு முதல் 2021 22 கல்வியாண்டு வரை தமிழ்நாடு அரசு எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் விருதுகளும் தேர்வு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

நடிகர்கள் விஜய்சேதுபதி, கார்த்தி, தனுஷ், ஆர்.பார்த்திபன், சூர்யா, ஆர்யா, விக்ரம் பிரபு ஆகியோர் சிறந்த நடிகர்களாகவும், நடிகைகள் கீர்த்தி சுரேஷ், நயன்தாரா, ஜோதிகா, மஞ்சுவாரியர், அபர்ணாபாலமுரளி, லிஜோமோல் ஜோஸ், சாய்பல்லவி ஆகியோர் சிறந்த நடிகைகளாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாநகரம், அறம், பரியேறும் பெருமாள், அசுரன், கூழாங்கல், ஜெய்பீம், கார்கி ஆகியவை சிறந்த திரைப்படங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. சின்னத்திரை விருதுகளுக்காக நடிகர்கள் ஆர்.பாண்டியராஜன், கவுசிக், கிருஷ்ணா, தலைவாசல் விஜய், வ.சஞ்சீவ், ஜெய்ஆகாஷ், கார்த்திக்ராஜ் ஆகியோர் சிறந்த கதாநாயகர்களாகவும், நடிகைகள் ராதிகா சரத்குமார், வாணிபோஜன், நீலிமாராணி, சங்கவி, ரேவதி, ரேஷ்மா, சபானா ஷாஜகான், கெபரல்லா செல்லஸ், சைத்ரா ஆகியோர் சிறந்த கதாநாயகிகளாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அழகி, ரோமாபுரி பாண்டியன், இராமனுஜர், நந்தினி, பூவே பூச்சூடவா, செம்பருத்தி, இராசாத்தி, சுந்தரி, எதிர் நீச்சல் ஆகிய தொடர்கள் சிறந்த நெடுந்தொடர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூ.2 லட்சமும், 2-ம் பரிசாக ரூ.1 லட்சமும், 3-ம் பரிசாக ரூ.75 ஆயிரமும், சிறப்புப் பரிசாக ரூ.75 ஆயிரமும், பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் படத்துக்கு சிறப்புப் பரிசு ரூ.1.25 லட்சமும் வழங்கப்படுவதுடன், சிறந்த நடிகர், நடிகையர் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சின்னத்திரை சிறந்த நெடுந்தொடர்களுக்கு முதல் பரிசாக ரூ.2 லட்சமும், 2-ம் பரிசாக ரூ.1 லட்சமும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் பரிசாக ரூ.1 லட்சமும், ஆண்டின் வாழ்நாள் சாதனையாளர் பரிசாக ரூ.1 லட்சமும் வழங்கப்படுவதுடன், சிறந்த கதாநாயகன், கதாநாயகி, சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது. திரைப்பட விருதுகள் வழங்கும் விழா பிப்.13-ம் தேதி மாலை 4.30 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது. விருதுகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி கவுரவிக்கிறார்.

# இப்போதுவரை எனக்கு இசை தெரியாது: இளையராஜா



அஜந்தா-எல்லோரா சர்வதேச திரைப்பட விழா, மகாராஷ்டிரா மாநிலம் சத்ரபதி சம்பாஜிநகரில் நடந்து வருகிறது. பிப் 4-ம் தேதி வரை நடைபெறும் இவ்விழாவில் இசை அமைப்பாளர் இளையராஜாவுக்கு வாழ்நாள் சாதனையாளருக்கான பத்மபாணி விருது நேற்று வழங்கப்பட்டது.

விருதுபெற்ற பின் பேசிய இளையராஜா, “இந்த விழாவுக்கு வருவதற்கு முன்பு எனது 1,541-வது படத்தின் பின்னணி இசையை முடித்துவிட்டு வந்தேன். என்னிடம் பலர் எப்படி பாடல்களை உருவாக்குகிறீர்கள் எனக் கேட்கிறார்கள்.

அவர்களிடம், இப்போதுவரை எனக்கு இசை தெரியாது என்று சொல்கிறேன். அதனால்தான் இன்னும் வேலை செய்து கொண்டிருக்கிறேன். இசை பற்றி எல்லாம் தெரிந்திருந்தால், நான் அதில் தேர்ச்சி பெற்றுவிட்டேன் என நினைத்து வீட்டிலேயே இருந்திருப்பேன். நான் என்னை வாழ்நாள் முழுவதும் இசை மாணவனாகக் கருதுகிறேன். நான் நவீன தொழில் நுட்பங்களை நம்பியிருக்கவில்லை” என்று தெரிவித்தார்.

ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவர் மிர்னாளினி ரவி. இவர் சூப்பர் டீலக்ஸ், கோப்ரா, ரோமியோ, எனிமி போன்ற படங்களில் நடித்துள்ளார். தமிழில் மட்டுமின்றி தெலுங்கிலும் இவர் படங்கள் நடித்து வருகிறார். இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் மிர்னாளினி ரவி தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை அவ்வப்போது அதில் பதிவு செய்வார்.



# காந்தி டாக்ஸ் - விமர்சனம்!




நடிகர்கள் விஜய் சேதுபதி, அரவிந்த் சாமி நடிப்பில் வசனங்களே இல்லாத திரைப்படமான காந்தி டாக்ஸ் இன்று வெளியாகியுள்ளது. யார் பணக்காரர், யார் ஏழை என அப்பட்டமாகத் தெரியும் பெருநகர வாழ்க்கையின் பிம்பமாக கதை மும்பையில் நடக்கிறது. அடுத்த வேளை உணவிற்குக் கஷ்டப்படும் ஏழ்மையில் இருக்கும் விஜய் சேதுபதியும் மிகப்பெரிய பணக்காரரான அரவிந்த் சாமியும் அடுத்தவர்கள் வாங்கும் லஞ்சங்களால் எப்படி தங்களை இழக்கிறார்கள் என்பதை அவர்களிடம் இருக்கும் ரூ.100 நோட்டிலும் ரூ. 2000 நோட்டிலும் சிரித்தபடி காந்தி பார்த்துக்கொண்டிருக்கிறார். இறுதியில், அவரவர் பணப் பிரச்னைக்குத் தீர்வு கிடைத்ததா? என்பதே கதையின் ஒன்லைன். மனிதன் பேசாவிட்டால் என்ன? எப்போதும் பணம்தானே இங்கே பேசிக்கொண்டிருக்கிறது? ஒவ்வொரு கணமும் பணம் இருந்தால் மட்டுமே நம் வாழ்க்கை நகரும் என்பதை வசனங்களே இல்லாமல் காந்தி டாக்ஸ் பேசுகிறது.

ஒருவேளை உணவிலிருந்து மரணம் வரை நம்முடன் காந்தி இருக்க வேண்டிய தேவை உள்ளது. பணத்தாளில் காந்தி எவ்வளவு அதிகமாக சிரிக்கிறாரா நாமும் நிம்மதியாக இருக்கலாம். நிம்மதி பணத்தால் மட்டுமே வந்துவிடுமா என்ன? அதுவும் இதில் பதிவாகிறது. நம்முடைய ஆன்மாவை அடகுவைத்து பணத்தைத் துரத்தும் நிலைக்கு லஞ்சமும் ஊழலும் இங்கும் பெருக்கெடுத்து ஓடுகின்றன. 'நீயே மாற்றமாக இரு' என காந்தி சொன்னதெல்லாம் யாருக்கு நினைவில் இருக்கப் போகிறது? முக்கியமாக அரசியல்வாதிகளுக்கு... அரசு அதிகாரிகளுக்கு...

பணம் இருப்பவனும் இல்லாதவனும் அரசு அதிகாரங்களுக்கு முன் ஒன்றுதான் என்கிற நிலையைக் கதாபாத்திரங்களின் ஊடாக இயக்குநர் கிஷோர் பாண்டுரங் பலேகர் உணர்த்தியிருக்கிறார். உடல்நலம் சரியில்லாத அம்மாவைச் சுமக்க வேண்டிய மகனாகவும் காதலியைக் கரம்பிடிக்க காத்திருக்கும் காதலனாகவும் விஜய் சேதுபதியிடமிருந்து வழக்கம்போல இயல்பான நடிப்பு வெளிப்படுகிறது. மௌனமும் இயலாமையும் கையைப்பிசையும் இடங்களில் தன் முகபாவனைகளால் வறுமையின் கொடுமைகளை உணர வைக்கிறார்.

அனைத்து ரூபாய் தாள்களிலும் காந்தி சிரித்தாலும் அதை வைத்திருப்பவர்களிடம் ஏமாற்றமும், குற்றவுணர்வுமே எஞ்சியிருக்கிறது என்பதை மறைமுகமாக பதிவு செய்ய இயக்குநர் விழைந்திருக்கிறார். சஸ்பென்ஸ் திரில்லராக உருவானாலும் சில காட்சிகள் அயர்ச்சியைத் தருகின்றன. நீதிமன்ற காட்சியில் வாட்ஸப் வாயிலாக நீதிபதி லஞ்சம் வாங்க ஒப்புக்கொள்ள வைத்த காட்சி போன்று இன்னும் சில காட்சிகளை எழுதியிருந்தால் நிறைய இடங்களில் சிரித்து இன்றைய இன்றைய ரீல்ஸ் காலத்திலும் நல்ல கதைக்கு வசனங்கள் ஒன்றும் அவ்வளவு முக்கியமில்லை என்பதை உறுதி செய்திருக்கலாம். இதனால், சுவரஸ்யமான படமாக காந்தி டாக்ஸ் வரவில்லை. நுட்பமாக பார்ப்பவர்களுக்கான படம்.

வசனங்கள் இல்லையென்றால் என்ன? இசை இருக்கிறதே என பல இடங்களில் ஏ. ஆர். ரஹ்மானே காப்பாற்றுகிறார். விஜய் சேதுபதிக்கும் - அதிதிக்கும் இடையேயான அறிமுக காதல் பாடல் மிக அழகான வரிகளுடன் காட்சியமைப்புகளுடனும் எடுக்கப்பட்டிருக்கிறது. கரண் பி. ராவத்தின் ஒளிப்பதிவில் வெளிப்பட்ட ஒளியமைப்பு உணர்வுகளைக் கடத்தும் நுட்பத்துடன் இருந்தன.

என்னதான் கலை முயற்சிகள் என்றாலும் வியாபாரம் என ஏதாவது நடக்க வேண்டுமே? முழு மௌனக்கதையில் இன்றைய நட்சத்திர நடிகர்களான விஜய் சேதுபதி, அரவிந்த் சாமி, அதிதி ராவ் உள்ளிட்டோர் நடிக்க முன்வந்ததற்காக, கையைக் கழக்கும் உண்மையை வசனங்களே இல்லாமல் பேசியதற்காக நடிகர்கள், இயக்குநர், தொழில்நுட்பக் குழுவினருக்கு வாழ்த்துகள்!

# லாக்டவுன் - திரை விமர்சனம்!



அனுபமா பரமேஸ்வரன் நடிப்பில் உருவான லாக்டவுன் திரைப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

ஒரு அமைதியான மிடில் கிளாஸ் குடும்பச்சூழலில் வளர்ந்து வேலை தேடிக்கொண்டிருக்கும் அனிதா (அனுபமா பரமேஸ்வரன்) தோழி ஒருவரிடம் தன் நிலைகுறித்து கூறி வேலை கேட்கிறார். அத்தோழி வேலைக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறுவதுடன், பார்ட்டிக்கு அழைத்துச் செல்கிறார். தயக்கமும் அதன்மீது சிறிய ஆசையும் கொண்ட அனுபமா மதுவிருந்தில் கலந்துகொள்கிறார். பின், இரண்டு மாதங்கள் கழித்து உடல்நலக்குறைவால் மருத்துவமனை செல்லும் அனுபமாவிடம் மருத்துவர், 'வாழ்த்துக்கள் நீங்க கர்ப்பமா இருக்கீங்க” என்கிறார். தொடர்ந்து, கரோனா கால ஊரடங்கும் அமலுக்கு வருகிறது.

எந்த உறவிலும் ஈடுபடாமல் காதலனும் இல்லாத அனுபமா எப்படி கர்ப்பம் தரித்தார்? வீட்டிற்குத் தெரியாமல் அந்தச் சூழலை எப்படிக் கையாள்கிறார்? என்பதை பரபரப்பும் எதார்த்தமும் கலந்த கதையாக சொல்லியிருக்கிறார் இயக்குநர் ஏ. ஆர். ஜீவா.

நடிகர், இயக்குநர் ஏ. ஆர். ஜீவா ஒரு அழுத்தமான உணர்வுப்பூர்வமான கதையைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக உண்மைச் சம்பவத்தையே திரைப்படமாக எடுத்திருக்கிறார். இது உண்மையிலேயே ஒரு பெண்ணுக்கு நடந்த சம்பவம் என்பதால் சில அழுத்தங்களுடன் நிறைவடைவது வரை அதற்கான பதற்றத்துடனே இருக்கிறது.

இன்றைய இளம் தலைமுறையினர் சில விஷயங்களில் எச்சரிக்கை உணர்வுடன் நடக்க வேண்டுமென என்பதை இயக்குநர் பதிவு செய்திருக்கிறார். தமிழ் சினிமாவில் எவ்வளவு கருகலைப்பு காட்சிகள் வந்திருந்தாலும் லாக்டவுனின் காட்சி சமூகம் குறித்த வலுவான கேள்விகளை எழுப்பும்படி உள்ளது.

இப்படத்தில் நடிகர்கள் லிவிங்ஸ்டன், சார்லி ஆகியோர் தந்தைகளாக நடித்திருக்கின்றனர். இதில், லிவிங்ஸ்டன் தன் மகள் காதல் திருமணம் செய்ததால் ஓர் தவறான முடிவை எடுப்பதுபோல காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோர்கள் எப்போதும் சரியானவர்களே என்கிற பார்வையே இக்கதையில் வெளிப்பட்டுள்ளது நேர்மையான எழுத்தாக இல்லை.

நம் வாழ்க்கையின் நன்மை, தீமைகளை நிர்ணயிக்கின்றன என்பதையும் அலசியிருந்தது நன்று. படத்தின் கடைசி 20 நிமிடம் சாதாரண கதை வலிமையாக அசைத்துப் பார்க்கிறது.


லாக்டவுன் கதையில் பேசப்பட்ட விஷயங்கள் பலமும் பலவீனமும் கொண்டதாகவே இருந்தாலும் இப்படத்தில் பதிவான சூழ்நிலைகளும், உண்மைக்கதையும் சில எச்சரிக்கை உணர்வுகளை தட்டி எழுப்புகின்றன.

தொகுப்பாளினியாக சின்னத்திரையில் அறிமுகமாகி பின் சீரியல் நடிகையாக களமிறங்கியவர் பார்வதி. இவர் தற்போது சன் டிவியில் ஒளிபரப்பாகி வரும் எதிர்நீச்சல் தொடர்கிறது சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார். மேலும் ஜியோ ஹாட்ஸ்டாரில் ஒளிபரப்பாகி வரும் போலீஸ் போலீஸ் வெப் தொடரிலும் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், நடிகை பார்வதி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய லேட்டஸ்ட் போட்டோஷூட்டை பதிவு செய்துள்ளார்.



தமிழ்நாடு இ பேப்பர்.காம்



ஆடையலங்காரம்
மிடுக்கான ஒப்பனை

வரவேற்பு பதாகைகள்...
அறுசுவை உணவுகள்...

நாவினிக்கும்.. இனிப்பு
வகைகள்...

என களைகட்டும்
திருமண விழாவில்...
மனதின் ஓரமாய்
குடிகொண்டு தான்
இருக்கிறது..


இத்தனை பெரிய கடனை
அடைப்பது எங்கனம்...
எனும் தீராக்கவலை.
மணப்பெண்ணின்
தந்தைக்கு....

திருமண நிலையம் அதிரும்
மங்கல ஓசையில்...



சன்னமாக ஒலிக்கிறது...
அழைக்கப்படாத ...வறிய
உறவினரின்... விசும்பல்

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## மைதானம்

வெண்ணிலா விளையாட
விண்வெளி மைதானம்
பெண்ணிலா விளையாட
புல் வெளி மைதானம்

அலைகள் விளையாட
கரைகள் மைதானம்

காற்று விளையாட
பூமி மைதானம்

கண்கள் விளையாட
இமைகள் மைதானம்

மீன்கள் விளையாட
கடல்கள் மைதானம்

நானும் நீயும் விளையாட
எது மைதானம்?

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சி கோட்டை

## நான் ஒரு தெருப்பாடகன்.!

ஊருக்குள்ளே எனது பெயர்
தெருப் பாடகன்!
உள்ளத்தில் இருப்பதைத்
தரும் பாடகன்!
நீருக்குள்ளே வாழுகின்ற
மீனைப் போன்றவன்!
நினைவுகளில் நீந்தும்
நான்.. தெருப்பாடகன்!

தெருவோடு இரவினிலே
பாடிக்கொண்டுப் போவேன்..
கருவோடு கலந்த கானம்..
இசைத்தப்படிப் போவேன்!
துறவாத துறவியென
தூரங்களைக் கடந்து..
இறவாதக் கவிதையிலே
இசைப்பாடி வருவேன்!

யாருக்கும் பாரமில்லை
யான் தெருப் பாடகன்!
யாவருக்கும் வேண்டியே
பாடல்பாடும் பாடகன்!
தேவருக்கும் மனிதருக்கும்..
தூதுசெல்ல வந்தவன்!
தெருவெங்கும் நடந்தபடி..
தேடிக்கொண்டு சென்றவன்!

சீருக்குள் சிலசமயம்
என்பாடல் அடங்காது!
சிந்தனைகள் சிறகசைக்கும்
எப்பொழுதும் முடங்காது!
பேருக்கு ஒரு பாடகனாய்..
நான் வாழ முடியாது!
பேருலகம் கேட்கும்வரை
என்பாடல் முடியாது!

தெருவிளக்கின்
வெளிச்சத்தில்..
தேடிக்கொண்டே நடக்கிறேன்!
நெருப்பினிலும் நீரினிலும்..
நடந்துப் பாட்டுப் படிக்கிறேன்.!
மறுபிறவி இருக்கிறதோ..
தெரியாமலே இருக்கிறேன்..
மனதநேய பாட்டுப்பாடி
என்னை நானே மறக்கிறேன்!

## சிந்திக்கச் சொல்லும் செய்தித்தாள்.!

ஜனநாயகம் இதோ..
காலையில் வெளிவருகிறது..
செய்தித்தாள்.!
தேநீர் கடைகளில்..
முடித்திருத்தகத்தில்..
சூடான கிடைக்கும்..
செய்தித்தாள்.!

படிக்காத பாமரனையும்
எழுத்துக்கூட்டிப் படிக்க
வைக்கும் பாடப்புத்தகம்
செய்தித்தாள்.!

நூலக வாசல்களின்
நுழைவாயிலில் மாவிலைத்
தோரணங்கள்.. செய்தித்தாள்.!

அன்பனை இங்கே கம்பனாய்
மாற்றும்.. சம்பளம் இல்லா
சமூக சேவகனாய்..
செய்தித்தாள்.!

படிக்க வாங்குவார்
பலர்!
பொட்டலம் மடிக்க
வாங்குவாங்குவார்
பலர்! ஓசியிலே படிக்கும்
ஒப்பற்றக் காவியம்
செய்தித்தாள்!

கஞ்சனை வள்ளலாக்கும்..
காகித மாலை சூட்டும்..
விளம்பரத்தினாலே வியாபாரம்
பெருக்கும் மாயாவி
செய்திதாள்.!

அறிவுரை பஞ்சமில்லை
ஆன்மிகம் கொஞ்சமில்லை..
அடுமனையைக் கூட அது
விட்டு வைப்பதில்லை..
அறிவு உணவு சமைக்கும்..
செய்தித்தாள்.!

சினிமா பக்கத்தால்
கிழங்களையும் கவரும்..
கிசுகிசு தந்தே கிச்சுக்கிச்சு
ஊட்டும்.. செய்தித்தாள்.!

விடிந்தாலும் மடிந்தாலும்..
கொண்டாலும்
கொடுத்தாலும்.. அச்சேறி
வந்தால்தான் அன்றாடம்
விடியும்.. செய்தித்தாள்.!


நேற்றைய செய்தி பழைய
சோறு.. இன்றையச் செய்தி
சுடச்சுட பொங்கல்.. நாளையச்
செய்தி மரத்தடி சோசியம்..
செய்தித்தாள்.!

அடுத்த வீட்டில் அண்டை
நாட்டில்.. விளையாட்டில்
அடுப்பில் தீ மூட்டி குளிர்
காயும் செய்தித்தாள்.!



அன்றாடம் அது உணவு..
அனைவருக்கும் வரும்
கனவு.. இன்றேனும்
வாசிக்கப் பழகு..
தாளின்றி அசையாது
உலகு. செய்தித்தாள்.!

**வே.கல்யாண்குமார்.**





## "முதுமை தாங்கும் வலிகள்"

எந்த உயிரும் மண்ணில் பிறக்கையிலே!!
அந்த அன்னையின் கருவில் வளர்கையிலே!!
அதை சுகமாய் சுமக்கும் சுமையினிலே!!
இந்த பிரசவம் தந்த வலியினிலே!!

தலைகீழாய் உயிர்கள் தான் பிறக்கும்!!
வலியது தாங்க வழி கிடைக்கும்!!
மண்ணில்அழகிய உயிர் ஜனிக்கும்!!
உளிகள் கொண்டு சிலை செதுக்கும்!!
அந்த வலிகள் தாங்கிட அது நிலைக்கும்!!

மனிதா நீயும் வலி தாங்கும்!.
உளிதரும் துன்பத்தை உள்வாங்கு!!
தாங்கிய கற்கள் சிலையாகும்!!
தாங்கா கற்கள் படியாகும்!!
வாழ்க்கை தத்துவம் இனிதாகும்!!

இளமை சுமையை சுமக்கையிலே!!
வளமை தேடி அலைகையிலே!!
ஆயிரம் வலிகள் உனைத் தாக்கும்!!
வளம்பலகிடைக்கும்வரையினிலே!
பக்குவத்தாலே அதை தாங்கு!!

இளமை ரத்தம் சுண்டி விட
முதுமை கோலம் வந்துவிடும்!!.
பதுமையாக இருந்ததெல்லாம் பழமையாக
மாறிவிடும்!! உடல் பலம் எல்லாம் தளர்ந்து
விடும்!!குடல் இயக்கம் எல்லாம் சுருங்கிவிடும்!!

உச்சம் தலையில் வலி துவங்கி பாதம் வரையில்
அது பரவும்!! நாடி நரம்பு அணைத்திலுமே
நரக வேதனை தான் கொடுக்கும்!!
பணம் தேடி ஓடி அலைந்த உடல்
வாடி வதங்கி தளர்ந்து விடும்.
மருந்து மாத்திரை செயல் இழக்கும்
தூக்கம் மட்டும் துணையாக ஒத்திகை அதனை
தான் பார்க்கும்.

முதுமை தாங்கும் வலிகளுக்கு
உதவிட என்றும் முடியாது!!
மனத்துயர் பேசி தீர்த்திடலாம்!!
பணத்துயர் கொடுத்து உதவிடலாம்!
உடல் துயர் தீர்க்க முடியாது!!
உடன் வாழ்ந்தாலும் அது நடக்காது!!
அவரவர் படும் துயர் அவருக்குள்
அடங்கிடும்.!! சுவரது இடிந்த பின் ஓவியமா
நிலைபெறும்.

முதுமை தாங்கும் வலிகளுக்கு முடிவுரை
என்றும் கிடையாது!! நிரந்தர தூக்கம் வரும்
வரையில் நிம்மதி ஒன்றும் கிடைக்காது!!
வரம்பல வாங்கி வந்தாலும் வருவதை தடுக்க
முடியாது!!

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா**

## வியாபாரக்கல்வி

வறுமையில் வாடுபவர்களை
வசதியாக வாழ வைக்கும் !
"கற்ற கல்வி"

கண் கலங்கி நின்றாலும்
கடல் கடந்து சென்றாலும்
உறுதுணையாக இருக்கும் !
" கற்ற கல்வி "

கைத்தொழில் ஒன்று
இருந்தாலும் கடமைதனை
சரியாகச் செய்ய அரசின்
வரிகளைக்கட்டி கணக்கு
வழக்கில் கண்ணியமாக
இருக்கச் செய்வது !
" கற்ற கல்வி"

ஏர்தழுவி விவசாயம்
செய்தாலும் பல நாட்டில்
ஏற்றுமதி இறக்குமதி தொழில்
செய்தாலும் உற்ற துணையாக
இருப்பது ! " கற்ற கல்வி "

கடவுள் பெயரைச்
சொல்லி நம்ப வைத்து
ஏமாற்றி பிழைப்பவர்களின்
மூட நம்பிக்கைகளை
உடைத்தெரியச் செய்வது !
"கற்ற கல்வி"

நாட்டுமுறை வீட்டுமுறை
வைத்தியத்தை தாண்டி மனித
உறுப்பு மாற்று சிகிச்சை
பல செய்து பரணி போற்ற
பறைசாற்றி நிற்கச் செய்வது
"கற்ற கல்வி"

இப்படி மனித பிறப்பின்
அனைத்து நிகழ்வுகளிலும்
ஆதரமாக இருக்கும் நாம்
" கற்ற கல்வி "

தற்போது வியாபார
நோக்கத்தில் "கற்ற கல்வி"
ஆகிவிட்டது
"விற்ற கல்வி"
தயவு செய்து
அனைவருக்கும்
கிடைக்கட்டும்!
"இலவசக்
கல்வி" "அரசின்
ஒரேக்கல்வி"



**G.A.கோவிந்தராஜ்**
**(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



## வீரத்தழும்பு !

தன்னை வளர்த்தவரிடம்
அதிகமாக அடி வாங்கிய
காளையும்,
காளையை அடக்க அதிக
காயத்தழும்புகளும் !



பெற்றவர்களே
ஜல்லிக்கட்டு
போட்டியில்
சிறந்தவர்களாய்
திகழ்கின்றனர்!

**எம்.பி.**
**தினேஷ்.**
கோவை

## ஏன் இப்படி இருக்கிறீர்கள்?

ஊருக்கு நியாயம்
பேசுகிறார் சிலர்
தன்னுள்ளே நியாயம்
மறுக்கிறார்..

பேருக்கு உறவைப்
பேணுகிறார்
வெற்றுப் பணத்திற்கு
ஆட்டம் போடுகிறார்..

நல்பழக்க வழக்கம்
கற்கவில்லை
நாளும் சாதிப்பெருமைப்
பீற்றுகிறார்..

பண்பிலாப் புதல்வரைப்
பெற்றெடுத்தே
பகட்டுப் பேச்சில்
பல்லிளிக்கிறார்..

வாயடைக்கச் சோறும்
பாயடைக்கத் தூக்கமும்
போதுமிவருக்கு
நாள் கழிக்க....

கோபப்படத் தெரிந்த
இவர்களுக்கு
ரோஷம் கொள்ளத்
தெரியாது..

சாவு வீடாக இருந்தாலும்
சடங்கு வீடாக இருந்தாலும்
கூட்டத்தில் ஆடி நிற்பர்



கூச்சத்தை
அறுத்து
விட்டு

வீச்சமாய்
விரவிக்
கிடப்பர்..

**ஹரணி** தஞ்சாவூர்

## தொடரும் உறவுகள்

நிழல்கள் தொடரும் நீரும்
நிலவும் உள்ளவரை !

நினைவுகள் தொடரும்
நெஞ்சு இருக்கும் வரை!

கனவுகள் தொடரும் கண்கள்
திறக்கும் வரை!

கவிதைகள் தொடரும்
கவிஞர்கள் வாழும் வரை!

காதல் தொடரும் கல்யாண
காலம் வரை!
கடமைகள் தொடரும்
காலங்கள் முடியும் வரை!



உறவுகள்
தொடரும்
உயிர் மூச்சு
நிற்கும் வரை!

**மீனாட்சி**
**பாண்டியன்**
திருவண்ணாமலை



## திருவருட் பிரகாச வள்ளலார்!

நேரிசை வெண்பா!

கடவுள் ஒருவரே
என்றேதான் கண்டார்
படைத்தார் திருவருட்பா
பாங்காய்...வடலூர்
பெருமானே பீடுறு
வள்ளலாரே அன்றே
திருவருள் பெற்றாரே
தேர்ந்து!

அருட்பெருஞ் சோதி
அருளான வள்ளல்
முருகனருள் பெற்றாரே
முன்னே...திருவருட்பா
தந்திட்டார் மாந்தரே
சாந்தாய் மணந்திட
விந்தையாம் வள்ளலார் வீறு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
**திருவண்ணாமலை.**

# நூல் விமர்சனம்

"பிரியாத உறவுகள் "
சிறுகதைகள்
நூல் ஆசிரியர்:
நல.ஞானபண்டிதன்
9788685905
பதிப்பகம் : கீதம் பதிப்பகம்
சென்னை
வாழ்த்துரை: எழுத்தாளர்,
செ.ப.சிவராசன்
ஒருங்கிணைப்பாளர்
கவிஞாயிறு இலக்கியக்குழுமம்

தமிழ் இலக்கியத்தின் பெருந்தோட்டத்தில் தினமும் மலர்ந்து கொண்டிருக்கும் புது மலர்களில் ஒன்று நல.ஞானபண்டிதன் அவர்களின் "பிரியாத உறவுகள்"என்னும் சிறுகதை தொகுப்பு, வாழ்க்கையின் நுண்ணிய உணர்வுகளை, மனித உறவுகளின் இனிமையையும், வேதனைகளையும் நம் சமுகத்தின் மெய்யுண்மைகளையும், கலைமொழியாக வடித்தெடுத்திருக்கும் இந்நூல்,வாசகரின் மனதை தொடும் ஒரு அரிய முயற்சி.

ஒவ்வொரு சிறுகதையும் ஒரு இதயத் துடிப்பைப் போல் ஒலிக்கிறது. நம் அன்றாட வாழ்வின் நிகழ்வுகள் ஒரு தந்தையின் அமைதியான அன்பு,ஒரு தாயின் சொல்லாமை நிறைந்த தியாகம் ,ஒரு தோழனின் நம்பிக்கை,ஒரு பெண்ணின் மனவலிமை இவை அனைத்தும் எழுத்தாளரின் கண்ணோட்டத்தில் புது வித ஒளி பெறுகின்றன. பிரியாத உறவுகள் என்பது வெறும் சிறுகதை தொகுப்பாக அல்ல; அது நம் உள்ளங்களுக்குள் உறையும் நினைவு களின் சங்கமம்.

நல.ஞானபண்டிதன் அவர்கள் கதைகளில் காணப்படும் மொழிச் சீர்மை,உணர்ச்சிமிக்க புனைவு,மனித வாழ்க்கையின் ஆழமான நிழல்கள் ஆகியவை வாசகரை சிந்திக்க வைக்கும். அவரது எழுத்து எளிமையாக இருந்தாலும்,அதன் பின்னால் ஒர் ஆழ்ந்த அனுபவப் பெருங்கடல் உள்ளது. நம் மண்ணின் வாசனையோடு கலந்த அந்த எழுத்துக்கள் வாசகர்களிடம் நெருக்கமாக பேசுகின்றன.

"பிரியாத உறவுகள் " என்ற தலைப்பே மனித வாழ்வின் மைய உண்மையை நினைவூட்டுகிறது. சில உறவுகள் சொல்லாமல் பேசுகின்றன,பிரிந்த பின் கூட,நிழலாக நம்மிடம் பயணிக்கின்றன. அந்த மௌன உறவுகளை நயமாக கதை வடிவில் வடித்திருப்பது நல.ஞானபண்டிதன் அவர்களின் கை வண்ணம் .

இந்த நூலின் ஒவ்வொரு சிறுகதையும் தனித்தனியாக வாசகனின் மனதைத் தொட்டுச் செல்கின்றது;அதே சமயம்,அனைத்தையும் இணைக்கும் ஓர் உணர்வுப் பாலம் உள்ளது அதுவே "அன்பு".அந்த அன்பின் பல வடிவங்களையும் வாழ்க்கையின் பல பரிமாணங்களையும் எழுத்தாளர் நயமுடன் வடித்துள்ளார்.

இன்றைய வேகமான உலகின் உணர்வுகளுக்கான இடம் குறைந்து வரும் நிலையிலும்,இந்நூல் மனித மனத்தின் துடிப்பை மீண்டும் உணர்த்துகிறது. இது ஒரு இலக்கிய பயணம் மட்டுமல்ல ,ஒரு உணர்ச்சி அனுபவம்.


நல.ஞானபண்டிதன் அவர்களின் எழுத்துப்பயணத்திற்கு என் இதயப்பூர்வமான பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கிறேன். இவரின் எழுத்துக்கள் இன்னும் பல இதயங்களைத் தொடும் வண்ணம் விரிவடையட்டும். இந்நூல் வாசகர்களின் உள்ளங்களில் நம்பிக்கை, நேசம், நினைவு ஆகியவற்றின் தீப்பொறியைத் தூண்டும் என நம்புகிறேன். நூல் ஆசிரியர் நல. ஞானபண்டிதன் அவர்களை வாழ்த்துகிறேன் மேலும் பல படைப்புகள் மூலம் சமுக நீரோட்டத்தில் பங்கெடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



## மாபெரும் தியாகி மகாத்மா காந்தி!

நேரிசை வெண்பா!

மகாத்மா காந்தியாம்
மாண்புத் தலைவர்
தகாதவாறு சுட்டநாள்
சார்ந்த..வகையான
நாளே தியாகிகள்
நாளென்போம்
என்றேதான் தோளை
நிமிர்த்தியே சொல்!
நாட்டுக்கே நற்றியாகம்
செய்திட்டார் காந்தியே
வீட்டை நினைத்திலர்வீறுடன்..
நாட்டைநினைத்திட்டார்
நேர்ந்தே
உழைத்திட்டார் காந்தி
கனிவாய்
உழைத்திட்டார் காண்!



**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.


## மொழி

மொழி மனித இதயத்தின்
முதல் சுவாசம். மனிதர்களை
இணைக்கும் பாலம்.
எண்ணங்களை
வடிவமைக்கும் இனிய ஓசை.
காலத்தின் குரலில்
பயணிக்கும் நினைவுகள்.
தலைமுறைகளை
இணைக்கும் தங்க சாலை.
சொல் விதைத்து முளைக்கும்
மொழி. மௌனத்தையும் பேச
வைக்கும் வல்லமை.
வேறுபாடுகளில் ஒற்றுமை
கற்றுத் தரும்.
பண்பாட்டின் உயிர் நாடி
அது. இழந்தால் அடையாளம்
மங்கும். காற்றால் உலகம்
முழுவதும் முழங்கும் ஒரே
கீதம். வாய்
பேச முடியாத
மனிதர்கள்
மட்டும்
ஊமையாய்
அழும் சோகம்.




**உ.மு.ந.ராசன்**
**கலாமணி**
கோயம்புத்தூர்.



ஹிம்சைகளை
அஹிம்சையால்
வென்றவர் மகாத்மா....
ஸ்ரீகாந்த் திருச்சி



## பலூன்காரர்

ஒரு குழந்தையாவது
வீட்டிற்க்குள் இருந்து
ஓடிவராதா என்று
ஏக்கத்துடன்
தெருவில்
சுற்றுகிறார்
பசியோடு..!



ஏ.எம். ஷெரீஃப், புதுக்கோட்டை.



## ஏழையின் சிரிப்பு

ஏழையின் சிரிப்பு எப்போதும்
இல்லை எப்போதும் சிரிக்க
வாய்ப்பு இல்லை. வறுமையை
ஒழிப்பதாகச் சொன்னவர்கள்
தங்கள் வறுமையை
ஒழித்து விட்டனர். ஏழை
ஏழையாகவே வாடுகிறான்
பணக்காரன் மேலும்
பணக்காரனாகின்றான்.
பசி போக்க போராட
வேண்டியுள்ளது பணக்காரன்
ஏழை சமமாக்குங்கள்
சங்கமிப்போம் அனைவரும்
சமமாக. ஏழை சிரிப்பதே
இல்லை கடவுள் இல்லை
என்பதைத்தான்
அண்ணா
ஏழையின்
சிரிப்பில்
இறைவனைக்
காண்போம்
என்றார்.



கவிஞர் இரா.இரவி.



வருட வரும் காற்றை கூட
' தொடாதே என்னை ' என்று
விலக்கி விடுமோ தொட்டால்
சிணுங்கி தன் இலைகளை
மூடி.. அன்பை புரியாமல்..
மனதை இறுக்கி
மூடிக்கொள்ளும் சில
மனிதரை போல்!



பார்த்தது
கண்
களவு
போனது
இதயம்
காதலின்
மாயம்

கவிஞர் பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

## "நேர்மை தோற்றதில்லை"

நேர்மையாய் நின்றதால்
நீ இழந்தது வேலையை!
காப்பாற்றிக் கொண்டது
உன் மனசாட்சியை!

வளைந்த பாதைகள்
விரைவாகச் சேர்த்தாலும்,
நேர்பாதைதான்
நிலைத்த அடையாளம்!

பணியின் கதவு மூடப்பட்டது
உன் குற்றத்தால் அல்ல
உன் துணிச்சலால்...

நாளை அது
பெரிய கதவாகத் திறக்கும்
பொறுமையாய்க் காத்திரு!

உன் கைகள் காலியாக
இருக்கலாம்..
ஆனால் முதுகெலும்பு
நேராக இருக்கிறது!

நேர்மை சிறிது
தாமதம் செய்யும்..
பொய்மை நிறைய
ஏமாற்றம் கொண்டுவரும்!

நீ நிற்குமிடம் சரியெனில்
உலகம்
ஒருநாள்
உன்னிடம்
நிற்கும்!



முகில் தினகரன்
கோயமுத்தூர்



## கடற்கரை

நீல வானம் முத்தமிடும் கடற்கரை.
ஓயாத அலைகளின் பரவசமூட்டும் நித்திய இசை.
திடீரென எழும் திகில் எழுப்பும் அலைகள்.
சூரியன் சிரிக்கும் செம்மஞ்சள் மாலை.
நெஞ்சைத் தழுவி கதைகள் சொல்லும் காற்று.
நேரத்தை மறக்கச் செய்யும் ஆங்காங்கே காணப்படும்
காலடிச்சுவடுகள். கைகோர்த்துச் செல்லும் காதல்
ஜோடிகளின் பரவசமூட்டும் ஒரு வித களிப்பு நடை நடனம்
நமக்கும் ஒருவித சிலிர்ப்பைத் தரும். நம் கவலைகள் எல்லாம்
தூரத்தில் அலையோடு அடித்துச் சென்று கரையும் கடலில்.
அமைதியில் கரையும் மனத்தின் பாரம். இதுதான் கடல்
சொல்லும் வாழ்க்கையின் ரகசியம். போய், போய் வரும்
அலையாய் நம் பயணமும் தொடரும் இனிதாய்.
உ.மு.ந.ராசன் கலாமணி, கோயம்புத்தூர்.



## அம்மா

வானம் சொன்னது
என்னை விட அம்மாவின்
அன்பு விசாலமானது !

கடல் சொன்னது
என்னை விட அம்மாவின்
மனம் ஆழமானது !

தேன் சொன்னது
என்னை விட அம்மாவின்
பாசம் இனிமையானது !

குயில் சொன்னது
என் குரலை விட அம்மாவின்
அழைப்பு இனிமையானது !

மெழுகுவர்த்தி சொன்னது
என் தியாகத்தை விட
அம்மாவின் தியாகம்
சிறந்தது!

பூமித்தாய் சொன்னது
என் பொறுமையை விட
அம்மாவின் பொறுமை
சிறந்தது !



அனைவராலும்
கடவுளை
நேரில்
காணமுடியாது
நேரில் காணும்
ஒரே தெய்வம்
அம்மா!

ம. இந்திராணி , திருச்சி

## இணக்கம்

ஒத்துப் போவதால்
சிறுமை வந்திடுமோ?
விட்டுக் கொடுப்பதால்
கிரீடம் பெயர்ந்திடுமா?

அமைதி நீரோட்டமான
இல்லறம் சிதைந்துபோம்

தம்பதியரிடையே
மூன்றாந்தர உணர்வுக்கு
அங்கீகாரம் கிடையாது

மாட்டு வண்டியில்
இரண்டு மாடுகளும்



முரண்பாடு
நேராமல்
பயணித்தலே
சிறப்பு

பி. பழனி,
சென்னை.



## மயக்கும் புன்னகை

சிரிப்பு அதன் மறுபெயர்
புன்னகை அது அடுத்தவர்
உள்ளத்தை திறக்கும்
திறவுகோல் பதிலுரைக்க
புன்னகைப்பதும் ஒருவித
பதில் தான் சின்ன
புன்னகையில் ஒரு
கவிதையே பிறக்கும்
ஓராயிரம் கதை சொல்லும்
சிரிப்பு அடுத்தவரின்
கவலையை தீர்த்து பூரிக்க
செய்யுமே பிரியும் அதரத்தில்
பிறக்கும் பூதான் விஜய்
சிரிப்பு வாழ்வு இனிமையாக
மலர சிரிப்பு எப்போதும்
இருந்தால் அதுவே நமக்கு
தன்னம்பிக்கை கொடுக்கும்
அன்றோ! புன்னகையில்
மயங்காதார் உண்டோ?



புன்னகைத்து
அந்த மகிழ்ச்சி
பாதையில்
பயணிப்போம்

உஷா முத்துராமன்



## தினந்தோறும்....

சந்திக்க வாய்ப்பு கிட்டாது...
போனாலும்...

மறந்ததே இல்லை...
சிந்திக்க...

நேரில் முகம்
காணாவிடினும்...

உன்னை நேர்முகம்
செய்து கொண்டு தான்
இருக்கிறது... என்
இணையம்...

பேசிட வாய்க்கவில்லை...
உன் கண்கள் பார்த்து..

பேசிக் கொண்டே தான்
இருக்கிறேன்... உன்
மனதோடு...

மறுத்துக் கொண்டே



இருப்பது...நீ
தான்...

சஞ்சலம்
தீர்க்கும்...
பெரு
வாய்ப்பை...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி



## உன்மகன் வந்திருக்கேன்

அம்மா என்னும் பெரும்
ஆயுதம் உலகையாள
என்னை படைத்த பெரும்
பேராயுதம்....!

பள்ளியிலே என்னை படிக்க
வைக்க பட்டினியாய் நீ
இருந்த...!

கல்லூரியிலே என்னை
படிக்க வைக்க காடு,
கழனியிலே கஸ்ட்டப்பட்ட...!

தரணி போற்றனுமுனு
உன் தாலிய கூட விற்று
செலவலிச்ச....!

பட்டங்கள் பல நான் பெற்று
வீடு திரும்பு முன்னே
பாடையிலே படுத்திருக்க...!

செல்லமா வளர்த்த மகன்
சிதைஞ்சி போயிருக்கேன்
செவி சாய்ச்சி கேட்காம நீ
சிலையாய் படுத்திருக்க...!

உன் முகம் பாராம
எப்படிதான் வாழுவேனோ
இல்லை உன் கூட உடன்
கட்டை...
தான் ஏறுவேனோ....!

அம்மா என்னை
அனைத்துக்கொண்டு
உன்னோடு சென்று
விடு....!

இல்லைனா எழுந்து
என்னோடு வாழ வந்து
விடு....!

உன்னை விட்டு வாழ
எனக்கு பிடிக்க வில்லை
நீ இல்லாத இந்த உலகம்
எனக்கு தேவையில்லை...!

அம்மா கண் திறந்து
பாரம்மா...உன்
செல்ல மகன்
வந்திருக்கேன்....
சிதைஞ்சி போய் நின்னு



யிருக்கேன்....!
அம்மா.....
அம்மா...!!

பொன். கருணா
நவி மும்பை



## காந்தியடிகள் !

உலகம் போற்றும்
உண்மை மாமனிதர்
காந்தியடிகள் !

அன்று வெள்ளையரின்
சிம்மச் சொப்பனம்
காந்தியடிகள் !

இன்று வெள்ளையரும்
வணங்கிடும்காந்தியடிகள்!

வெள்ளை மாளிகை
பாராட்டும் மாமனிதர்
காந்தியடிகள் !

மனித உரிமைகளின்
முதல்குரல் காந்தியடிகள்!
சகல மனிதரையும்
சமமாக விரும்பியவர்
காந்தியடிகள் !

ஆதிக்க உணர்வை
அடியோடு வெறுத்தவர்
காந்தியடிகள் !

உப்புக்கு வரியா ?
உணர்ச்சியோடு
எதிர்த்தவர்காந்தியடிகள் !

உண்மைக்கு இணையான
அழகு உலகில் இல்லை
என்றவர் காந்தியடிகள் !

மனித ஆற்றலை
மனதார வரவேற்றவர்
காந்தியடிகள் !

உழைக்காமல்
உண்பவன் திருடன்
உரைத்தவர்
காந்தியடிகள்!

தில்லையாடி வள்ளி
அம்மையின் தியாகத்தை
மதித்தவர் காந்தியடிகள் !

அகிம்சையை உணர்த்திய
அறிவு ஜீவி காந்தியடிகள்!

ரகசியம் இல்லாத
அதிசய மாமனிதர்
காந்தியடிகள் !

கொண்டக் கொள்கையில்
குன்றென நின்றவர்
காந்தியடிகள் !

திருக்குறள் வழி
வாழ்ந்த நல்லவர்
காந்தியடிகள் !

சுட்டக் கொடியவனையும்
மன்னித்த மாமனிதர்
காந்தியடிகள் !

உலகம் வியக்கும்
ஒப்பில்லாத் தலைவர்
காந்தியடிகள் !

வன்முறை தீர்வன்று
வையகத்திற்கு
உணர்த்தியவர்
காந்தியடிகள் !

நெஞ்சுரத்தின் சிகரம்
நேர்மையின் அகரம்
காந்தியடிகள் !

அரை ஆடை அணிந்த
பொதுஉடைமைவாதி
காந்தியடிகள் !

மரணதண்டனையை
வெறுத்த மாமனிதர்
காந்தியடிகள் !

அமைதியின் சின்னம்
அடக்கத்தின்திருஉருவம்
காந்தியடிகள் !

அன்றே உரைத்தவர்
உலக மயத்தின்
தீமையைகாந்தியடிகள் !

மனிதருள் மாணிக்கம்
மாமனிதருக்கு
இலக்கணம்காந்தியடிகள்!

மரணதண்டனையை
வெறுத்த மாமனிதர்
காந்தியடிகள் !

சகல மனிதரும்
சமமாக விரும்பியவர்
காந்தியடிகள் !

உண்மைக்கு
இணையான அழகு
உலகில் இல்லை என்றவர்
காந்தியடிகள் !

மனித ஆற்றலை
மனதார வரவேற்றவர்
காந்தியடிகள் !

அகிம்சையை உணர்த்திய
அறிவு ஜீவிகாந்தியடிகள்!

ரகசியம் இல்லாத
அதிசய மாமனிதர்
காந்தியடிகள் !

கொண்டக் கொள்கையில்
குன்றென நின்றவர்
காந்தியடிகள் !

திருக்குறள் வழி
வாழ்ந்த நல்லவர்
காந்தியடிகள் !

சுட்டக் கொடியவனையும்
மன்னித்த மாமனிதர்
காந்தியடிகள் !

உலகம் வியக்கும்
ஒப்பில்லாத் தலைவர்
காந்தியடிகள்!

வன்முறை தீர்வன்று
வையகத்திற்கு
உணர்த்தியவர்
காந்தியடிகள் !

நெஞ்சுரத்தின் சிகரம்
நேர்மையின் அகரம்
காந்தியடிகள் !

அரை ஆடை அணிந்த
பொதுஉடைமைவாதி
காந்தியடிகள் !

அமைதியின் சின்னம்
அடக்கத்தின் திரு
உருவம்காந்தியடிகள் !

அன்றே உரைத்தவர்
உலக மயத்தின் தீமையை
காந்தியடிகள் !

மனிதருள் மாணிக்கம்
மாமனிதருக்கு
இலக்கணம்
காந்தியடிகள் !

என் வாழ்வே ! எனது
செய்தி ! காந்தியடிகள் !
கவிஞர் இரா .இரவி .

அரிச்சந்திரன் நாடகம்
பார்த்தார் காந்தியடிகள்
அம்மா அப்பா மதிக்கும்
சிரவணன் கதைகேட்டார்!

சட்டம் படிக்கஇங்கிலாந்து
புறப்பட்டபோது
சாதியை விட்டு விலக்கப்
போவதாக மிரட்டினார்கள்!

மிரட்டலுக்கு
அஞ்சவில்லை
காந்தியடிகள் மிடுக்குடன்
இங்கிலாந்து பயணமானார் !

அன்னைக்கு தந்த
சத்தியத்தை உயிரெனக்
காத்தார்
அசைவம் மது மாது
எதுவும் தொட வில்லை !

தென்ஆப்பிரிக்கா
தொடர் வண்டியில்
அவமதித்தார்கள்
தன்னம்பிக்கை
இழக்கவில்லை வாழ்ந்து
காட்டினார் !

கோச்சுவண்டியில் படியில்
அமரச்சொன்னார்
காந்தியடிகள் மறுக்கவே
அடித்தான் அசரவில்லை!

வழிக்கு வந்து உள்ளே
அமர வைத்தான்
வலி தாங்கிய
அகிம்சையைஉணர்ந்தான்
வண்டிக்காரன் !

உடலால் மெலிந்து
இருந்தபோதும்
உள்ளத்தால் வலிமை
மிக்கவர் காந்தியடிகள் !

தனி ஒரு மனிதனுக்கு
ஆடை இல்லை எனில்
தலைப்பாகை ஆடம்பர
ஆடைதுறந்து
அரையாடையானார் !

வட்ட மேசைமாநாட்டுக்கு
இங்கிலாந்துசென்றபோது
வளமான மன்னரை
அரையாடையோடு
சந்திக்க முடியாது
என்றனர் !

இனிமேல் என் ஆடை
இதுதான் கொள்கை
முடிவு இப்படியே
அனுமதித்தால்
வருகிறேன் மறுத்தால்
செல்கிறேன் !
எனக்கும் சேர்த்து
நீங்களும் உங்கள்
மன்னரும் ஏராளமான
ஆடை அணிந்து
இருக்கிறீர்கள் என்றார் !

காந்தியடிகளின் ஒட்டு
மொத்த வாழ்க்கையை
ஒரே ஒரு திருக்குறளில்
அடக்கி விடலாம் !

இன்னாசெய் தாரை
ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் .

காந்தியடிகளின் குரு
டால்ஸ்டாய்
டால்ஸ்டாயின் குரு
திருவள்ளுவர் !

ஒரு கன்னத்தில்
அடித்தால் உடன்
மறு கன்னம் காட்டு !
இயேசு பிரான் !

தீமை செய்த
பகைவனுக்கும் வெட்கும்
வண்ணம்
நன்மை செய் !
திருவள்ளுவர் !

காந்தியடிகளின்
விடுதலை விருப்ப
உணர்வுதான்
காந்திய வழியில்
நெல்சன் மண்டேலாவை
உருவாக்கியது !

காந்தியடிகளின் அன்பு
மிக்க வாழ்க்கைதான்
கல்கத்தாவில்
அன்னை தெரசாவை
உருவாக்கியது !

காந்தியடிகளின்
நேர்மையானநெஞ்சம்தான்
கர்ம வீரர் காமராசரை
தமிழகத்தில்
உருவாக்கியது !

காந்தியடிகளின்
உண்மையான
போதனைதான்
கக்கன்ஜி என்ற
மாமனிதரை
உருவாக்கியது !

காந்தியடிகளின் வாழ்க்கை!
திருவள்ளுவரின் வாக்கே!
காந்தியமும் வள்ளுவமும்
வேறு இல்லை ஒன்றே !

காந்தியடிகளுக்கும்
காந்தியவாதிகளுக்கும்
மரணம் இல்லை இன்றும்
என்றும் வாழ்வார்கள் !

காந்தியடிகளை மகாத்மா
ஆக்கிய மதுரை!

உலகின் முதல் மனிதன்
தமிழன் உலகின் முதல்
மொழி தமிழ் உலகின்
முதல் ஊர் மதுரை
உலகப் புகழ் மகாத்மா
ஆக்கிய மதுரை!

மதுரைக்கு வந்த
காந்தியடிகளின் மனம்
ஏழைகளின் இன்னல்
கண்டு இரங்கியது

ஆடைக்கு வழியின்றி
வாடும் ஏழைகள் இருக்க
ஆடம்பர ஆடைகள்
எனக்கு இனி எதற்கு ?

விலை உயர்ந்த
ஆடைகளைக் களைந்து
கதராலானஅறையாடைக்கு
மாறினார்காந்தியடிகளுக்கு
மனமாற்றத்தை
விதைத்தது மதுரை
எல்லோருக்கும் எல்லாமும்
கிடைக்கும் வரை
என்னுடைய ஆடை
இதுதான் என்றார்
எவ்வளவோ பலர்
சொல்லியும் ஏற்க
மறுத்தார்

எடுத்த முடிவில்
இறுதிவரை தீர்க்கமாக
இருந்தார் எங்கு
சென்றபோதும் அரை
ஆடையிலேயே சென்றார்
என்னைப் பற்றி எவர்
என்ன ? நினைத்தாலும்
எனக்கு கவலை என்றும்
இல்லை என்றார்

பொதுஉடைமை
சிந்தனையை ஆடையால்
விதைத்து
பூமிக்கு புரிய வைத்த
புனிதர் காந்தியடிகள்

ஏழைகளின் துன்பம்
கண்டு காந்தியடிகளின்
இரக்கத்தின்
வெளிப்பாடே அரையாடை

மன்னரைப் பார்க்கச்
சென்றபோதும் கூட
மதுரைஅரையாடையிலேயே
சென்றார்

கொண்ட கொள்கையில்
உறுதியாக நின்றார்
கண்டவர் பேச்சுக்கு
செவி மடுக்காமல்
இருந்தார்

அரையாடை அணிந்த
பக்கிரி என்று சிலர்
அறியாமல் பேசியதையும்
பொருட்படுத்தாதிருந்தார்

குழந்தை ஒன்று தாத்தா
சட்டை தரட்டுமா?
என்றது கோடிச்
சட்டைகள் தர முடியுமா ?
உன்னால் என்றார்

இந்தியாவின் ஏழ்மையை
மறந்துவிட்ட சுயநல
அரசியல்வாதிகளுக்கு
ஏழ்மையை
உணர்த்திட்டார்

ஏழ்மையின் குறியீடாகத்
திகழ்ந்தார் காந்தியடிகள்
வறுமையின் ப்டிமமாகத்
திகழ்ந்தார் காந்தியடிகள்

கதராடை அரையாடை
ஆடை மட்டுமல்ல
சமத்துவ சமதர்ம
சமுதாயத்தின் விதை
அவை
உலகளாவிய அஞ்சல்
தலைகளிலும்
சிலைகளிலும்
உன்னத அரையாடைக்
கோலத்திலேயே உள்ளார்

உலகம் உள்ளவரை
ஒப்பற்ற மதுரை இருக்கும்
மதுரை உள்ளவரை
மகாத்மா புகழ்நிலைக்கும்.
கவிஞர்
இரா .இரவி !

முனிவர் துணை
RG
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget => We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ
Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஜூஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

Follow our WhatsApp Channel

Scan this QR code using the CAMERA to view or follow our Channel

PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

HAPPY BIRTHDAY

AJAI CHANDRASEKARAN

SATHLOKHAR
SYNERGYS E&C GLOBAL LIMITED
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company
We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.
Vacancies
Civil | PEB | MEP Engineers
Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed
Experience
only 0 to 3 years
Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.

MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.999/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247
7684053514


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS

VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499

Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை

PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
www.paperboy.biz
8122664699



TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards

CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

# பல்சுவை களஞ்சியம்




## குழந்தைகளின் உடல்நலமும் தடுப்பூசிகளும்

குழந்தைகளுக்கான தடுப்பூசிகள், அவர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்கவும், நோய்கள் வராமல் தடுக்கவும் மிகவும் முக்கியம்.



தடுப்பூசிகள் மூலம், போலியோ, தட்டம்மை, மூளைக்காய்ச்சல் போன்ற ஆபத்தான நோய்களிலிருந்து குழந்தைகளை நாம் பாதுகாக்க முடியும்.

மேலும், தடுப்பூசிகள் குழந்தைகளின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி, அவர்களுக்கு நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கின்றன. தடுப்பூசிகள், குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுகின்றன.

குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் அட்டவணை:

பிறந்தவுடன்: BCG, போலியோ, ஹெபடைடிஸ் பி

பிறந்து 45 நாட்களுக்கு பிறகு: போலியோ சொட்டு மருந்து மற்றும் முத்தடுப்பு ஊசி

பிறந்து 6 வாரங்களுக்கு பிறகு: போலியோ (2வது தவணை), முத்தடுப்பு ஊசி (2வது தவணை)

பிறந்து 10வாரங்களுக்கு பிறகு: ரோட்டா வைரஸ் தடுப்பூசி (முதல் தவணை)

பிறந்து 14 வாரங்களுக்கு பிறகு: ரோட்டா வைரஸ் தடுப்பூசி (இரண்டாவது தவணை)

பிறந்து 9 மாதங்களுக்கு பிறகு: தட்டம்மை, சளி, ருபெல்லா தடுப்பூசி

பிறந்து18 மாதங்களுக்கு பிறகு தட்டம்மை, சளி, ருபெல்லா மற்றும் சிக்கன் பாக்ஸ் தடுப்பூசி டிப்தீரியா, டெட்டனஸ் மற்றும் கக்குவான் இருமல் தடுப்பூசி

ஒவ்வொரு வருடமும்: இன்ஃப்ளுயன்ஸா தடுப்பூசி

குழந்தைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் தடுப்பூசி போடுவது, அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. சரியான நேரத்தில் தடுப்பூசி போடுவதன் மூலம், நோய்கள் வராமல் தடுக்கலாம். தடுப்பூசி அட்டவணையை முறையாக பின்பற்றுவதன் மூலம், குழந்தைகளை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளலாம். தடுப்பூசி போடும் முன் மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நல்லது.தடுப்பூசி போட்ட பிறகு, சிலருக்கு லேசான காய்ச்சல் அல்லது ஊசி போட்ட இடத்தில் வலி இருக்கலாம், இது இயல்பானது.தடுப்பூசி போடுவது பாதுகாப்பானது மற்றும் தீவிர பக்க விளைவுகள் அரிதானவை.

## நிம்மதிக்கு காரணம்

பூலோகத்தில் ஒரே தெருவில் ஒரு செருப்பு விற்கும் தொழிலாளியும், ஒரு செல்வந்தரும் இருந்தனர்.

செருப்புத் தொழிலாளி தினமும் தான் செருப்புக் கடையின் ஓரத்தில் பெருமாள் படம் ஒன்றை வைத்து அதை வணங்கி வந்தான்.

செல்வம் இல்லாவிட்டாலும் சந்தோசமும் மன அமைதியுடனும் இருந்தார்.

செல்வந்தரோ தினமும் காலையில் குளித்துவிட்டு, பல மணி நேரம் பூஜை புனஸ்காரம் எல்லாம் செய்வார்.

பல தலைமுறைக்கு காணும் செல்வம் இருந்தும் நிம்மதியின்றி வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் நாரத முனிவர் விஷ்ணுவைப் பார்த்து ”அந்தச் செல்வந்தர் மிகுந்த பக்திமானாக இருக்கிறார்; தினமும் உங்களுக்குப் பல மணி நேரம் பூஜை எல்லாம் செய்கிறார். அவர் நிம்மதியாய் வாழ, ஏதாவது செய்யக்கூடாதா?” என்றார். விஷ்ணுவும் அதற்குச் சம்மதித்துவிட்டு நாரதரை பூலோகத்துக்கு அனுப்பினார். போகும்போது நாரதரைப் பார்த்து, “நீங்கள் கீழே சென்று, ‘நான் நாராயணனிடமிருந்து வருகிறேன்,’ என்று செல்வந்தரரிடம் சொல்லுங்கள்.

அவர் ‘தற்பொழுது நாராயணன் என்ன செய்துகொண்டு இருக்கிறார்?’ என்று கேட்பார். அதற்கு நீங்கள் ‘நாராயணன் தற்போது ஓர் ஊசியின் காது வழியாக யானையை நுழைத்துக்கொண்டு இருக்கிறார்’ என்று பதில் சொல்லுங்கள்” என்று சொல்லி அனுப்பினார்.

”அப்படியே அந்தச் செருப்பு தைக்கும் தொழிலாளியையும் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுங்கள்” என்று சொல்லி அனுப்பினார் விஷ்ணு.



நாரதரும் முதலில் அந்தச் செல்வந்தரின் வீட்டுக்கு சென்றர். பூஜை எல்லாம் முடித்துவிட்டு வந்த செல்வந்தர், நாரதரிடம், “நீங்கள் யார்?” என்று கேட்க, நாரதர் தான் நாரயணரிடமிருந்து வருவதாகச் சொல்கிறார்.

அதற்கு அந்தச் செல்வந்தர் “தற்போது நாராயணன் என்ன செய்துகொண்டு இருக்கிறார்?” என்று கேட்க, நாரதரும், நாராயணன் ஒர் ஊசியின் காதுவழியாக யானையை நுழைத்துக்கொண்டு இருப்பதை பார்த்தாகச் சொல்கிறார்.

அதற்கு அந்த செல்வந்தர் “அது எப்படி முடியும்? இது என்ன நடக்கிற காரியமா?” என்று கேட்டார்.

நாரதர் அடுத்தது அந்தச் செருப்புத் தொழிலாளியைப் பார்க்கச் சென்றார்.

அவரிடமும் இதே சம்பாஷணை நடைபெற்றது. ஆனால் கடைசி பதிலுக்கு அந்தச் செருப்புத் தைக்கும் தொழிலாளி, “இதில் என்ன விந்தை? ஒரு பெரிய ஆலமரத்தை சின்ன விதையில் அடக்கியவர், பிரபஞ்சத்தை தன் வாயில் காண்பித்தவர், அவருக்கு யானையை ஊசியில் நுழைப்பது என்ன பெரிய விஷயமா?” என்று பதில் சொன்னார்.

அவர்கள் இருவரும் சொன்ன பதிலை நாராயணனிடம் வந்து சொன்னார் நாரதர். கடவுள் பக்தி என்பது, பூஜை, புனஸ்காரங்கள் செய்வது மட்டுமில்லை.

இறைவனின் பாதத்தை பூரண நம்பிக்கையுடன், நீயே சரணம் என்று பற்றுவதே ”உண்மையான பக்தி” இப்பொழுது தெரிகிறதா? ஏழையின் நிம்மதிக்கு காரணம் என்று பதிலளித்தார் நாராயணன்.

# மீம்ஸ்







## விடுகதை



| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |

# ஜோக்ஸ்

காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே! ஏன்?
காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஓடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.
நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே! ஏன்?



அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே!

ஜோக்ஸ் பகுதிக்கு

இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.
டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?
இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.



# ஜோதிடம் அறிவோம்



## தைப்பூசம்
### விரத பலன்கள்



தமிழ்க் கடவுளான முருகப்பெருமானை வழிபடும் மிக முக்கியமான தினங்களில் தைப்பூசத் திருநாள் ஒன்று. தை மாதத்தில் பூசம் நட்சத்திரமும், பவுர்ணமியும் இணைந்து வரும் நாளை தைப்பூசத் திருநாளாக கொண்டாடுகிறோம்.

தைப்பூச நாளில் முருகப் பெருமானை போற்றி வழிபட்டால் பல மடங்கு நன்மைகள் பெறலாம். இந்த ஆண்டு நாளை (ஞாயிற்றுக்கிழமை) தைப்பூசத் திருநாள் கொண்டாடப்பட உள்ளது. தைப்பூசத் திருநாளில் முருகப்பெருமானை வழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்தது.

முருகப்பெருமானுக்கு உரிய முக்கிய வேண்டுதல்களில் காவடி எடுப்பதும் ஒன்றாகும். இந்த காவடி எடுக்கும் முறை தோன்றிய தலமாக பழனி உள்ளது. பழனியில் தைப்பூச விழா 10 நாள் திருவிழாவாக நடத்தப்படுகிறது. அன்றையை தினம் லட்சக்கணக்கான பக்தர்கள், முருகனுக்கு விரதம் இருந்து பச்சை உடை தரித்து பாத யாத்திரையாக பழனிக்கு வருவார்கள்.

தைப்பூச நாளில் அதிகாலையில் எழுந்து, வீட்டை சுத்தம் செய்து நீராடிவிட்டு, திருநீறு அணிந்து விரதத்தை தொடங்கலாம். பூஜை அறையில் முருகப்பெருமான் படம் வைத்து, மலர்களால் அலங்கரித்து விளக்கேற்றி வழிபடலாம். கந்தசஷ்டி கவசம், திருமுருகாற்றுப் படை, திருப்புகழ் போன்ற முருகப் பெருமானுக்கு உகந்த பாடல்களை பாட வேண்டும். அன்றைய தினம் முழுவதும் 'ஓம் சரவணபவ' எனும் ஆறெழுத்து திருமந்திரத்தை உச்சரித்தபடியே இருப்பது நல்லது.

காலை மற்றும் மதியம் இரு வேளைகளிலும் உணவு உண்ணாமல், பால், பழம் மட்டுமே சாப்பிட்டு விரதம் இருக்க வேண்டும். அன்றைய தினம் அருகில் இருக்கும் முருகன் கோவிலுக்கு செல்வது சிறப்பு. முருகப்பெருமானை மனதார நினைத்து, அவன் அருள் வேண்டி விரதம் இருக்க வேண்டும். மாலையில் கோவிலுக்கு சென்று முருகனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்யலாம்.

தைப்பூச விரதத்தை 48 நாட்கள், 21 நாட்கள் அல்லது அன்று ஒரு நாள் மட்டும் என அவரவர் விருப்பத்திற்கேற்பவும், உடல்நிலைக்கு ஏற்பவும் மேற்கொள்ளலாம். சிலர், காவடி எடுத்தும், பால்குடம் சுமந்தும், அலகு குத்தியும், பாத யாத்திரையாக சென்றும் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றுகிறார்கள். தீராத நோயால் அவதிபடுபவர்கள், முருகப்பெருமானுக்கு காவடி எடுப்பதாக வேண்டிக்கொள்கிறார்கள். அதன்படி நோய் நீங்கி, உடல் ஆரோக்கியம் பெற்றதும் தைப்பூசத்தன்று காவடி எடுத்து தங்கள் வேண்டுதலை நிறைவேற்றி கொள்கிறார்கள்.

27 நட்சத்திரங்களில், பூசம் நட்சத்திரத்தின் அதிதேவதையாக இருப்பவர், குரு பகவான். எனவே, தைப்பூச நாளில் முருகப்பெருமானை வழிபடுபவர்களுக்கு குரு பகவானின் அருளும் சேர்ந்து கிட்டும்.

தைப்பூச நாளில் தொட்டது துலங்கும் என்பார்கள். எனவே அன்றைய தினம், குழந்தைகளுக்கு காது குத்துதல், ஏடு தொடங்குதல், திருமணப் பேச்சுக்கள், புதிய தொழில் ஒப்பந்தம் போன்றவற்றை மேற்கொள்ளலாம். தைப்பூசத்தன்று விரதம் இருந்து வழிபட்டால் வாழ்வில் உள்ள துன்பங்கள் நீங்கும், தீராத பகை மாறும், ஒற்றுமை அதிகரிக்கும், தொடங்கும் காரியத்தில் வெற்றி கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

## தேய்பிறை சஷ்டி -விரத முறையும் பலனும்..!



முருகப்பெருமானின் அருளைப் பெற அனைவரும் கடைபிடிக்கும் விரதம் தான் சஷ்டி விரதம். பெரும்பாலான முருக பக்தர்கள் கந்தசஷ்டி காலத்தில் மட்டுமின்றி மாதம்தோறும் வரும் சஷ்டியிலும் மனதார விரதமிருந்து முருகனுடைய அருளைப் பெறுவார்கள்.

சஷ்டி விரதம் என்றாலே குழந்தை வரம் வேண்டுபவர்கள் தான் இருப்பார்கள் என சொல்வார்கள். ஆனால் அது உண்மையல்ல. உடல்நல பாதிப்பு, தொழில் பாதிப்பு, திருமணத் தடை என எந்தவித பிரச்சனையாக இருந்தாலும் சரி, சஷ்டி விரதமிருந்து மனமுருகி அந்த வேலவனை நினைத்தாலே எல்லாவற்றையும் அவன் தீர்த்து வைப்பான் என்பது பக்தர்களின் அனுபவப்பூர்வமான உண்மை.

மாதம்தோறும் வரும் சஷ்டி விரதம் எவ்வாறு மேற்கொள்ளலாம் என பார்க்கலாம்.

* மாதம்தோறும் வரும் வளர்பிறை மற்றும் தேய்பிறை ஆகிய இரு சஷ்டி திதிகளிலும் விரதம் இருக்கலாம்.

* நாளை தேய்பிறை சஷ்டி விரதம். அதிகாலையில் எழுந்து நீராடி, ஐயன் முருகப்பெருமானின் திருவுருவப் படத்தை மலர்களால் அலங்கரிக்க வேண்டும்.

* வீட்டில் வேல் இருந்தால் முருக வேலுக்கு பால் அபிஷேகம் அல்லது திருநீறு அபிஷேகம் செய்து மலர்களால் அலங்கரிக்க வேண்டும்.

* கந்த சஸ்டி கவசம், முருகப் பெருமானுக்குரிய மந்திரங்கள், கந்தபுராணத்தை கேட்பது அல்லது முருகனைப் போற்றும் பாடல்களைப்பாடி, விளக்கேற்றி மனமுருகி வழிபட வேண்டும்.

* விரதம் இருக்க முடிந்தவர்கள் நாள் முழுவதும் உண்ணாமல் விரதம் இருக்கலாம். முடியாதவர்கள் பால், பழம் மட்டும் சாப்பிடலாம்.

* சஷ்டி விரதம் இருக்கும் போது அன்றைய நாள் முழுவதும் முருகப்பெருமானின் பக்திப் பாடல்களைப் பாடுவதும், கேட்பதும் மனநிறைவைத் தரும்.

* சஷ்டி நாட்களில் முடிந்தவர்கள் அருகில் உள்ள கோவில்களுக்கு சென்று முருகனை வழிபட்டு, அன்னதானம் அல்லது தங்களால் முடிந்த உதவியை மற்றவர்களுக்கு செய்யலாம்.

குறிப்பாக முருகப்பெருமானின் அருள் வேண்டி நிற்கும் அனைத்து பக்தர்களும் சஷ்டி விரதம் மேற்கொள்ளலாம்.

இப்படி மாதம்தோறும் வரும் சஷ்டி நாட்களில் விரதம் இருந்து முருகனை வழிபட்டால் நிச்சயமாக வாழ்வில் அமைதியும், வளமும் நிலைத்து நிற்கும்.

## திருமணத்தடை நீக்கும் திருவதிகை சரநாராயண பெருமாள் கோவில்



கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள திருவதிகையில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பழமை வாய்ந்த சரநாராயண பெருமாள் கோவில் உள்ளது.

**தல வரலாறு**

முன்பொரு சமயம் சிவபெருமான் திரிபுர அசுரர்களை போரிட்டு அழிக்க தேவர்கள் தேர் ஒன்றினை படைத்தனர். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சூரிய, சந்திரர் தேரின் இரு சக்கரங்களாகவும், பூமி தேரின் தட்டச்சாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், மேருமலை வில்லாகவும், ஆதிசேஷன் நாணாகவும், பிரம்மன் தேர் ஓட்டுபவராகவும், விஷ்ணு அம்பாகவும் இருந்து உதவினர் என்கிறது புராண நூல்கள்.

இதன் மூலம், விஷ்ணு அம்பாக (சரமாக) இருந்து போருக்கு உதவியதால் விஷ்ணு இத்தலத்தில் "சரநாராயணப்பெருமாள்' என அழைக்கப்படுகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதம், திருவதிகை வீரட்டானேசுவரர் கோவிலில் திரிபுரம் எரிக்கும் திருவிழா நாளில், கருட வாகனத்தில் பெருமாள் சரத்துடன் எழுந்தருளி சரம் கொடுக்கும் நிகழ்ச்சியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இங்குள்ள மூலவர் சரநாராயணப்பெருமாள் முழுவதும் சாளக்கிராமத்தால் ஆனவர்.

இங்கு ஹேமாம்புஜவல்லி தாயாருக்கு தனி சன்னதி உள்ளது. ஹேமாம்புஜவல்லி தாயாருக்கு செங்கமலத்தாயார், பொற்தாமரைகொடியாள் என சிறப்பு பெயர்கள் உண்டு. ஆண்டுதோறும் பங்குனி மாத உத்திரம் நட்சத்திரத்தில் பெருமாள், தாயாருக்கு சிறப்பு திருமஞ்சனம் நடந்து, சேர்த்தி உற்சவத்தில் பெருமாள் தாயார் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

மாதந்தோறும் நடைபெறும் உத்திர நட்சத்திரத்தில் தாயாருக்கு சிறப்பு திருமஞ்சனம், ஆடி வெள்ளிக்கிழமைகளில் பூவாலங்கி சேவையிலும் தாயார் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். மார்க்கண்டேய மகரிஷியின் மகளாக தவத்தால் பிறந்த ஹேமாம்புஜவல்லி தாயார் பெருமாளை திருமணம் செய்துள்ளதால், இக்கோவிலில் வேண்டுவோருக்கு திருமணத்தடை நீங்கும், குழந்தை பேறு, கடன் நிவர்த்தி, சகல ஐஸ்வர்யங்கள் பெருகும் என்பது நம்பிக்கை. கடன் நிவர்த்தி, ஐஸ்வர்யங்கள் பெருக வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பு பூஜை நடக்கிறது.

திருமாலின் திருத்தலங்களில், இக்கோவிலில் தான் நரசிம்மர், சயன திருக்கோலத்தில் தெற்கு நோக்கி சயனித்திருக்கிறார். இது ஒரு மிகவும் சிறப்பு வாய்ந்த அம்சமாகும். மேலும் தாயாரும் உடன் எழுந்தருளியிருப்பதால் இது போக சயனம் ஆகும். இந்த சயன நரசிம்மர், திருவக்கரையில் வக்ராசுரனை அழித்து விட்டு, அதன் பரிகாரத்துக்காக இத்தலத்தில் வந்து சயனித்துள்ளார்.

700 ஆண்டுகளுக்கு முன் வேதாந்த தேசிகர், திருவந்திரபுரம் செல்லும் போது இந்த சயன நரசிம்மரை வழிபட்டதாக கூறப்படுகிறது. இந்த சயன நரசிம்மருக்கு ஒவ்வொரு பிரதோஷத்திற்கும் சிறப்பு பூஜை செய்யப்படுகிறது. மற்ற கோவில்களில் கைகூப்பி நிற்கும் கருடாழ்வார், இங்கு கைகட்டி சேவகம் செய்யும் நிலையில் அருள்பாலிக்கிறார். மேலும் இங்குள்ள கருடாழ்வாருக்கு, திரிபுர சம்ஹாரத்தின்போது பெருமாள், சங்கு, சக்கரங்களை தந்தாக புராணம் கூறுகிறது. இங்குள்ள பெருமாள் உப்பிலியப்பன் சீனிவாசனைப்போல், மார்க்கண்டேய மகரிஷி மகள் ஸ்ரீதேவியை திருமணம் செய்து கொண்டு நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

அருகில் மிருகண்ட மகரிஷியின் மகன் மார்க்கண்டேய மகரிஷி. புரட்டாசி மாதம் முழுவதும் சிறப்பு அலங்காரமும், சிறப்பு பூஜையும் நடைபெறுகிறது. இந்த மாதத்தில் திருப்பதி செல்ல முடியாதவர்கள், இங்குள்ள பெருமாளை வழிபாடு செய்யலாம்.

இப்பெருமாளை 7 அமாவாசையில் அங்கப் பிரதட்சணம் செய்து வழிபட்டால் வேண்டியதை வேண்டியவாறு அருளக்கூடிய பெருமாளாக அருள்பாலிக்கிறார். பெரிய திருவடியாகிய கருடாழ்வார் இத்தலத்தில் கையைக் கட்டிக்கொண்டு சேவக பாவத்தில் காட்சி தருகின்றார்.

## திருவந்திபுரம் தேவநாதசுவாமி கோவில் வரலாறு



அஹீந்த்ரன் என்றால் ஆதிசேஷன் என்று பொருள். இந்த ஊர் ஆதிசேஷனால் நிர்மானிக்கப்பட்டது ஆகும். அருகிலுள்ள மலை பிரம்மா தவம் செய்த இடம். அதனால் பிரம்மாசலம் என்றும், ஆஞ்சநேயரால் கொண்டு வரப்பட்ட அவுசத மலையின் ஒரு பாகம் இதில் சேர்ந்திருப்பதால் அவுசதாசலமென்றும் பெயர் பெற்றது. கருடனால் கொண்டு வரப்பட்ட நதி பக்கத்தில் ஓடுகிறது. இந்த நதி கரும் நதியென்று பெயர் பெற்றது. ஆதி சேஷனால் நிர்மானிக் கப்பட்டது என்றும் கோவிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவிலில் உள்ள பிரதானமூர்த்தி தேவ நாதன். இவர் அச்சுதன், ஸ்திரமோதில், அநக ஜோதிஸ், மேவு ஜோதி, மூவராகிய மூர்த்தி, அடியவர்க்கு மெய்யன், தெய்வநாயகன், தாசஸத் தியன் போன்ற பல பெயர்களில் உள்ளவர், பிரம்மா, சிவன், இந்திரன், பூமாதேவி, பிருகு, மார்க்கண்டேயர், ததிசி முனிவர் போன்ற பலரும் தவம்புரிந்து தரிசித்து வரம் பெற்ற தலமிது.

கோவிலில் பிரதானமாகிய தாயார்-அம்புருகவாசினி. இவர் ஹேமாப்ஜநாயகி, பார்கவி, தரங்கமுக நந்தினி, செங்கமலநாயகி போன்ற பல திருநாமங்கள் அமையப்பெற்றவள்.

பெருமாளும், தாயாரும் மகாவரப்பிரசாதி. பாடல் பெற்ற 108 வைணவதலங்களில் முக்கியமானது இத்தலம். இது திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது. வேதாந்த தேசிகன் இங்குள்ள அவுசதாசலத்தில் தவம்புரிந்து ஸ்ரீ ஹயக்ரீவனையும், கருடனையும் பிரத்யக்ஷமாகக் கண்டு வரம் பெற்றார்.

ஹயக்ரீவனுக்கு உலகிலேயே இவ்வூரில்தான் முதலில் கோவில் ஏற்பட்டது. ஸ்ரீதேசிகன் இந்த ஊரில் சுமார் 40 ஆண்டு காலம் வசித்து வந்தார், அநேக நூல்களை இவ்வூரில் இயற்றினார். அவர் எழுந்தருளியிருந்த இடம் ஸ்ரீதேசிகன் திருமாளிகை என்ற பெயரோடு விளங்குகிறது. இக்கோவிலுக்குள் இருக்கும்ஸ்ரீ தேசிகன் திவ்ய மங்கள விக்ரகம் ஸ்ரீ தேசிகன் தன் திருக்கரங்களாலேயே செய்யப்பட்டதாகும். ஸ்ரீதேசிகன் தன் திருக்கரங்களாலேயே கட்டிய கிணறு இன்றும் ஸ்ரீதேசிகன் திருமாளிகையில் உள்ளது.

வைதீக ஆகமத்தின்படி 6 கால பூஜைகள் தினம் நடந்து வருகிறது. வேதபாராயண அத்தியாயம் (திவ்யபிரபந்த) கோஷ்டிகள் இத்திவ்ய தேசத்தில் ஒரு கவுரவ கைங்கர்யமாகவே இன்றும் நடந்து வருகிறது. சித்திரை மாதம் ஸ்ரீ பெருமாளுக்கும், புரட்டாசி மாதம் ஸ்ரீ தேசிகனுக்கும் மிகவும் விமரிசையாக பிரம் மோற்சவங்கள் நடைபெறுகின்றன.

இந்த திருத்தலம்தமிழ் நாட்டில் கடலூர் திருப்பா திரிப்புலியூர் ரெயில் நிலையத்தில் இருந்து 6 கி.மீ தூரம் மேற்கில் அமைந்துள்ளது. வருடத்தில் 12 மாதங்களிலும், உற்சவம் நடந்து கொண்டிருக்கிறது. எப்பொழுதும் திரளான பக்தர்கள் வந்து சேவித்து பயனடைந்து வருகிறார்கள்.

குறிப்பு : உற்சவ கைங்கர்யதாரர்கள் உற்சவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே திருக்கோவில் அலுவலகத்திற்கு நேரில் வருகை புரிந்து உற்சவத்திற்கான திட்டத்தினைபெற்றுச் செல்வதுடன், உற்சவ கைங்கர்யத்தினை காலத்தே வந்திருந்து நடத்தி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கைகட்டி வணங்கும் கருடன்**

திருவந்திபுரம் தேவநாதசுவாமி முன்பு உள்ள கருடன் தேவநாதசுவாமிக்கு அதிக மரியாதை கொடுக்கும் விதமாக கை கட்டி நின்ற நிலையில் உள்ளார். பெரும்பாலான கோவில்களில் கருடன் கை கூப்பிய நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது இந்த கோவிலின் ஒரு மிக சிறப்புவாய்ந்த அம்சமாகும்.

## வாழும் காலத்தில் சௌகரியமாக வாழ



கங்கை, யமுனை, பண்டைய சரஸ்வதி சங்கமத்தில் ஸ்நானம் செய்பவர் எப்பொழுதும் அழியாதவராக இருக்க வேண்டும் என்று இந்திர பகவானிடம் பிரார்த்தனையும் உள்ளது. இந்தச் சங்கமத்தில் குளித்தால், கடந்த கால, நிகழ்கால, அறியப்படாத பாவங்கள் அனைத்தும் கழுவப்படும் என்றும் மத்ஸ்ய புராணம் கூறுகிறது. இது வேறு எந்த புனித நீராட்டத்தையும் விட லட்சம் மடங்கு சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. திரிவேணி மிகவும் தெய்விகமானது. அந்த தெய்விகத் தருணத்துக்காக, தேவர்கள் கூட காத்திருக்கிறார்கள். எனவே இது "முக்தி ஜனனி' என்று அழைக்கப்படுகிறது. மேலும் இது எண்ணற்ற யக்ஞங்களைவிட அதிக புண்ணியத்தை ஏற்படுத்துவதால், இந்த இடம் "பிரயாக்' என்று அழைக்கப்படுகிறது.

சமீபத்தில் காஞ்சி காமகோடி பீடத்தின் சங்கராசாரியருடன் இணைந்து பிரயாக் கும்பமேளாவுக்கு நான் சென்றது ஒரு புதிய அனுபவம். கங்கா ஸ்துதி, கங்கா தசஹர ஸ்தோத்திரம், காசி பஞ்சகம், கங்காவதாரணம் (ராமாயணம் & பாகவதம் போன்றது), திரிவேணி மஹாத்மியம், பிரயாகா க்ஷேத்ர மஹாத்ம்யம் மற்றும் யமுனாஷ்டகம் போன்றவற்றை சங்கராசாரியர் ஒரு பக்தரை போன்று பாடியது பரவசம் அளித்தது. இதற்கு முன் இவற்றின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கினார். இந்த ஞான குரு உலக நலம், பாரதத்தின் நீடித்த செழுமைக்காக ஒரு சங்கல்பத்தை மேற்கொண்டு பின்னர் புனித நீராடல் செய்தார்.

கடவுளுக்கும் வேத பண்டிதர்களுக்கும் விசேஷமான காணிக்கைகளைத் தொடர்ந்து, மாகங்கா பூஜையின் சடங்கு முறை பார்ப்பதற்கு ஒரு தெய்விக நிகழ்வாக இருந்தது. திரும்பிச் செல்லும்போது, புனிதமான, அழியாத அத்தி மரமான "அக்ஷயவடம்' தரிசனத்தை ஒருவர் தவறவிட முடியாது. காஞ்சி மடத்தின் மற்றொரு சுவாரஸ்யமான பரிமாணம், "சங்கர விமான மண்டபம்' ஆகும். இது தென்னிந்திய பாணியில் காஞ்சி மடத்தால் கட்டப்பட்ட நான்கு மாடி கோயில். இது கண்காணிப்பு, கூட்ட மேலாண்மைக்காக திரிவேணி சங்கமத்தின் கண்காணிப்பு மையமாகவும் செயல்படுகிறது.

தொடக்கத்திலிருந்து இறுதி வரை இறக்குமதி செய்யப்பட்ட வாழ்க்கை முறைகளை அல்லாமல், அதன் சொந்த பலங்களை நம்பும் ஒரு கலாசார ரீதியான, வளமான சமூகத்தின் நங்கூரங்களைப் பிரதிபலிக்கிறது. பிரயாகையின் விமான நிலையம், ரயில் நிலையம், சாலைகள், குறுக்கு சந்துகள் தெய்விகத் தன்மையுடன் பிரகாசித்தன. வாழ்க்கையின் அனைத்துத் தரப்பு மக்களும் தன்னியல்பாக திரண்டு வந்தது, பிரயாக் கும்பமேளாவை, உலக அளவில் பாரதத்தின் நாகரிகக் கண்காட்சியாக மாற்றியது.

## தைப்பூச விழா தேரோட்டம்



தென்காசி மாவட்டம் பண்பொழி திருமலைக்குமார சுவாமி கோயிலில் தைப்பூச விழா தேரோட்டம் நேற்று நடந்தது.

## செப்பு தேரில் சுவாமி சந்திரசேகரர், பவானி அம்பாள் வீதி உலா



திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் தைப்பூச திருவிழாவையொட்டி செப்பு தேரில் சுவாமி சந்திரசேகரர், பவானி அம்பாள் வீதி உலா வந்தனர்.

## உவரி சுயம்புலிங்க சுவாமி திருக்கோயில் தைப்பூச திருவிழா



நெல்லை மாவட்டம் உவரி சுயம்புலிங்க சுவாமி திருக்கோயில் தைப்பூச திருவிழா நடந்தது,

## அம்பேத்கரியம் 50 நூல்களை விசிக தலைவர் திருமாவளவன் எம்.பி. வெளியிட்டார்



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஜெய் பீம் ஃபவுண்டேஷன் சார்பில் கவுதம சன்னா தொகுப்பில் புரட்சியாளர் அம்பேத்கர் பேச்சும் எழுத்தும் 50 நூல்களாக உருவாக்கப்பட்டுள்ளது. அம்பேத்கரியம் 50 நூல்களை சென்னையில் விசிக தலைவர் திருமாவளவன் எம்.பி. வெளியிட்டார். ஓய்வுநீதிபதி சந்துரு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மகேந்திரன் உள்படபலர் பங்கேற்றனர்.

## பிரசார வாகனம்




அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் தற்போதைய எம்எல்ஏ இசக்கி சுப்பையா, நேற்று தனக்கான பிரசார வாகனத்தை துவக்கி வைத்தார்.

## நலத்திட்ட உதவி



கோவை நஞ்சுண்டாபுரம் பகுதியில் அதிமுக எம்எல்ஏ ஜெயராம் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் வேலுமணி வழங்கினார்.

## வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணி



கோவில்பட்டியில் நடந்த வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணியின்போது, முதன் முறையாக வாக்கு செலுத்தும் மாணவ, மாணவிகளுக்கு அரசு கலைக்கல்லூரி முதல்வர் சந்தன மாரியம்மாள் ரோஜா பூ கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

## பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து போராட்டம்



சென்னை துரைப்பாக்கம் குடியிருப்போர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பினர், பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து போராட்டம் நடத்தினர்.

## கரூரில் "அம்மா கபாடி லீக்" போட்டி



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு, கரூரில் "அம்மா கபாடி லீக்" போட்டிகளை முன்னாள் அமைச்சர் எம் ஆர் விஜயபாஸ்கர் துவக்கி வைத்தார்.

## மார்க்சிஸ்ட் கட்சிக்கு நிதி தாரீர்



"மார்க்சிஸ்ட் கட்சிக்கு நிதி தாரீர்" என்ற கோரிக்கையோடு மதுரையில் பச்சரிசிக்காரத் தெருவில் வெங்கடேசன் எம்.பி., தொண்டர்களுடன் நிதி திரட்டினார்.

## தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவுக்கு வரவேற்பு



ஆலங்குளம் பேருந்து நிலையம் மற்றும் அதை சுற்றியுள்ள இடங்களில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவுக்கு மாவட்ட செயலாளர் பழனி தலைமையில் தொண்டர்கள் வரவேற்பு அளித்தனர்.

## 12வதுபட்டமளிப்பு விழா




தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் 12வதுபட்டமளிப்பு விழாவில் கவர்னர் ரவி பட்டங்களை வழங்கினார்.

## மரியாதை சந்திப்பு



சென்னையில் AMET பல்கலைக்கழகத்தின் நிறுவனர் யாதவ மகாசபையின் தலைவர் டாக்டர் நாசே ஜெ. ராமச்சந்திரனை பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார்.

## பட்டு விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவி



சேலம்-பெரியார் பல்கலைக்கழக கூட்டரங்கில் பட்டு வளர்ச்சி துறை சார்பில், பட்டு விவசாயிகளுக்கு ரூ ₹36 கோடியே 48 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் மற்றும் நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்களை அமைச்சர் ராஜேந்திரன் வழங்கினார்.

## மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி



மார்த்தாண்டம் நேசமணி கிறிஸ்தவ கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் மடிக்கணினிகளை அமைச்சர் மனோ தங்கராஜ் வழங்கினார்.

## பூதலிங்கசுவாமி சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் தேரோட்டம்



பூதப்பாண்டி அருள்மிகு பூதலிங்கசுவாமி சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் தைப்பெருந்திருவிழாவில் நேற்று காலை தேரோட்ட நிகழ்ச்சியை ஆன்மீக பக்தர்களுடன் இணைந்து அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார். முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், மேயர்மகேஷ் உடன் உள்ளனர்.

## இது நம்ம ஆட்டம்



தூத்துக்குடி தருவை மைதானத்தில் 'இது நம்ம ஆட்டம்' மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டியை அமைச்சர் கீதா ஜீவன் துவக்கி வைத்தார்.

## மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணி




திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தனியார் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை துணை சபாநாயகர் பிச்சாண்டி வழங்கினார். கலெக்டர் தர்பகராஜ், சி.என்.அண்ணாதுரை எம்.பி., கிரி எம்எல்ஏ உடன் உள்ளனர்.

## பெரியார் மருந்தியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழா




திருச்சி பெரியார் நூற்றாண்டு கல்வி வளாகத்தில் பெரியார் மருந்தியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பட்டங்களை வழங்கினார்.

## மாணவ,மாணவியர்களுக்கு மடிக்கணினி



ஆத்தூர் கூட்டுறவு கலை அறிவியல் கல்லூரியில், நடந்த விழாவில், தனியார் கல்லூரி மாணவ,மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசின் மடிக்கணினிகளை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்.

## ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சிறப்பு அபிஷேகம்



பொள்ளாச்சி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை மாத மூன்றாம் வெள்ளியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால், தங்க ஆபரணங்களுடன் நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## புதிய உயர்மட்ட பாலம் அமைக்க அடிக்கல்



களக்காட்டில் இருந்து சிதம்பராபுரம் செல்லும் வழியில் நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.6.12 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட பாலம் அமைக்க ரூபி ஆர்.மனோகரன் எம்எல்ஏ அடிக்கல் நாட்டினார்.

## 19 கட்டிடங்கள் திறப்பு



காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட 19 கட்டிடங்களை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்.

## ரவுசு மணி

ஒரு வட்டம் போட்டு அதற்குள் வாழ நினைப்பது தவறே இல்லை... ஆனால்.... அந்த வட்டம் தான் வாழ்க்கை என்று முடிவு சொல்வது தான் மிக மிக தவறு...



V. முத்து ராமகிருஷ்ணன்

## போளூர் திராவிட மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

**திருவண்ணாமலை, பிப்.01:**

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் நகராட்சி திராவிட மாணவர் கழகம் சார்பில் பாராமெடிக்கல் படிப்பிலும் நீட் தேர்வை திணித்து சமூக நீதியை ஒழிக்கும் ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம். போளூர் பேருந்து நிலையம் எதிரில் 31.1.26 காலை 10:30 மணி அளவில் போளூர் நகர மாணவரணி தலைவர் பெரியார் மணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வரவேற்புரை திராவிடர் கழக மாவட்ட செயலாளர் பா. அன்னதாசன். தொடக்க உரை நகர செயலாளர் ஜானகிராமன். கண்டன உரை சி மூர்த்தி வெற்றிச்செல்வன்



ஆறுமுகம் பழனி ரவிதாசன் சேட்டு அமீர் அஸ்கர் பாஷா காமராஜ் ராம்குமார் தேவராஜ் வெங்கட்ராமன் ராமஜெயம் லட்சுமணன். நன்றி உரை ஒன்றிய தலைவர் சுந்தரமூர்த்தி. திராவிடர் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் அனைத்து துறை ஓய்வூதியர் சங்க தோழர்களும் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும் கலந்து கொண்டார்கள்.

## திமுக பாக முகவர்கள் சந்திப்பு மாநாடு



சென்னை - விழுப்புரம் மண்டல வாக்குச்சாவடி திமுக பாக முகவர்கள் சந்திப்பு மாநாடு வருகிற 11-ம் தேதி, மாமல்லபுரம் அடுத்த வடநெம்மேலியில் நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை சென்னை மண்டலப் பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி., விழுப்புரம் மண்டலப் பொறுப்பாளர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் ஆகியோருடன் அமைச்சர் தா.மோ. அன்பரசன் இணைந்து நேற்று ஆய்வு செய்தனர்.

# சுற்றுலா: இரண்டு நாட்களில் சுற்றிப்பார்க்க வேண்டிய இடங்கள்!

பெங்களூரு வரலாற்று சிறப்புமிக்க இடம் மட்டுமல்ல. இயற்கை மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கி வரும் இடமும் கூட. அந்த வகையில் நீங்கள் பெங்களூருக்கு பயணம் செய்ய விரும்புகிறீர்கள் என்றால், கட்டாயம் அனைத்து முக்கியமான இடங்களுக்கு சென்று விட வேண்டும். ஏனெனில் பெங்களூரு ஒரு பெரிய நகரம். ஆகையால் எந்த இடத்திற்கு செல்லலாம் என்ற சந்தேகம் நிச்சயம் வரும். ஆகையால் இரண்டு நாட்கள் பயணத்தில் நீங்கள் செல்ல வேண்டிய இடங்களைப் பற்றிப் பார்ப்போம்.



1. பெங்களூரு பேலஸ்

இது ஒரு இங்கிலாந்து பிரபு ரெவ்.கார்ரட் என்பவரின் வீடாக இருந்தது. பின்னர் 1873ம் ஆண்டு மகாராஜா சமரஞ்செந்திரா இந்த பேலஸை வாங்கிக்கொண்டார். இது பார்ப்பதற்கும் இந்தியன் பேலஸ் போல் இருக்காது. இங்கிலாந்து பேலஸ் போல்தான் இருக்கும். இந்த கட்டடம் டூடோர் கட்டடக் கலையில் கட்டப்பட்டது. அதேபோல் சுவர்களிலும் ஓவியங்கள் அதிகம் பார்க்கலாம். இங்குள்ள ஓவியங்களை வரைந்தது பிரபல ஓவியர் ராஜா ரவி வர்மா. இந்த பேலஸ் காலை 10 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை திறந்திருக்கும். நுழைவுக்கட்டணம் ரூ.250. பெங்களூர், வசந்த் நகர், பேலஸ் ரோட் 560052 என்பது விலாசம்.

2. செயின்ட் மேரி பஸிலிக்கா

இது பெங்களூர் பேலஸிலிருந்து 3 கீலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இது கர்நாடகாவிலேயே மிகவும் பழமை வாய்ந்த சர்ச். இது 17ம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டது. மேலும் இது கோத்திக் கட்டட கலையால் கட்டப்பட்டது. இந்த சர்ச் காலை 6 மணியிலிருந்து மாலை 7 மணி வரை திறந்திருக்கும்.

3. பெங்களூர் கோட்டை

பஸிலிக்கா சர்ச்சிலிருந்து 6 கிமீ தொலைவில் பெங்களூர் கோட்டை உள்ளது. கெம்பே கவுடா என்பவரால் 1537ம் ஆண்டு களிமண்ணால் கட்டப்பட்ட கோட்டை. பின்னர் ஹைதர் அலியால் கற்களால் மறுக்கட்டுமானம் செய்யப்பட்டது. இந்த கோட்டை நிறைய கேட்டுகளுடன் இருக்கும். குறிப்பாக வடக்கு பக்கம் டெல்லி கேட்டும் தெற்கு பக்கம் மைசூர் கேட்டும் உள்ளது. இங்கு ஒரு மணி நேரம் சுற்றிப்பார்க்கலாம். காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணி வரை கோட்டை திறந்திருக்கும். இங்கு இந்தியர்களுக்குரூ5நுழைவுக்கட்டணம், வெளிநாட்டினருக்கு 100ரூ கட்டணம்.

4. திப்பு சுல்தான் கோட்டை

இந்த திப்பு சுல்தான் கோட்டை பெங்களூர் கோட்டைக்குள் இருப்பதுதான். இந்த கோட்டை பாதி இந்தியன் வடிவமைப்பிலும் பாதி முஸ்லீம் கட்டட வடிவமைப்பிலும் இருக்கும். இது 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இந்த கோட்டையில் நான்கு அறை அருங்காட்சியகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு ஏராளமான ஓவியங்கள், புகைப்படங்கள், படங்கள், சிற்பங்கள் ஆகிவை இருக்கும். திப்பு சுல்தான் கோட்டை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை திறந்திருக்கும். இங்கு நுழைவுக்கட்டணம் 15 ரூபாய்.

5. லால் பாக்

இந்தியாவிலேயே மிகவும் அழகு வாய்ந்த பூங்கா இது. மொத்தம் 240 ஏக்கர்களில் 1800 வகையான தாவரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. லால் பாக் பூங்கா 1760ம் ஆண்டு ஹைதர் அலியால் நிறுவப்பட்டது. இங்கு காலை 6 மணியிலிருந்து மாலை 7 மணி வரை சுற்றிப்பார்க்கலாம். நுழைவுக்கட்டணம் ரூ20.



6. தொட்டா கனேஷனா குடி:

இந்த கோவிலை நந்தி கோவில் என்றும் அழைப்பார்கள். இதுதான் உலகிலேயே மிகப்பெரிய நந்தி கோவில். விஜயநகர கட்டட கலையால் 1537ம் ஆண்டு கட்டப்பட்டது. இங்குள்ள நந்தி 15மீட்டர் உயரம் மற்றும் 20 அகலம் கொண்டவையாக இருக்கும். இங்கு காலை 6 மணியிலிருந்து மதியம் 12 மணி வரை மற்றும் மாலை 5.30 மணியிலிருந்து 9 மணி வரை திறந்திருக்கும்.

7. பெங்களூரு அக்வாரியம்

இது 1983ம் ஆண்டு கட்டப்பட்டது. இதுதான் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய அக்வாரியம். இங்கு நீங்கள் பல வகையான மீன் வகைகளைப் பார்க்கலாம். இங்கு காலை 10 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை சுற்றிப்பார்க்கலாம். நுழைவுக் கட்டணம் 10ரூ.

8. இந்திரா காந்தி இசை பூங்கா

இது 1996ம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த பூங்காவில் தாவரங்களும் வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தினமும் இரவு 7 மணிக்கு இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெறும். இங்கு நீங்கள் காலை 10 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை இருக்கலாம். நடுவில் 4 முதல் 5 வரை மட்டும் மூடப்படும்.

9. கப்பன் பூங்கா

இது அக்வாரியம் அருகிலேயேதான் உள்ளது. இங்கு பலவகையான தாவரங்கள் மற்றும் 6000 மரங்களைப் பார்க்கலாம். இங்கு காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை சுற்றிப் பார்க்கலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### வங்கியில் வேலை: பட்டதாரி இளைஞர்களுக்கு வாய்ப்பு!




தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் (நபார்டு) 162 மேம்பாட்டு உதவியாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் பிப்ரவரி 3 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: Development Assistant (Group ‘B’) 159

பணி: Development Assistant (Hindi) (Group ‘B’) 3

காலியிடங்கள்: 162(தமிழ்நாடு-9)

தகுதி: ஏதாவதொரு துறையில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 21 முதல் 35-க்குள் இருக்க வேண்டும்.

சம்பளம்: மாதம் ரூ.32,000

தேர்வு செய்யப்படும் முறை: ஆன்லைன் மூலம் முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, மொழித்திறன் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். அந்தந்த மாநிலத்தின் வட்டார மொழியில் பேச, எழுத தெரிந்திருக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்டி, எஸ்டி, மாற்றுத்திறனாளிகள் ரூ.100, மற்ற அனைத்து பிரிவினரும் ரூ.550 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: https://www.nabard.org என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 3.2.2026

# பிப்ரவரி (2026) வார ராசிபலன்

## 1.2.2026 முதல் 7.2.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் கோபத்தை கட்டுப்படுத்தினால் வெற்றி நிச்சயம். புத்திக் கூர்மையுடன் செயல்களை செய்து எதிலும் வெற்றி பெறுவீர்கள். வசதிகள் அதிகரிக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். ஆனால் வீண் செலவுகள் உண்டாகும். மனதுக்கு பிடிக்காத இடத்திற்கு சென்று வரவேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும்.

வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பார்கள். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கு இடையே தேவையற்ற மன வருத்தம் உண்டாகலாம். மருத்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம்.

அரசியல்துறையினருக்கு பேசும்போது கவனமாக இருப்பது நல்லது. பெண்களுக்கு புத்தி கூர்மையுடன் செயல்பட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். கலைத் துறையினருக்கு வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது.

### ரிஷபம்

இந்த வாரம் எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். பண வரத்து அதிகரிக்கும். செயல் திறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். விவசாயம், ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த ஆடை, ஆபரணம் வாங்க நேரிடும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் விருந்து நிகழ்ச்சிகளுக்கு சென்று வருவீர்கள்.

பெண்களுக்கு பண வரத்து அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு எந்த ஒரு காரியமும் லாபகரமாய் நடந்து முடியும். .

### மிதுனம்

இந்த வாரம் எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். பணவரத்து கூடும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள்.

உத்தியோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வேலை பற்றிய கவலை நீங்கும். நிர்வாகத்தின் ஆதரவும் இருக்கும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகலாம். வாழ்க்கை துணையையும் குழந்தைகளிடமும் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்திற்காக கூடுதலாக உழைக்க வேண்டியது இருக்கும்.

பெண்களுக்கு எடுத்த காரியத்தை செய்து முடிக்க கால தாமதம் ஏற்படும். கலைத்துறையினருக்கு திட்டமிட்டு செயல்படுவது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்..

அரசியல்துறையினருக்கு புதிய பதவிகள் கிடைக்கும்.

### கடகம்

இந்த வாரம் ராசியை சுக்கிரன் பார்ப்பதால் தொழில் தொடர்பான விஷயங்களில் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள். பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிக்கும் நிலை வரலாம்.

பண வரத்து திருப்தி தரும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாக்கு வன்மையால் எளிதாக தங்களது தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்க பெறுவார்கள்.

பிரச்சனைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். குடும்பத்தில் இருப்பவர்களால் கூடுதல் வருமானம் கிடைக்கும். கணவன், மனைவிக்கு இடையே சுமூகமான நிலை காணப்படும்.

பெண்களுக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். கலைத் துறையினருக்கு முக்கிய நபர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும்.

### சிம்மம்

இந்த வாரம் ராசியாதிபதி சூரியன் ஆறாமிடத்தில் இருப்பது மனதில் தெளிவு உண்டாகும். ஆக்க பூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். பயணம் லாபகரமாக இருக்கும். புதுவியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழில் முன்னேற்றம் காணப்படும். கடித போக்கு வரத்து மூலம் தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது. தகப்பனாருடன் வீண் தகராறு ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் பேசி செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு உண்டாகும்.

கலைத்துறையினர் முன்னேற்றத்துக்காக பாடுபடுவீர்கள். அரசியல்துறையினருக்கு பயணங்களில் சாதகமான பலன் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய பயம் நீங்கும். குழப்பம் இல்லாத தெளிவான மனதுடன் பாடங்களை படித்து வெற்றி பெறுவீர்கள்.

### கன்னி

இந்த வாரம் மற்றவர்களின் ஆதரவு கிடைக்கும். புத்தி சாதுரியத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். ஆனால் பயணங்களின் போது உடல் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். சிலர் புதிய வேலைக்கு முயற்சி செய்வார்கள். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும்.

வாழ்க்கை துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார். உறவினர் வருகை இருக்கும். பெண்களுக்கு உங்களது செயல்களுக்கு மற்றவர்களின் ஆதரவு கிடைக்கும்.

கலைத்துறையினர் அனுபவப்பூர்வ மான அறிவு திறனை உபயோகித்து எதிலும் வெற்றி காண்பீர்கள்.

அரசியல் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். மாணவர்களுக்கு பெற்றோர், ஆசிரியர் கூறியபடி செயல்படுவது கல்வியில் வெற்றி பெற உதவும். மனோ தைரியம் கூடும்.

### துலாம்

இந்த வாரம் நண்பர்களுடன் இணைந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழி செய்யும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது அமைதியை தரும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகளால் குடும்ப விஷயங்கள் சாதகமாக நடக்கும்.

பெண்களுக்கு மற்றவர்கள் உதவியுடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். கலைத்துறையினர் சிக்கனத்தை கடைபிடிப்பது நல்லது.

அரசியல்துறையினருக்கு லாபம் அதிகமாகும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற நண்பர்களின் உதவி கிடைக்கும். வீண் செலவை குறைப்பது நல்லது..

### விருச்சிகம்

இந்த வாரம் புத்தி கூர்மையுடன் எதையும் செய்வீர்கள். எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். எதிலும் அவசரப்படாமல் இருப்பது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். குடும்பத்தில் தாய் வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறும். கணவன், மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும். உயர்ந்த ஆடை ஆபரணங்கள் சேரும். நல்லது கெட்டது அறிந்து செயல்பட்டு நன்மை கிடைக்க பெறுவீர்கள்.

பண வசதி கூடும். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பெண்களுக்கு எந்த ஒரு செயலை செய்யும் முன்பும் அதில் இருக்கும் நல்லது கெட்டதை ஆராய்ந்து பார்த்த பின் அதில் ஈடுபடுவது நல்லது. கலைத் துறையினருக்கு பண வரத்து திருப்தி தரும். அரசியல்துறையினருக்கு முன்னேற்றம் காணப்படும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை குறையும்.

### தனுசு

இந்த வாரம் சுபச் செலவு கூடும். வாகனங்களால் செலவு உண்டாகும். மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். ராசிக்கு 2ல் சூரியன் சஞ்சாரம் செய்வதால் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும்.

வீண் அலைச்சல் எதிர்பாராத செலவும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சக ஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்து செல்வது நல்லது.

நண்பர்கள் உறவினர்களுடன் மனஸ்தாபம் உண்டாகலாம். பெண்களுக்கு மன தடுமாற்றம் இல்லாமல் எதையும் செய்வது நல்லது. கலைத்துறையினர் எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அரசியல்துறையினருக்கு யோக பலன்கள் காணப்படும். மாணவர்களுக்கு கவன தடுமாற்றம் இல்லாமல் பாடங்களை படிப்பது நன்மை தரும்..

### மகரம்

இந்த வாரம் பல்வேறு நன்மைகள் உண்டாகும். கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும்.

ராசியில் சூரியன் சஞ்சாரம் செய்வதால் இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும்.

தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள். அலுவலக வேலையாக வெளியூர் செல்ல நேரலாம். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன வருத்தம் குறையும். குடும்பத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு இருக்கும்.

குடும்ப உறுப்பினர்களின் உடல் நிலையில் கவனம் தேவை. பெண்களுக்கு மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.

கலைத் துறையினருக்கு வாய்ப்புகள் கிடைக்கும். அரசியல் துறையினருக்கு புதிய முயற்சிகள் கை கொடுக்கும். மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பது மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும்..

### கும்பம்

இந்த வாரம் புகழ் கவுரவம் அதிகரிக்கும். நீங்கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. சூரியன் சஞ்சாரம் பண வரத்தை தரும்.

நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனை தீரும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும்.

புத்தியை உபயோகித்து வியாபாரத்தில் புதுமையை செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடு படுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம். குடும்பத்தில் மனைவி குழந்தைகளுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும்.

பெண்களுக்கு அடுத்தவர் பேசுவதை காதில் வாங்காமல் தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு பிரச்சனைகள் குறையும்.

அரசியல்துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை உண்டாகும். மாணவர்களுக்கு பாடங்களில் கூடுதல் கவனத்துடன் படிப்பது நன்மை தரும்..

### மீனம்

இந்த வாரம் ராசியாதிபதி குரு சஞ்சாரம் ராசிக்கு நான்கில் இருப்பதால் பண வரத்து அதிகரிக்கும். அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். செவ்வாய் சஞ்சாரத்தால் பூமி சம்பந்தமான காரியங்கள் நன்றாக நடந்து முடியும். அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும்.

வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை.

அவற்றை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்தியோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.

பெண்களுக்கு எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்க உழைக்க வேண்டி இருக்கும். கலைத்துறையினருக்கு பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். அரசியல்துறையினர் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும்.

# அரசுப் பள்ளி வளர்ச்சிக்கு பக்கபலமாக இருக்க வேண்டும்: முன்னாள் மாணவர்களுக்கு அமைச்சர் வலியுறுத்தல்

**சென்னை, பிப்.1:**

முன்னாள் மாணவர்கள், அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்று, அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்தார்.



சென்னை, அசோக்நகர், தகைசால் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ரூ.11.90 கோடியில் 40 கூடுதல் வகுப்பறைகளுடன் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கட்டிடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இதில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, செயலர் பி.சந்திரமோகன், இயக்குநர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.அ.நரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து, அரசு பள்ளி தூதுவர் திட்டத்தின் தொடக்க விழா நடைபெற்றது. இந்த திட்டத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் தொடங்கி வைத்தார். மேலும், முன்னாள் மாணவர் வழிகாட்டுதல் திட்டத்தை தொடங்கி வைத்து, விழுதுகள் செயலியையும் வெளியிட்டார்.

இந்நிகழ்வில், மாநில திட்டக்குழு செயல் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், இஸ்ரோ தலைவர் வி.நாராயணன், முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் ஆர்.சுதன் உட்பட பலர் பங்கேற்றனர். விழாவில், அமைச்சர் அன்பில் மகேஸ் பேசுகையில், "முன்னாள் மாணவர்களை இந்த திட்டம் மூலம் ஒருங்கிணைத்து இருக்கிறோம். மயில்சாமி அண்ணாதுரை, நாராயணன் போன்ற ஆளுமைகள் தமிழகம் முழுவதும் அதிகம் உருவாக வேண்டும்.

உயர்ந்த நிலையில் இருக்கும் ஆளுமைகள் பள்ளி தூதுவர்களாக அரசுப் பள்ளிகளில் அடியெடுத்து வைத்தால், நிச்சயம் நிறைய பேர் உருவாவார்கள். முன்னாள் மாணவர்கள் இந்த துறைக்கு நல்ல கருத்துகளை வழங்குங்கள். நாங்கள் அதை செயல்படுத்துகிறோம்" என்றார்.

கலைத் திருவிழா: பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடத்தப்பட்ட மாநில அளவிலான கலைத் திருவிழா மற்றும் மன்றப் போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவில், அமைச்சர்கள் மா.சுப்ரமணியன், பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ் ஆகியோர் தலைமை தாங்கினர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும் அவர்கள் வழங்கினர். முன்னதாக, மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்வில், அமைச்சர் அன்பில் மகேஸ் பேசும்போது, "மாணவர்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்த தயங்கக் கூடாது. உங்கள் திறன்களை அறிந்து மேம்படுத்தவே பள்ளிகளில் கலைத் திருவிழா போட்டிகள் நடத்தப்படுகின்றன" என்றார்.

## க்ரைம் கார்னர்

### குறுஞ்செய்தி மூலம் மோசடி: வின்கோ செயலி முடக்கம்



**சென்னை, ஜன.31:**

நிதி மோசடிக்கு சைபர் குற்றவாளிகளால் பயன்படுத்தப்பட்டதாக வந்த புகார்களையடுத்து, வின்கோ செயலியை மத்திய அரசு முடக்கியது.

ஆன்ட்ராய்ட் தொழில்நுட்பத்தில் செயல்படும் அந்தச் செயலி, கூகுள் பிளேஸ்டோரில் இருந்து கைப்பேசிகளில் பதிவிறக்கம் செய்யப்பட்டதும், கைப்பேசிகளிலிருந்து பயனர்களுக்குத் தெரியாமல், தாமாகவே மற்றவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பும். இது இணையவழிக் குற்றங்களுக்கு வழிவகுத்தது. இதன் மூலம் பயனர்களின் கைப்பேசிகளில் ஊடுருவி அந்தக் கைப்பேசிகளை இணையவழிக் குற்றவாளிகள் பயன்படுத்த இச்செயலி வழிவகுத்தது. இதுபோல ஒவ்வொரு நாளும் சுமார் 1.53 கோடி பேருக்கு குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டு வந்தன. இந்தக் குறுஞ்செய்திகளை நம்பி பலர் பணத்தை இழந்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு ஏராளமான புகார்கள் வந்தன. இதைத் தொடர்ந்து, அந்தச் செயலியை மத்திய உள்துறை அமைச்சகமும், அதன் கணினிவழி குற்றத்தடுப்பு பிரிவான இந்திய கணினிவழி குற்றத்தடுப்பு ஒருங்கிணைப்பு மையமும் முடக்கியுள்ளன. அத்துடன் அந்தச் செயலியுடன் தொடர்புடைய 4 டெலிகிராம் சேனல்கள் (1.53 லட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்டது), செயலியைப் பிரபலப்படுத்தும் வகையில் வெளியாகி இருந்த 50-க்கும் மேற்பட்ட யூ-டியூப் விடியோக்களையும் மத்திய உள்துறை அமைச்சகம் முடக்கியுள்ளது.

### 400 மீட்டர் பயணிக்க அமெரிக்க சுற்றுலா பயணியிடம் ரூ. 18 ஆயிரம் வசூலித்த டாக்சி டிரைவர் கைது

**மும்பை, பிப்.1:**

அமெரிக்காவை சேர்ந்த இளம்பெண் அர்ஜெண்டினா அரினோ. இவர் மராட்டிய மாநிலம் மும்பைக்கு சுற்றுலா வந்துள்ளார்.

கடந்த 12ம் தேதி மும்பை வந்த அரினோ விமான நிலையத்தில் இருந்து 400 மீட்டர் தொலைவில் நட்சத்திர ஓட்டலில் தங்க முன் பதிவு செய்துள்ளார். அதன்படி, மும்பை விமான நிலையத்தில் இருந்து ஒரு டாக்சியில் அந்த ஓட்டலுக்கு புறப்பட்டுள்ளார். வெளிநாட்டு பயணி என்பதால் அரினோவை ஏமாற்ற நினைத்த டாக்சி டிரைவர் ஓட்டலுக்கு நேர் வழியில் செல்லாமல் சுமார் 30 நிமிடங்கள் மாற்று வழியில் காரை இயக்கியுள்ளார்.

இறுதியில் ஓட்டலில் அரினோவை இறக்கி விட்ட டிரைவர், பயணத்திற்கான தொகையாக 18 ஆயிரம் ரூபாய் (200 அமெரிக்க டாலர்கள்) கேட்டுள்ளார்.

இதனை நம்பிய அரினோ டாக்சி டிரைவர் கேட்ட பணத்தை கொடுத்துள்ளார். பின்னர், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அரினோ தனது எக்ஸ் பக்கத்தில் இது குறித்து தெரிவித்து மும்பை போலீசை டாக் செய்துள்ளார்.

அரினோவில் டுவிட் வைரலான நிலையில் இது குறித்து விசாரணை நடத்திய மும்பை போலீசார் , திஷ்ராஜ் (வயது 50) என்ற டாக்சி டிரைவரை கைது செய்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### முதல் முறையாக ஆஸ்திரேலிய ஓபன் பட்டம் வெல்வாரா ரைபகினா?

**சென்னை, பிப்.1:**

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ் லாம் டென்னிஸ் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் தொட ரின் 114ஆவது சீசன் தற்போது இறு திக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், வியாழனன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் அரையிறுதி ஆட்டத்தில், தரவரிசையில் முத லிடத்தில் உள்ள பெலாரசின் சபலென்கா, தரவரிசையில் 12ஆவது இடத்தில் உள்ள உக்ரைனின் சுவிட் டோலினாவை 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி இறுதிக்கு முன்னே றினார். தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது அரையிறுதியில் தரவரிசையில் 5ஆவது இடத்தில் உள்ள கஜ கஸ்தானின் ரைபகினா, தரவரிசை யில் 6ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் பெகுலாவை 6-3, 7-6 (9-7) என்ற செட் கணக்கில் வீழ்த்தி, 2ஆவது முறையாக இறுதிக்கு முன்னேறினார். இந்நிலையில், சனியன்று நடை பெறும் இறுதி ஆட்டத்தில் பெலாரசின் சபலென்கா - கஜகஸ்தானின் ரைபகினா பலப்பரீட்சை நடத்துகின்றனர். 2 முறை (2023,2024) ஆஸ்திரேலிய ஓபன் பட்டம் வென்றுள்ள சபலென்கா 3ஆவது முறையாக கோப்பையை கைப்பற்றும் முனைப்பில் களமிறங்கு கிறார். அதே போல 2023ஆம் ஆண்டு (சபலென்காவிடம் தோல்வி) நிகழ்ந்தது போல முதல்முறையாக ஆஸ்திரேலிய ஓபன் பட்டம் வெல்லும் முனைப்பில் ரைபகினா களமிறங்கு கிறார். இருவரும் சாம்பியன் பட்டம் வெல்லும் முனைப்பில் களம் காண போராடுவார்கள் என்பதால் ஆட்டம் இந்த இறுதி மிக மிக பரபரப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருவேளை பாகிஸ்தான் அணி விலகினால் ஐஸ்லாந்து அணிக்கு டி20 உலகக்கோப்பையில் விளையாட வாய்ப்பு கிடைக்கும். இந்தியா மற்றும் இலங்கையில் 20 அணிகள் பங்கேற்கும் டி20 உலகக் கோப்பை தொடர் வருகிற 7-ந்தேதி தொடங்குவது குறிப்பிடத்தக்கது

### டி20 உலகக் கோப்பை: யுஏஇ அணி அறிவிப்பு



**சென்னை, பிப்.1:**

டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடரானது பிப்ரவரி 7-ம் தேதி துவங்கி மார்ச் 8-ம் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற இருக்கிறது. மொத்தம் 20 அணிகள் பங்கேற்று விளையாட இருக்கும் இந்த தொடரில் கோப்பையை கைப்பற்றப்போகும் அணி எது? என்பது குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.இந்த நிலையில், இந்த தொடருக்கான ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) அணி அறிவிக்கப்பட்டுள்ளது. கேப்டனாக முகமது வசீம் நியமிக்கப்பட்டுள்ளார். யுஏஇ அணி: முகமது வசீம் , அலிஷன் ஷரபு, ஆர்யன்ஷ் ஷர்மா, துருவ் பராஷர், ஹைதர் அலி, ஹர்ஷித் கௌஷிக், ஜுனைத் சித்திக், மயங்க் குமார், முஹம்மது அர்பான், முஹம்மது ஃபருக், முஹம்மது ஜவதுல்லா, முஹம்மது ஜோஹைப், ரோஹித் கான், சோஹைப் கான், சிம்ரன்ஜீத் சிங்.

# பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய மெட்ரோ ரயில் இடைநிலை சீரமைப்பு பணி நிறைவு

**சென்னை, பிப்.1:**

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து மெட்ரோ ரயில்களிலும் இடைநிலை சீரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அனைத்து மெட்ரோ ரயில்களும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் திட்டமிடப்பட்ட பராமரிப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு மெட்ரோ ரயிலும் மாதாந்திர காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டு சோதனைகள் மூலம் முழுவதுமாக ஆய்வு செய்யப்பட்டு பராமரிக்கப்படுவதுடன், தகுதிச் சான்றும் வழங்கப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு மெட்ரோ ரயிலும் ஒரு பெரிய அளவிலான இடைநிலை சீரமைப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

இந்த சீரமைப்புப் பணியின் போது, ரயில் முழுமையாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. சக்கரங்கள் மற்றும் சஸ்பென்ஷன் அமைப்புகள் உட்பட ரயிலின் அடிப்பகுதியில் உள்ள முக்கிய பாகங்கள் அகற்றப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, தேவைப்படும் இடங்களில் பழுதுபார்க்கப்பட்டு, மீண்டும் வண்ணம் பூசப்படுகின்றன. தேய்ந்துபோன பாகங்கள் மாற்றப்படுகின்றன.

மென்மையான பயணத்தை உறுதி செய்வதற்காக சக்கரங்கள் மறுவடிவமைப்பு செய்யப்படுகின்றன. மேலும் மறைந்திருக்கும் குறைபாடுகளைக் கண்டறியும் மேம்பட்ட முறைகளைப் பயன்படுத்தி அச்சுகள் சோதிக்கப்படுகின்றன. பிரேக்குகள் மின் சாதனங்கள் மற்றும் குளிரூட்டும் இயந்திரங்கள் போன்ற அமைப்புகள் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன.

பாகங்கள் மீண்டும் பொருத்தப்பட்ட பிறகு, ரயில் விரிவான பாதுகாப்பு மற்றும் செயல்திறன் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. இதில் பிரதான வழித்தடங்களில் வெவ்வேறு வேகங்களில் சோதனை ஓட்டங்கள் ஆகியவை அடங்கும்.

அனைத்து பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தரங்களையும் பூர்த்தி செய்த பின்னரே, தகுதிவாய்ந்த அதிகாரியால் அந்த ரயில் பயணிகள் சேவைக்கு உகந்தது எனச் சான்றளிக்கப்படுகிறது. அந்த வகையில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தனது முழு மெட்ரோ ரயில் தொகுதிக்கான திட்டமிடப்பட்ட சீரமைப்புப் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டபுள் இன்ஜின் மாநிலங்களில் வேகமான வளர்ச்சி: எல்.முருகன் பெருமிதம்

**சென்னை, பிப்.1:**

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி பாஜகவின் தேர்தல் அறிக்கையை தயாரிப்பதற்காக மக்களிடம் இருந்து கருத்து கேட்கும் இயக்கத்தை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் நேற்று தொடங்கி வைத்தார்.




தொடர்ந்து, மக்களிடம் இருந்து கருத்துகளைப் பெறுவதற்காக, 38 மாவட்டங்களுக்கும் பிரச்சார வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும், பொது மக்கள் தங்களது கருத்துகளை அளிப்பதற்கான விண்ணப்பங்களை பெறுவதற்கு 7878786060 என்ற செல்போன் எண் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த எண்ணில் பொதுமக்கள் மிஸ்டு கால் கொடுத்தால், அந்த எண்ணுக்கு வரும் லிங்க்கை கிளிக் செய்து, விண்ணப்பப்படிவத்தை பெற்று, அதை பூர்த்தி செய்து தேர்தல் அறிக்கை குழுவிடம் அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எல்.முருகன் பேசியதாவது: கடந்த 2021-ல் முதல்வர் ஸ்டாலின் கொடுத்த தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்த 500 வாக்குறுதிகளில் 90 சதவீதம் நிறைவேற்றவில்லை. மக்களை ஏமாற்றுகிற தேர்தல் அறிக்கையை தயாரிப்பது திமுக. மக்களுக்காக மக்கள் கொடுக்கின்ற அறிக்கையை நிறைவேற்றி கொடுப்பது பிரதமர் மோடி.

டபுள் இன்ஜின் அரசு எங்கெல்லாம் இருக்கிறதோ, அந்த மாநிலங்கள் எல்லாம் வேகமான வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றன. தென் மாநிலத்தில் முதல்முறையாக திருவனந்தபுரம் மாநகராட்சியைக் கைப்பற்றியிருக்கிறோம். அடுத்து சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றுவோம். தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை திமுகவுக்கு இல்லை. மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரம்மாண்ட மாநாட்டை பார்த்து திமுகவினருக்கு காய்ச்சல் வந்துவிட்டது. இவ்வாறு அவர் கூறினார். பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பேசும்போது, 'மக்களை மறந்துவிட்டு, குடும்பத்தின் நலனுக்காக மட்டுமே இன்று திமுக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. தனது மகன் உதயநிதியை முதல்வராக்குவதற்கு, தனது கட்சிக்காரர்களை அடக்கவே ஸ்டாலின் இரும்புக் கரத்தை பயன்படுத்தி கொண்டிருக்கிறார். திமுக ஆட்சிக்கு முடிவு காலமும், தமிழகத்துக்கு விடிவு காலமும் வந்துவிட்டது" என்றார். இந்நிகழ்ச்சியில், பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், மூத்த தலைவர் ஹெச் .ராஜா, மாநில துணைத் தலைவர்கள் கரு.நாகராஜன், டால்பின் ஸ்ரீதர், தேர்தல் அறிக்கை குழுவில் இடம் பெற்றுள்ள அர்ஜுனமூர்த்தி, ஏ.என்.எஸ்.பிரசாத் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திமுக கூட்டணியில் தடுமாற்றம்: அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கருத்து

**சென்னை, பிப்.1:**

திமுக கூட்டணியில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளதாக அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார். அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் 109 பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், சென்னை கேகே நகரில் நேற்று நடைபெற்றது.

இதில் கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது: நாட்டில் எத்தனையோ தலைவர்கள் இருந்தாலும் மக்களுக்காக வாழ்ந்த ஒரே தலைவர் எம்ஜிஆர். எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் வரலாறு படைத்த தலைவர்கள். இந்த பூமி உள்ளவரை அவரது புகழ் நிலைத்து நிற்கும்.

திமுக ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் நிறைவு பெற இருக்கிறது. அடுத்த மாதம் தேர்தல் அறிவித்து விடுவார்கள். ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தல் நடக்கும். திமுக ஆட்சிக்கு இன்னும் 2 மாதங்கள், 2 அமாவாசைகள் தான் இருக்கிறது. இந்நிலையில் புதிய புதிய திட்டங்களை அறிவிக்கிறார்கள், அடிக்கல் நாட்டுகிறார்கள். ஒரு மாதத்தில் திட்டங்களை நிறைவேற்ற முடியுமா?

அதிமுக பலமான கூட்டணி:



காங்கிரஸ் - திமுக கூட்டணியில் குழப்பமும், விரிசலும் வந்தாகி விட்டது. உதயநிதி, காங்கிரஸ் கை கொடுக்கும் என்றார். ஆனால் கை நழுவும் நிலையில் உள்ளது.

திமுக கூட்டணியில்தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. அதிமுக பலம் வாய்ந்த கூட்டணியை அமைத்துள்ளது. அதிமுக கூட்டணியில் பல கட்சிகள் வந்துள்ளன. இன்னும் சில கட்சிகள் வர உள்ளன.

திமுக ஆட்சியை எப்போது வீட்டுக்கு அனுப்புவது என மக்கள் தேர்தலை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர். இந்த தேர்தலில் நமது கூட்டணி 210 இடங்களில் வெல்லும். அதிமுக தனி பெரும் பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.

4 அதிகார மையங்கள்: திமுக அரசில் ஸ்டாலின், உதயநிதி, சபரீசன், துர்கா ஸ்டாலின் என 4 முதல்வர்கள் தமிழகத்தை ஆட்டிப் படைக்கின்றனர். தமிழகத்தை 4 அதிகார மையங்கள் ஆண்டு கொண்டிருக்கின்றன.

திமுகவினர் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.4 லட்சம் கோடி வரை கொள்ளை அடித்துள்ளனர். தேர்தலின்போது பல திமுக அமைச்சர்கள் பத்திரமாக இருக்க வேண்டிய இடத்தில் இருப்பார்கள்.

தமிழகத்தில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. 699 சிறுமிகள் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் இதைவிட மோசமான ஆட்சி இதுவரை நடந்ததில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

## வணிகச் செய்திகள்

### இந்தியாவுக்கு ஆண்டுதோறும் ரூ.91,000 கோடி கடன்: 5 ஆண்டுகளுக்கு அளிக்க உலக வங்கி உறுதி

**புதுடெல்லி, பிப்.1:**

புதிய நாட்டுடனான ஒத்துழைப்புத் திட்டம் என்ற பெயரில் உலக வங்கி குழுவும், இந்தியாவும் இணைந்து நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி இந்தியாவின் வளர்ச்சியை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கும், இந்தியாவை வளர்ந்த நாடாக முன்னிறுத்துவதற்கும் பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கித் தலைவர் அஜய் பங்கா தலைமையிலான குழுவினர் புது தில்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை வெள்ளிக்கிழமை சந்தித்து ஆலோசனை நடத்தினர். இது தொடர்பாக நிர்மலா சீதாராமன் 'எக்ஸ்' வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'தனியார் முதலீட்டுடன் இணைந்து அரசும் முதலீடு செய்யும்போது ஊரக, நகர்ப்புறங்களில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புடன் இணைந்து செயல்படுவது திட்டங்களை துரிதமாகவும், விரைவாகவும் செயல்படுத்த உதவிகரமாக இருக்கும். உலக வங்கியுடன் கைகோப்பது என்பது நிதி சார்ந்ததாக மட்டும் இல்லாமல் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவது, திட்டம் சார்ந்த அறிவுசார் கருத்துப் பகிர்வு, உலகின் சிறந்த நடைமுறைகளை அமல்படுத்துவது ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்' என்று கூறியுள்ளார். இது தொடர்பாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்தியாவுக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் ரூ.73,000 கோடி முதல் ரூ.91,000 கோடி வரை கடன் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இந்தியா உலகின் வளர்ச்சியில் முக்கிப் பங்கு வகிக்கும் நாடாக உள்ளது. இங்கு ஆண்டுதோறும் 1.2 கோடி இளைஞர்கள் புதிதாக வேலைவாய்ப்பு பெற முன்வருகிறார்கள். வேலைவாய்ப்புகளை அதிகம் உருவாக்கும் துறைகளில் தனியார் முதலீட்டை அதிகரிப்பது முக்கியமானது. இதன் மூலம் வளர்ச்சியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல முடியும்.

# மணிப்பூர் சட்டப் பேரவை முடக்கப்பட்டு விரைவில் ஓராண்டு நிறைவு! ஜனநாயக அரசு எப்போது அமைவது?

புதுடெல்லி, பிப்.1:

மணிப்பூர் மாநிலத்தில் மைத்தேயி மற்றும் குகி சமூகங்களுக்கு இடையே மாதக்கணக்கில் நடைபெற்ற மோதல்களில் 260}க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதையடுத்து அந்த மாநிலத்தில் கடந்த ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதி குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. அப்போது மாநில சட்டப் பேரவை முடக்கி வைக்கப்பட்டது.




மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டு அடுத்த மாதம் ஓராண்டு நிறைவடைய உள்ளது. இந்தச் சூழலில் அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நிறுவ மத்திய பாஜக அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. 60 உறுப்பினர்களைக் கொண்ட அந்த மாநில சட்டப் பேரவையின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு (2027) மார்ச் மாதம் முடிவடைய உள்ளது. மணிப்பூர் அரசியல் நிலவரம் தொடர்பாக பாஜகவைச் சேர்ந்த மைத்தேயி மற்றும் குகி சமூக எம்எல்ஏக்களுடன் அக்கட்சியின் வடகிழக்கு பிராந்திய ஒருங்கிணைப்பாளரான சம்பித் பத்ரா சில சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். இந்த இரு சமூகங்களையும் சேர்ந்த பாஜக எம்எல்ஏக்களை பாஜக தேசிய பொதுச் செயலாளர் (அமைப்பு) பி.எல்.சந்தோஷ், சம்பித் பத்ரா ஆகியோர் கடந்த ஆண்டு டிசம்பர் 14-ஆம் தேதி சந்தித்துப் பேசினர்.

இந்தக் கூட்டத்தில் மணிப்பூர் சட்டப் பேரவை தலைவர் டி.சத்யப்ரத சிங் மற்றும் முன்னாள் முதல்வர் என்.பிரேன் சிங் உள்பட 30}க்கும் மேற்பட்ட பாஜக எம்எல்ஏக்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பாஜகவைத் சேர்ந்த குகி சமூக எம்எல்ஏக்கள் 7 பேரில் நான்கு பேர் பங்கேற்றனர். தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த சமூகத்தைச் சேர்ந்த 3 எம்எல்ஏக்கள் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில், மணிப்பூரில் சட்டப் பேரவை முடக்கத்தை நீக்கிவிட்டு ஜனநாயக அரசு அமைக்கப்படுமா என்பது குறித்து பாஜகவிடம் இருந்து கருத்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை. அடுத்த சில வாரங்களில் அங்கு ஜனநாயக அரசு அமைக்கப்படாத நிலையில், மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிப்பதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரின்போது கொண்டுவரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மணிப்பூரில் கடந்த 2022-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலின்போது பாஜகவைச் சேர்ந்த 32 பேர் வெற்றி பெற்றனர். ஐக்கிய ஜனதா தளம் 6 இடங்களில் வெற்றி பெற்றது. அவர்களில் 5 பேர் பின்னர் பாஜகவில் இணைந்துவிட்டனர். எனவே தற்போது பாஜகவுக்கு 37 எம்எல்ஏக்கள் உள்ளனர்.

இவர்களைத் தவிர, தேசிய மக்கள் கட்சியைச் சேர்ந்த 6 பேரும், நாகா மக்கள் முன்னணியைச் சேர்ந்த 5 பேரும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 5 பேரும், குகி மக்கள் கூட்டணியைச் சேர்ந்த இருவரும், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த ஒருவரும், சுயேச்சைகள் மூவரும் எம்எல்ஏக்களாக உள்ளனர். ஒரு எம்எல்ஏ உயிரிழந்ததால் சட்டப் பேரவையில் ஒரு இடம் காலியாக உள்ளது. மணிப்பூரில் கடந்த 2023-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நிகழ்ந்த வன்முறையால் 260 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததைத் தொடர்ந்து அங்கு முதல்வராக இருந்த பிரேன் சிங் கடந்த ஆண்டு பிப்ரவரி 9}ஆம் தேதி தனது பதவியை ராஜிநாமா செய்தார். அதைத் தொடர்ந்து அந்த மாநிலத்தில் பிப்ரவரி 13-ஆம் தேதி குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. அதன் பிறகு மாநிலத்தில் அமைதியை ஏற்படுத்தவும் இயல்பு நிலையைக் கொண்டுவரவும் ஆளுநர் அஜய் குமார் பல்லா பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார்.

## திருப்பதி லட்டு: விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்படவில்லை! சிபிஐ குற்றப்பத்திரிகையில் தகவல்



திருமலை, பிப்.1:

ஆந்திரத்தில் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சியில் (2019-2024), திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டுகளை தயாரிக்க விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்பட்டதாக, கடந்த 2024-ஆம் ஆண்டு மாநில முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டினார்.

இந்த விவகாரம் தொடர்பாக சிபிஐ தலைமையிலான எஸ்ஐடி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 2024-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சிபிஐ-எஸ்ஐடி விசாரணையைத் தொடங்கியது.

கலப்படப் பொருள்கள்: 15 மாதங்கள் நடைபெற்ற இந்த விசாரணையை நிறைவு செய்து கடந்த 24-ஆம் தேதி நெல்லூர் நீதிமன்றத்தில் இறுதி குற்றப்பத்திரிகையை சிபிஐ-எஸ்ஐடி தாக்கல் செய்தது. அதில், 'பால் அல்லது வெண்ணெய் என பால் சார்ந்த பொருள்களுக்குப் பதிலாக தரம் குறைந்த நெய், பாமாயில் உள்ளிட்டவை மூலம் திருப்பதி லட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது ஆய்வகப் பரிசோதனையில் தெரியாமல் இருக்க உண்மையான நெய்யின் மணம், நிறத்தை பிரதிபலிக்கும் வகையில் அசிட்டிக் அமிலம், பீட்டா கரோட்டீன் உள்ளிட்ட சில ரசாயனங்களும், கலப்படப் பொருள்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட கலப்பட நெய்க்கு போலியான தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மோசடியில் திருப்பதி கோயிலை நிர்வகிக்கும் திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் 9 பேர், பால் பண்ணைத் துறை நிபுணர்கள் 5 பேர் உள்பட 36 பேர் ஈடுபட்டுள்ளனர்' எனத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்தக் குற்றப்பத்திரிகை குறித்த விரிவான தகவல்கள் வெள்ளிக்கிழமை வெளியாகின. அதில் திருப்பதி லட்டு தயாரிக்க விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்படவில்லை என சிபிஐ-எஸ்ஐடி உறுதிப்படுத்தியது தெரியவந்துள்ளது.

## 54.5 சதவீதத்தை எட்டிய நிதிப் பற்றாக்குறை!

புதுடெல்லி, பிப்.1:

நிகழ் நிதியாண்டுக்கான நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 4.4 சதவீதம் அல்லது ரூ.15.69 லட்சம் கோடியாக இருக்கும் என மத்திய அரசு கணித்திருந்தது. இந்நிலையில், 2025, டிசம்பர் மாத நிலவரப்படி நிர்ணயிக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையில் 54.5 சதவீதம் அல்லது ரூ.8.55 லட்சம் கோடியை எட்டியதாக மத்திய கணக்கு கட்டுப்பாட்டாளர் (சிஜிஏ) வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. நிகழ் நிதியாண்டின் ஏப்ரல்-டிசம்பர் காலகட்டத்தில் பெறப்பட்ட வரி வருவாய், மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட வரி பகிர்வு, மத்திய அரசின் செலவினங்கள் உள்பட பல்வேறு தரவுகள் அந்த அறிக்கையில் இடம்பெற்றன. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: நிகழ் நிதியாண்டுக்கான பட்ஜெட் கணிப்புகளில் 2025, டிசம்பர் வரை 72.2 சதவீதம் அல்லது ரூ.25.25 லட்சம் கோடியை வருவாயாக மத்திய அரசு பெற்றுள்ளது. இதில் வரி வருவாயாக ரூ.19.39 லட்சம் கோடி, வரி அல்லாத வருவாயாக ரூ.5.39 லட்சம் கோடி, கடன் அல்லாத மூலதன வருவாயாக ரூ.46,047 கோடி மத்திய அரசுக்கு கிடைத்துள்ளது. 2025, ஏப்ரல்-டிசம்பர் காலகட்டத்தில் மாநிலங்களுக்கு வரிப் பகிர்வாக ரூ.10.38 லட்சம் கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் இது ரூ.1.37 லட்சம் கோடி அதிகமாகும்.

## ரூ.40 ஆயிரம் கோடி வங்கி மோசடி வழக்கில் ரிலையன்ஸ் நிறுவன முன்னாள் தலைவர் கைது

புதுடெல்லி, பிப்.1:

பிரபல தொழிலதிபர் அனில் அம்பானியின், ரிலையன்ஸ் கம்யூனிகேசன்ஸ் மற்றும் அதன் குழும நிறுவனங்கள் வங்கிகளில் ரூ.40 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக கடன் மோசடி மற்றும் பண முறைகேட்டில் ஈடுபட்டதாக அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

வங்கிகளில் வாங்கிய கடனை திரும்ப செலுத்தாமல், நிதி திசை திருப்பல்களில் ஈடுபட்டதால் அது மோசடியாக வரையறுக்கப்படுகிறது. இதுகுறித்து அமலாக்கத்துறை மற்றும் சி.பி.ஐ. விசாரணை நடத்திவருகிறது.

இந்த நிலையில் ரிலையன்ஸ் குழுமத்தின் முன்னாள் தலைவரும், இயக்குனருமான புனித் கார்க்கை அமலாக்கத்துறையினர் நேற்று முன்தினம் காவலில் எடுத்து விசாரணை நடத்தினர். அவர் கைது செய்யப்பட்டதாக நேற்று அறிவித்த அமலாக்கத்துறை, அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தியது. அவரை 9 நாள் அமலாக்கத்துறை காவலில் வைத்து விசாரணை நடத்த கோர்ட்டு அனுமதித்து உத்தரவிட்டது. 2 நாட்களுக்கு முன்னதாக புனித் கார்க்கின் மனைவியின் பெயரில் உள்ள பங்குகள் மற்றும் பரஸ்பர நிதிகளை அமலாக்கத்துறை முடக்கியது. "புனித் கார்க், 2001 முதல் 2025 ஆண்டு வரை நீண்ட காலமாக ரிலையன்ஸ் கம்யூனிகேசன்ஸ் நிறுவனத்தில் மூத்த மேலாண்மை இயக்குநர் பதவி வகித்தபோது,மேற்கூறிய வங்கி மோசடியிலிருந்து பெறப்பட்ட வருமானத்தை கையகப்படுத்துதல், வைத்திருத்தல், மறைத்தல், பல அடுக்குகளாகப் பிரித்தல் மற்றும் சிதறடித்தல் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்," என்று அமலாக்கத்துறை குற்றம் சாட்டி உள்ளது.

## உ.பி.யில்: சிறுத்தை தாக்கி நான்கு வயது சிறுமி பலி

புதுடெல்லி, பிப்.1:



உத்தரப் பிரதேசத்தில் வீட்டின் முன் விளையாடிக்கொண்டிருந்த 4 வயது சிறுமி சிறுத்தை தாக்கி பலியான நிகழ்வு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம், நிஷாங்கர்கா மலைத்தொடரில் உள்ள ராம்பூர்வா கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்ட முகியா பண்ணை கிராமத்தில் வசிப்பவர் மனோஜ். இவரது மகள் அனுஷ்கா (4). இச்சிறுமி வியாழக்கிழமை மாலை தனது வீட்டிற்கு வெளியே உள்ள முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள்.

அப்போது அருகிலுள்ள கரும்புத் தோட்டத்தில் இருந்து வெளியே வந்த சிறுத்தை, சிறுமியைத் தாக்கி இழுத்துச் சென்றது.

குடும்ப உறுப்பினர்களும் கிராம மக்களும் சப்தமிட்டு சிறுத்தையை விரட்டினர். பின்னர் வீட்டிலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் குழந்தையைவிட்டுவிட்டு சிறுத்தை அருகே உள்ள புதர்களுக்குள் ஓடிவிட்டது. காயமடைந்த சிறுமி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டாள்.

ஆனால் வழியிலேயே சிறுமி பலியானாள். சிறுமியின் கழுத்து மற்றும் மூக்கில் காயங்கள் காணப்பட்டதாக குடும்ப உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

சிறுத்தை தாக்கியதால் சிறுமி பலியானதாக நிஷாங்கர்கா ரேஞ்ச் அதிகாரி சுரேந்திர ஸ்ரீவஸ்தவா தெரிவித்தார். வனத்துறை குழுவினர் இரவில் தாமதமாக சம்பவ இடத்தை ஆய்வு செய்தனர். சம்பத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கண்காணிப்புக்காக நான்கு குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் கிராம மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே போலீஸார் சிறுமியின் உடலை மீட்டு கூராய்வுக்கு அனுப்பி வைத்தனர். குடும்பத்தினருக்கு உடனடி நிதி உதவியாக ரூ.10,000 வழங்கப்பட்டுள்ளது.

## நவீன வாழ்க்கை, காற்று மாசுபாடு;டெல்லியில் இதய நோய்களால் இறப்பு அதிகரிப்பு

புதுடெல்லி, பிப்.1:

டெல்லியில் மாரடைப்பு மற்றும் பிற இதயம் தொடர்பான நோய்களால் ஏற்படும் இறப்புகள் அதிகரித்து வருகின்றன. 2024-ம் ஆண்டில் இதுபோன்ற இறப்புகளில் 50 சதவீதம் அதிகரித்துள்ளது. 2023-ம் ஆண்டில். டெல்லியில் இதய நோய்களால் ஏற்படும் இறப்புகள் 22,385 ஆக இருந்தன. இது 2024-ல் 1,84,539 ஆக அதிகரித்தது. டெல்லி அரசாங்கத்தின் சமீபத்திய அறிக்கையின்படி டெல்லியில் கடந்த சில ஆண்டுகளில் 3,20,957 பேர் மாரடைப்பு மற்றும் பிற இதய நோய்களால் இறந்துள்ளனர். இவற்றில் 108,872 பேர் 45-64 வயதுக்குட்பட்ட வர்கள் 82,048 பேர் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள். 25-44 வயதுக்குட்பட்டவர்களில் 46,129 பேர் இறந்துள்ளனர். 14,321 பேர் 14 வயதுக்குட்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது. பரம்பரை காரணிகள் இதய நோய்களை ஏற்படுத்தும் என்பது உண்மைதான் ஆனால் நவீன வாழ்க்கை முறை காரணமாக ஆபத்து அதிகரித்து வருகிறது. புகைபிடித்தல். தொலைக்காட்சிப் பழக்கம் உடல் செயல்பாடு இல்லாமை. அதிக மன அழுத்தம் தூக்கமின்மை காற்று மாசுபாடு இந்த காரணிகள் அனைத்தும் டெல்லியில் மாரடைப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றன என்று ஸ்ரீ பாலாஜி அதிரடி மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் அமர் சிங்கால் தெரிவித்துள்ளார்.

## டில்லியில் 2023ல் பெண்களிடையே நிகழ்ந்த தற்கொலைகளில் 40% இல்லத்தரசிகள்!

புதுடெல்லி, பிப்.1:



2023 ஆம் ஆண்டில், நகரில் பதிவு செய்யப்பட்ட 836 பெண் தற்கொலை இறப்புகளில், 455 (54.43 சதவீதம்) திருமணமான பெண்கள். மொத்த பெண் இறப்புகளில் 369 இல்லத்தரசிகள், அல்லது 44.13 சதவீதம் என்று தரவு காட்டுகிறது.

தொற்றுநோய் காலத்தில் நடமாட்டக் கட்டுப்பாடுகள், பொருளாதார நெருக்கடி மற்றும் நீண்டகால வீட்டு அடைப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட தொற்றுநோய் காலம் உள்பட, கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தப் போக்கு சீராக உள்ளது.

2022 ஆம் ஆண்டில், 859 பெண் தற்கொலை இறப்புகளில் 521 திருமணமான பெண்கள், 60.65 சதவீதம், இல்லத்தரசிகள் 387 இறப்புகள் அல்லது 45.05 சதவீதம். 2021 ஆம் ஆண்டில் கோவிட் இரண்டாம் அலையால் கணிசமாக பாதிக்கப்பட்ட ஆண்டு தற்கொலை செய்து கொண்ட 746 பெண்களில் 421 போ் திருமணமானவா்கள் 56.43 சதவீதம் மற்றும் 351 போ் இல்லத்தரசிகள் 47.05 சதவீதம்.

இதேபோல், 2020 ஆம் ஆண்டில், நீண்ட காலத்திற்கு ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டபோது, 895 பெண் தற்கொலை இறப்புகளில் 542 போ திருமணமான பெண்கள் 60.56 சதவீதம், அதே நேரத்தில் 410 போ இல்லத்தரசிகள் 45.81 சதவீதம். 2019 ஆம் ஆண்டில், தொற்றுநோய்க்கு முன்பு, 768 பெண் தற்கொலை இறப்புகளில் 400 போ திருமணமான பெண்கள் 52.08 சதவீதம் மற்றும் 305 போ இல்லத்தரசிகள் 39.71 சதவீதம்.

ஒட்டுமொத்தமாக, தில்லியில் தற்கொலை நிகழ்வு பெண்களை விட ஆண்களிடையே தொடா்ந்து அதிகமாக உள்ளது. 2023 ஆம் ஆண்டில், நகரில் பதிவான மொத்த 3,131 தற்கொலை இறப்புகளில், 2,295 போ ஆண்கள் மற்றும் 836 போ பெண்கள். 2022 ஆம் ஆண்டில், மொத்த தற்கொலைகளின் எண்ணிக்கை 3,417 ஆக இருந்தது, இதில் 2,558 ஆண்கள் மற்றும் 859 பெண்கள் அடங்குவா.

2019 மற்றும் 2023 க்கு இடையில், பெண்களில் தற்கொலை செய்து கொண்டவா்களில் அதிக எண்ணிக்கையிலானோா் இல்லத்தரசிகள் மற்றும் திருமணமான பெண்கள் பிரிவுகளில் உள்ளனா என்றும், ஆண்களில், வேலையில்லாதவா்கள் மற்றும் திருமணமான ஆண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனா என்றும் தரவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது, இது பொருளாதார மற்றும் குடும்பம் தொடா்பான அழுத்தங்களின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனா.

## மணிப்பூரில் 3 பயங்கரவாதிகள் கைது

இம்பால், பிப்.1:

மணிப்பூர் மாநிலத்தின் இம்பால் கிழக்கு மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட அமைப்புகளை சேர்ந்த பயங்கரவாதிகள் 3 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து வெடிபொருட்கள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சிறிய அளவிலான பீரங்கி, போதைபொருட்கள் உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட வெடிபொருட்களை இந்தியா-மியான்மர் எல்லையை ஒட்டிய வனப்பகுதியில் போலீசார் செயலிழக்க செய்தனர்.


## மேற்கு வங்கத்தில் 2 செவிலியர்களுக்கு நிபா வைரஸ் தொற்று உறுதி

கொல்கத்தா, பிப்.1:

மேற்கு வங்க மாநிலத்தின் புறநகர்ப் பகுதியில் தனியார் மருத்துவமனையில் பணியாற்றி வரும் இரண்டு செவிலியர்களுக்கு நிபா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது சமீபத்தில் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். அதாவது, தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்த 196 பேர் கண்காணிப்பில் உள்ளனர். வௌவால், பன்றி உள்ளிட்டவைகளால்தான் நிபா தொற்று மனிதர்களுக்கு பரவுகிறது. இந்தத் தொற்றால், காய்ச்சல், தலைவலி, மூளை வீக்கம், சுவாசப் பிரச்னைகள் போன்ற பாதிப்புகள் ஏற்படும். இந்தியாவில் நிபா வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், பயணக்கட்டுப்பாடுகளோ, வர்த்தகக் கட்டுப்பாடுகளோ ஏதும் விதிக்கத் தேவையில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குரங்கு காய்ச்சல்: தமிழக எல்லைகளில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த உத்தரவு

பெங்களூரு, பிப்.1:



கா்நாடகத்தில் குரங்கு காய்ச்சல் பாதிப்பு பரவி வரும் நிலையில், தமிழக எல்லையோர மாவட்டங்களில் மருத்துவக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

கா்நாடக எல்லையோர கிராமங்களில் காய்ச்சல், வயிற்றுப்போக்கு பாதிப்புகளை நாள்தோறும் கண்காணித்து பரிசோதனைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கியாசனூா் வன நோய் (கேஎஃப்டி) எனப்படும் குரங்கு காய்ச்சலுக்கு கா்நாடகத்தில் இதுவரை பலா் பாதிக்கப்பட்டுள்ளனா். பாதிக்கப்பட்டவா்களில் ஒருவா் உயிரிந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கியாசனூா் வனப் பகுயில் கடந்த 1957-இல் கண்டறியப்பட்ட வைரஸ் தொற்று மூலம் இந்த காய்ச்சல் பரவி வருகிறது.

ஆண்டுதோறும் 400 முதல் 500 போ் இந்த பாதிப்புக்கு உள்ளாகின்றனா். தொற்றுக்குள்ளான உண்ணிகளால் கடிக்கப்பட்ட குரங்குகள், கால்நடைகள் மூலமாக இந்த வகை வைரஸ் பரவுகிறது.

தொற்றால் உயிரிழந்த குரங்குகளிலிருந்தும் இந்தப் பாதிப்பு வேகமாக பரவுகிறது. காய்ச்சல், உடல் வலி, தலைவலி, வாந்தி, ஜீரண மண்டல பாதிப்புகள், ரத்தப்போக்கு ஆகியவை அதன் முக்கிய அறிகுறிகளாகும்.

இந்த நிலையில், கா்நாடகத்தையொட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் அத்தகைய பாதிப்பு பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையை பொது சுகாதாரத் துறை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, சம்பந்தப்பட்ட கிராமங்களில் காய்ச்சல், வயிற்றுப்போக்கு பாதிப்புகளைக் கண்டறிந்து பிசிஆா் மற்றும் ரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது. சேகரிக்கப்பட்ட மாதிரிகளை வைராலஜி ஆய்வகத்துக்கு பரிசோதனைக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 2027-க்குள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய உக்ரைன் தயாராகிவிடும்

**கீவ், பிப்.1:**

2027 ஆம் ஆண்டிற்குள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு உக்ரைன் தொழில்நுட்ப ரீதியாகத் தயாராகிவிடும். உறுப்பினர் தகுதிக்குத் தேவையான நடைமுறைகளை 2026 இறுதிக்குள் உக்ரைன் அமல்படுத்தி முடித்துவிடும் என்று அந்நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரி வித்துள்ளார். ரஷ்யாவுடனான போர் முடிந்த பிறகு உக்ரைனின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் இந்த இணைப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார். ஒரு தெளிவான காலக்கெடுவை ஐரோப்பா வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக கியூபாவில் பிரம்மாண்ட தீப்பந்த பேரணி



**ஹவானா, பிப்.1:**

அமெரிக்காவின் ஏகாதிபத்திய அச்சு றுத்தல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஆயிரக்கணக்கான கியூப இளைஞர்கள் ஹவானாவின் வீதிகளில் தீப்பந்தங்கள் ஏந்தி பிரம்மாண்டமான ஊர்வலத்தை நடத்தியுள்ளனர்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அறைகூவல் கியூப இளம் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் (UJC) செயலாளர் மெய்விஸ் எஸ்டீவெஸ் எச்செவர்ரியா, இந்த ஊர்வலத்தில் பேசிய தாவது: “அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் மற்றும் அச்சுறுத்தல்களால் எங்க ளை ஒருபோதும் வீழ்த்த முடியாது. இந்தத் தீப்பந்தங்கள் கியூப மக்களின் அசைக்க முடியாத மன உறுதியின் அடையாளம் என அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதி ரான கியூப மக்களின் உறுதியை வெளிப் படுத்தினர்.

மேலும் கடந்த ஜனவரி 3 அன்று வெனிசுலாவில் அமெரிக்க ராணுவத்தின் அத்துமீறிய தாக்குதலில் வீரமரணம் அடைந்த 32 கியூப வீரர்களுக்கு இந்த ஊர்வலத்தின் போது வீரவணக்கம் செலுத்தப்பட்டது. வரலாற்றுப் பேரணி சுமார் 73 ஆண்டுகளுக்கு முன் 1953 ஜனவரி 27 இல் பிடல் காஸ்ட்ரோ இளம் வயதில் வழக்கறிஞராக இருந்த போது கியூப பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து பாடிஸ்டாவின் ராணுவ ஆட்சி க்கு எதிராகவும், கியூபாவின் தேசத் தந்தை யான ஜோஸ் மார்டியின் நூற்றாண்டு விழா வைக் கொண்டாடவும் ஹவானாவில் முதல் முறையாக இப்பேரணியை ஒருங்கி ணைத்தார்.

ஜோஸ் மார்ட்டிக்கு அஞ்சலி செலுத்தும் பாரம்பரிய நிகழ்வாக இந்த பேரணி ஆண்டு தோறும் அவரது பிறந்த தினமான ஜனவரி 28 க்கு முந்தைய நாள் இரவு (ஜன.27) நடை பெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பொதுவான லட்சி யத்தோடு இணைந்து ஒரு மாபெரும் கொள்கை அலையாக ஹவானா பல் கலைக்கழகத்தின் வாயிலில் துவங்கும் இப்பேரணி ஸ்பானிய காலனித்துவ ஆட்சி க்கு எதிராகப் போராடியதற்காக இளம் வயதில் ஜோஸ் மார்ட்டி கடுங்காவல் தண்ட னை அனுபவித்த இடமான ஃபிராகுவா மார்ட்டியானாவில் முடியும்.

## 12,000 ஆசிரியர்கள் ஜெர்மனியில் வேலைநிறுத்தம்

ஜெர்மனியில் ஊதிய உயர்வு கோரி நாடு தழுவிய அளவில் சுமார் 12,000 ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணியாளர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜெர்மன் கல்விச் சங்கம் விடுத்த அழைப்பைத் தொடர்ந்து இந்த வேலைநிறுத்தம் நடை பெற்றது. ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணியாளர்களுக்கு 7 சதவீத ஊதிய உயர்வு, அதாவது ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் 300 யூரோக்கள் ( 26,000 ரூபாய்) வழங்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இந்த கோரிக்கையை அரசு நிறைவேற்ற முடியாதென மறுத்துள்ளது. எனினும் அடுத்தகட்ட ஊதியப் பேச்சுவார்த்தை பிப்ரவரி 11 முதல் 13 வரை நடைபெறவுள்ளது.

# ‘உலகில் அதிகாரப் பரவல்’: இந்தியா - இயூ ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டிய ஐ.நா. பொதுச் செயலர்

**நியூயார்க், பிப்.1:**



உலகில் அதிகாரப் பரவலை ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்திய ஐ.நா.பொதுச் செயலா அன்டோனியோ குட்டெரெஸ், நாடுகளுக்கு இடையே நெருக்கமான உறவு இருப்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தியா-ஐரோப்பிய யூனியன் (இயூ) தடையற்ற வா்த்தக ஒப்பந்தத்தைச்சுட்டிக்காட்டினாா.

இதுதொடா்பாக அமெரிக்காவின் நியூயாா்க் நகரில் அவா் செய்தியாளா்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது: தற்போது உலகில் மிகவும் சக்திவாய்ந்த நாடாக அமெரிக்கா உள்ளது. அதேவேளையில் அமெரிக்காவை மையமாகக் கொண்டு ஒரு துருவம், சீனாவை மையமாகக் கொண்டு மற்றொரு துருவம் என உலகில் இரு துருவங்கள் உள்ளன.

ஒரு விஷயம் எப்படி நடைபெற வேண்டும் என்பதை முடிவு செய்வதற்கான முன்னெடுப்பை ஒரேயொரு சக்திவாய்ந்த நாடு மேற்கொள்வதால் மட்டும், உலகில் உள்ள பிரச்னைகளுக்கு தீா்வு கண்டுவிட முடியாது.

இரு சக்திவாய்ந்த நாடுகளாலும் (அமெரிக்கா, சீனாவை மறைமுகமாக குறிப்பிட்டு) அது முடியாது. அவ்வாறு நடந்தால் அது உலகில் போட்டித்தன்மை கொண்ட பிரிவுகளை உருவாக்கும்.

வளா்ச்சியைப் பொதுவான அம்சமாக வைத்து ஸ்திரமான, நீடித்து நிலைக்கும் அமைதியான உலகம் வேண்டுமென்றால், நாம் அதிகாரப் பரவலை ஆதரிக்க வேண்டும். பல்வேறு நாடுகளுக்கு இடையே நெருக்கமான உறவு இருப்பதை ஆதரிக்க வேண்டும்.

இதற்குச் சாதகமாக இந்தியா-ஐரோப்பிய யூனியன், இந்தோனேசியா-ஐரோப்பிய யூனியன், மொ்கோசா் கூட்டமைப்பு நாடுகள்-ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வா்த்தக ஒப்பந்தங்கள் பெரும் எதிா்பாா்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்தாா்.

## காங்கோ: கனிம சுரங்கம் இடிந்து விபத்து - 200 பேர் பலி

**பிராசவில்லி, பிப்.1:**



மத்திய ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு காங்கோ குடியரசு. இந்நாட்டின் பல்வேறு மாகாணங்களில் கனிம சுரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதில் சில சட்டவிரோதமாக செயல்பட்டு வருகின்றன. மேலும், காங்கோவின் பல்வேறு பகுதிகள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாடில் உள்ளன. அப்பகுதியில் உள்ள சுரங்கங்களில் இருந்து கனிமங்களை வெட்டி எடுத்து கிளர்ச்சியாளர்கள் பிற நாடுகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் வடக்கு கிவு மாகாணத்தில் கொபா நகரில் கனிம சுரங்கம் அமைந்துள்ளது. இந்த சுரங்கத்தில் நேற்று தொழிலாளர்கள் பலரும் வேலை செய்துகொண்டிருந்தனர். அப்போது சுரங்கம் இடிந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள், அருகில் இருந்தவர்கள் என நூற்றுக்கணக்கானோர் மண்ணுக்குள் புதைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் மண்ணுக்குள் புதைந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் 200 பேர் உயிரிழந்தனர்.

மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

சுரங்கம் இடிந்த சம்பவத்தில் மேலும் பலர் மண்ணுக்குள் புதைந்துள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

## ஈகுவேடார்: எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பயங்கர தீ விபத்து

**குவிட்டோ, பிப்.1:**

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈகுவேடாரில் உள்ள எஸ்மெரால்டஸ் நகரில், பசிபிக் கடற்கரை அருகே அந்நாட்டின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருகிறது. இந்த சுத்திகரிப்பு நிலையம் ஈகுவேடாரின் தேசிய எண்ணெய் நிறுவனமான பெட்ரோ ஈகுவேடாருக்கு சொந்தமானதாகும்.

இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் நேற்று எதிர்பாராத விதமாக பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து சுத்திகரிப்பு பணிகள் நிறுத்தப்பட்டு, அங்கு பணியில் இருந்த ஊழியர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து தீயணைப்பு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட நிலையில், இந்த தீ விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் கடந்த 8 மாதங்களுக்குள் நடந்த 2-வது தீ விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது.

## கலிபோர்னியா நகர சபைக்கு ‘பேட்மேன்’ உடை அணிந்து வந்து புகார் கூறிய நபரால் பரபரப்பு

**வாஷிங்டன், பிப்.1:**

கலிபோர்னியாவில் உள்ள சாண்டா கிளாரா நகர சபை கூட்டத்தில் பொதுமக்களிடம் கருத்துக் கேட்பு நடைபெற்றது. அப்போது அங்கு ‘பேட்மேன்’ கதாபாத்திரத்தின் உடையை அணிந்து கொண்டு ஒரு நபர் உள்ளே நுழைந்தார். அவர் தனது கருத்துகளை நகர சபை அதிகாரிகளிடம் கூற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதையடுத்து, அவரை பேசுவதற்கு அனுமதித்தனர்.

மேலும் அந்த நபர் தனது உண்மையான பெயரை கூறாமல், ‘பேட்மேன்’ என்றே தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் பேசிய அவர், “நாம் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறோம்? மத்திய அரசு நம் மீது ஏறி மிதிக்க நாம் அனுமதித்துவிட்டோம். இதனால் நாள்தோறும் வீதிகளில் மக்கள் செத்துக் கொண்டிருக்கி றார்கள்.

எந்த நகர வளங்களும் குடியேற்றம் மற்றும் அமலாக்கப் பிரிவு அதிகாரிகளுக்கு செல்லாது என்பதையும், அவர்களுக்கு எந்த ஒத்துழைப்பும் வழங்கப்படாது என்பதையும் நீங்கள் உறுதி செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கைக்கு சாண்டா கிளாரா நகர சபை நிர்வாகம் உடனடியாக எந்த பதிலையும் அளிக்கவில்லை. அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும் குடியேற்றம் மற்றும் சுங்க அமலாக்கப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் நிலவி வருகின்றன. அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட 2 நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ள நிலையில், பொதுமக்கள் தொடர்ந்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## நிதியுதவி கோரி தலைகுனிந்து நின்றோம்: பாக். பிரதமர்

**இஸ்லாமாபாத், பிப்.1:**

பாகிஸ்தானுக்காக நிதியுதவிகோரி மற்றைய நாடுகளுக்குச் சென்றதாக பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷரீஃப் ஒப்புக் கொண்டுள்ளார்.

பாகிஸ்தானின் முன்னணி வணிகர்களிடம் அந்நாட்டு பிரதமர் ஷாபாஸ் ஷரீஃப் பேசுகையில், “பாகிஸ்தானின் தற்போதைய நிலைமை என்னவென்றால், நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால், இதில் கடன்களும் அடங்கும்.

கடன் வாங்குவதற்காகச் சென்று தலை குனிந்ததும் உங்களுக்குத் தெரியும்.

நானும் ராணுவத் தளபதி அசிம் முனீரும் உலகம் முழுவதும் சென்று, பணத்துக்காக பிச்சை எடுப்பதற்கு வெட்கப்படுகிறோம். கடன் வாங்குவது எங்கள் சுயமரியாதைக்கு மிகப்பெரிய சுமை. எங்கள் தலைகள் வெட்கத்தால் தலை குனிகின்றன. நாட்டை நிலைப்படுத்த கடுமையான கொள்கைகளைப் பயன்படுத்திய பிறகு, பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் திட்டத்திற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பாகிஸ்தான் தீவிரமாக விவாதித்து வரும் நேரத்தில் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன” என்று தெரிவித்தார்

## அதிகாரம் யாரிடம்? 3-வது இடத்தில் அமெரிக்கா! எலான் மஸ்க் கருத்தால் குழப்பம்!

உலகளவில் அதிகாரத்தின் சமநிலை மாறிவருவதாக எலான் மஸ்க் கூறியிருப்பது சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியுள்ளது.

உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முக்கிய பங்காற்றுபவர்களாக சீனா (26.6%) முதலிடத்தில் இருப்பதாக சமீபத்திய ஆய்வறிக்கை (WORLD OF STASTICS - வேர்ல்ட் ஆஃப் ஸ்டாஸ்டிக்ஸ்) கூறுகிறது. தொடர்ந்து, இரண்டாவது இடத்தில் இந்தியாவும் (17.0%), மூன்றாவது இடத்தில் அமெரிக்காவும் (9.9%) உள்ளன. இவர்களுக்கு அடுத்தபடியாக, இந்தோனேசியா (3.8%), துருக்கி (2.2%), சௌதி அரேபியா (1.7%), வியத்நாம் (1.6%), நைஜீரியா (1.5%), பிரேசில் (1.5%), Gஜெர்மனியும் (0.9%) உள்ளன.

இவற்றில் சீனாவும் இந்தியாவும் சேர்ந்தே உலகளாவிய வளர்ச்சியில் 43.6 சதவிகிதம் பங்களிக்கின்றன.

இந்த வளர்ச்சியைக் குறிப்பிட்டுள்ள டெஸ்லா நிறுவனரும் உலக பணக்காரர்களில் முதலிடத்தில் உள்ளவருமான அமெரிக்காவை சேர்ந்த எலான் மஸ்க், அதிகாரத்தின் சமநிலை மாறி வருகிறது என்று கூறியுள்ளார். இவரின் இந்தக் கருத்து, சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியுள்ளது. இந்தியாவும் சீனாவும் முன்னேறியிருப்பதை அவர் குறிப்பிடுகிறாரா அல்லது அமெரிக்கா பின்தங்கியதா குறிப்பிடுகிறாரா என்ற கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

## காஸாவில் தாக்குதல்களைத் தொடரும் இஸ்ரேல்.. பாலஸ்தீன மக்கள் 12 பேர் பலி!



**காசா, பிப்.1:**

காஸாவில் இஸ்ரேல் சனிக்கிழமை(ஜன. 31) மேற்கொண்ட தீவிர தாக்குதல்களில் பாலஸ்தீன மக்கள் 12 பேர் கொல்லப்பட்டனர்.

காஸாவில் உள்ள பாலஸ்தீனர்கள் எல்லையைக் கடந்து செல்ல ஏதுவாக, காஸா-எகிப்து இடையிலான ராஃபா எல்லைப்பாதை இன்று (பிப். 1) திறக்கப்படுவதாக இஸ்ரேல் தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், காஸாவில் இன்று அதிகாலையில் தாக்குதல்கள் தொடர்ந்தன. இந்தத் தாகுதல்களில் 12 பேர் கொல்லப்பட்டனர், மேலும், காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக அங்குள்ள மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த 2024, மே மாதத்தில் இஸ்ரேல் படைகள் இந்த எல்லையைக் கைப்பற்றிய பிறகு, சுமார் ஒன்றரை ஆண்டுகள் கழித்து தற்போதுதான் ராஃபா வழித்தடம் மக்கள் போக்குவரத்துக்காகத் திறக்கப்படுகிறது. நாளொன்றுக்கு சுமார் 150 பேரை மட்டுமே அனுமதிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக்வும் தெரிவிகப்பட்டுள்ளது.

# இந்திய தலைவர்களின் பரிசுப் பட்டியல்: அமெரிக்கா வெளியீடு

**வாஷிங்டன், பிப்.1:**



அமெரிக்கதலைவா்களுக்கு இந்திய தலைவா்கள் அளித்த பரிசுகளின் பட்டியலை அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க தலைவா்களுக்கு பிரதமா் மோடி மற்றும் பிற இந்திய அரசு அதிகாரிகள் அளித்த பரிசுகளின் விவரங்களை அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ளது.

2024-ஆம் ஆண்டுக்கான அந்தப் பட்டியலில், குறைந்தபட்சம் 480 டாலருக்கும் (சுமாா் ரூ.44,000) அதிகமான மதிப்பு கொண்ட பரிசுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தப்பட்டியலின்படி, 2023-ஆம் ஆண்டு அமெரிக்காவின் அப்போதைய அதிபா் ஜோ பைடனுக்கு மரப்பெட்டி, கழுத்தில் அணியும் சால்வை, ஜாடியுடன் கூடிய குங்குமப்பூ, தேநீா் பெட்டி ஆகியவற்றைப் பிரதமா் மோடி பரிசளித்தாா். அவற்றின் மதிப்பு 562 டாலா் (சுமாா் ரூ.51,000).

2024-ஆம் ஆண்டு 7,750 டாலா் (சுமாா் ரூ.7 லட்சம்) மதிப்பு கொண்ட வெள்ளி உலோக ரயில் செட்டை பைடனுக்கு மோடி பரிசாக வழங்கினாா்.

2024-ஆம் ஆண்டு அந்நாட்டின் அப்போதைய துணை அதிபா் கமலா ஹாரிஸுக்கு 1,330 டாலா் (சுமாா் ரூ.1.22 லட்சம்) மதிப்பு கொண்ட கிருஷ்ண பரமாத்வாவின் ராசலீலா வெள்ளிப் பெட்டியைப் பிரதமா் மோடி வழங்கினாா்.

அதே ஆண்டு ஜோ பைடனின் மனைவி ஜில் பைடனுக்கு 2,969 டாலா் (சுமாா் ரூ.2.72 லட்சம்) மதிப்பிலான பஷ்மினா சால்வையை பிரதமா் மோடி பரிசளித்தாா்.

2022-ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க பாதுகாப்பு அமைச்சா் லாய்ட் ஆஸ்டினுக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சா் ராஜ்நாத் சிங் வெண்கல நடராஜா் சிலையை பரிசளித்தாா். அதன் மதிப்பு 3,700 டாலா் (சுமாா் ரூ.3.40 லட்சம்).

2024-ஆம் ஆண்டு அமெரிக்க அதிபா் பைடனுக்கு தேசிய பாதுகாப்பு விவகார உதவியாளராக இருந்த ஜேக் சல்லிவனுக்கு 599 டாலா் மதிப்பிலான காஷ்மீா் பஷ்மினா சால்வையை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகா் அஜீத் தோவல் பரிசாக வழங்கியுள்ளாா்.